டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்



# அறநெறி

# அறநெறி

முனைவர் சி. பாலசுப்பிரமணியன்
தமிழ்ப் பேராசிரியர்

நறுமலர்ப் பதிப்பகம்
சென்னை-600029.

முதற் பதிப்பு : டிசம்பர், 1991

விலை : 14-00
(ரூபாய் பதினான்கு)

விற்பனை உரிமை
பாரி நிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை-108.

அச்சிட்டோர் :
மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-600 014.

# முன்னுரை

பழந்தமிழ் இலக்கியங்களில் 'அறம்' என்ற சொல் பெருக வழங்குகின்றது. நெல்லிக்காயைக் குறிப்பிடவரும் குறுந்தொகைப் புலவர் 'அறந் தலைப்பட்ட நெல்லியம் பசுங்காய்' என்கிறார். 'அறநெறி முதற்றே அரசின் கொற்றம்' என்பது புறநானூறு. 'அறம் பாடிற்றே ஆயிழை கணவ என்று' 'அறம்' என்ற சொல் திருக்குறளிற்கு அந் நாளில் வழங்கப்பட்டிருக்குமோ என்ற ஆய்வை எழுப்பும் வகையில் புறநானூறு கூறுகின்றது.

சுருங்கச் சொன்னால் பழந்தமிழர் அற நாட்டமுடையவர்கள். ஊழிபெயரினும் தாம்பெயரா ராதலின் சான்றோர்கள் ஆவர். 'அறநெறி' பிறநெறி யினும் போற்றப்பட்டது என்பது சங்க இலக்கியங் களும் அறநெறி இலக்கியங்களும் காட்டும் உண்மை யாகும்.

இந்நூலுள் இடம்பெறும் பதினான்கு கட்டுரை களும் வானொலி, தொலைக்காட்சி முதலியன வற்றில் பேசப்பட்டவை; வாழும் நெறியை வகையுற உணர்த்தி நிற்பவை. எனவே எப்படியாவது வாழ வேண்டும் என்றில்லாமல், இப்படித்தான் வாழ வேண்டும் என்று வற்புறுத்தும் இக் கட்டுரைகள் தமிழ்ச் சமுதாயம் பின்பற்றத்தகும் செந்நெறி, நன்னெறி எனும் கருத்தில் இந் நூல் எழுந்துள்ளது.

—சி. பா.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | புத்தாண்டுச் சிந்தனைகள் | 5 |
| 2. | அறநெறி | 17 |
| 3. | ஓதுவது ஒழியேல் | 29 |
| 4. | செய்ந்நன்றியறிதல் | 40 |
| 5. | நடுவுநிலைமை | 44 |
| 6. | அடக்கமுடைமை | 48 |
| 7. | நாலடியார் நல்லுரை | 52 |
| 8. | வாழ்வியல் நெறி | 64 |
| 9. | சான்றோர் நெறி | 74 |
| 10. | நல்லோர் நவின்ற நன்னெறி | 87 |
| 11. | விவேகானந்தர் சிந்தனைகள் | 99 |

# 1. புத்தாண்டுச் சிந்தனைகள்

## I

நாம் வாழ்வதற்கு மூன்று நன்றாக இருக்கவேண்டும் என்று கூறுகின்றார் டாக்டர் மு.வரதராசனார் ஒன்று. நம் உள்ளம். அது நன்றாக இருப்பதற்காகவே அறநெறியும் கடவுள் வழிபாடும் அமைந்தன. மற்றொன்று உடம்பு. அது நன்றாக இருப்பதற்கு நல்ல உணவும் உடையும் தொழிலும் மருந்தும் வேண்டும். மூன்றாவது சுற்றுப்புறம். அது நன்றாக இருப்பதற்கு முன்னோர்கள் சில கட்டுப்பாடு கள் ஏற்படுத்தினார்கள். இன்று சுற்றுப்புறமும் நன்றாக இல்லாத காரணத்தால்தான், பொதுவாக வாழ்க்கையில் அமைதியும் இன்பமும் இல்லை என்பது பேராசிரியர் மு.வ. அவர்களின் கருத்தாகும். அதனால்தான் அவர், 'யாராவது ஒரு பெரியவரிடத்திலாவது ஒரு சிறந்த புத்தகத்திலாவது நம்பிக்கை வைத்து மனத்தைக் கொடுத் திருக்க வேண்டும், அல்லது ஒத்த உரிமையோடு யாரிட மாவது திறந்த மனத்தோடு பழகியிருக்க வேண்டும்' என்று கூறுவர்.

தனி மனிதன் இன்புற வேண்டுமானால் சமுதாயம் நன்றாக அமைந்திருக்க வேண்டும். சமுதாயம் என்ற சொல்லே ஆறறிவு படைத்த மக்களினத்தோடு பிணைந்து நிற்கும் ஒன்று. கூடி வாழ வழி அமைக்கும் முறை சமுதாய அடிப்படை. மனிதனே சமூகத்தின் உயிர்நாடி.

இன்று நம் கண்முன்னால் நடைபெறுகிற வாழ்க்கை முழுதும், நம் முன்னோர்களின் உள்ளங்களில் பிறந்த எண்ணங்களின் விளைவேயன்றி வேறல்ல!

ஒரு புதிய இசை, ஒரு புதிய சிந்தனை, ஒரு புதிய கவிதை, ஒரு புதிய ஓவியம் முதலில் கலைஞனின் சிந்தனை யில் உதித்துப் பின்னரே புற உலகில் அடியெடுத்து வைக்கும்! புதிய ஆண்டும் அவ்வாறே!

நம்முடைய அரசியல் நெறிகள், சமுதாய ஒழுக்கக் கோட்பாடுகள், பொருளாதார அமைப்புகள், நம் பண்பாட்டுக் கோலங்கள், நாம் உண்ணும் உணவு, உடுக்கும் உடை, அணியும் அணிகலன்கள்—யாவுமே பன்னெடுங்காலமாக முன்னோர் வகுத்துத்தந்து சென்றவையே! ஒவ்வொரு காலத்திலும் அவற்றில் சிற்சில மாறுதல்களை நாம் செய்திருக்கிறோம் அவ்வளவுதான்![1]

மனித குலத்தின் ஒப்பற்ற பெரியோர்கள் எங்கும் போய்விடவில்லை. கருத்துகளாகவும் நிறுவனங்களாகவும் நடையுடை பாவனைகளாகவும் உயிர்த்தன்மை—நிலைத் தன்மை பெற்று நம்முடனேயே நிலவுகிறார்கள் எனலாம். அவர்களின் நிறைவேறாத கனவுகளையும், முழுமை யடையாத முயற்சிகளையும் அவர்கள் நூல்கள்வாயிலாக உயில் சாசனமாக விட்டுச் சென்றுள்ளமையை அறிந்து செயல்படுவோம். வாழ்க்கைப் பயணத்தின் மேடுபள்ளங் களையும் வெற்றி தோல்விகளையும் நன்குணர்ந்த அவர் களுடைய அனுபவங்கள் நமக்கும் ஒரு படிப்பினையாக அமைய முடியும்.

---

1. துறைவன், வாழ்வியல் சிந்தனைகள், ப. 92.

**மனிதநேயமே பண்பாட்டின் உயிர்நாடி**

நமக்கென்று ஓர் ஈடுபாடு, ஆர்வம் இருக்கின்றது. அந்தத் துறையில் ஆழ்ந்த கல்வியும் பயிற்சியும் பெற்று சிறப்பு வல்லுநர் ஆகலாம். துறையறிவோடுகூட உலகியல் அறிவு முழுமைபெறவும் மற்றவர்களோடு கலந்துபேசி உள்ளம் மகிழவும் பழகிக்கொள்ளவேண்டும். இல்லையேல் இந்தப் பெரிய உலகம், பட்டப்பகலிலும் ஒரே இருட்டாகத் தோன்றும். அக் கருத்தைத்தான் செந்நாப் புலவராம் திருவள்ளுவர்.

**'நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன்று இருள்'** (குறள். 999)

என வலியுறுத்துகின்றார்.

'சமுதாய நல்லொழுக்கம் சீர்குலைந்துவிட்டது, நடுவுநிலைமை, நியாய உணர்வு, நீதிநெறி, நாவடக்கம் எல்லாம் தேய்ந்து மாய்ந்துக் கிடக்கின்றன! என்று பன்னிப் பன்னிப் பேசுவதாலோ, எழுதுவதாலோ. எதிர்பார்க்கும் பயன் பெரிதும் விளைந்துவிடாது, நடக்கும் சாலையிலே ஒருவருக்கு விபத்து நடந்து வீழ்ந்து கிடக்கும்போது எரிகிற வீட்டில் அகப்பட்டது இலாபம் எனச் சுருட்டிக் கொண்டு ஓடும் பான்மையில், அருகே சிதறிக் கிடப்பதைக் கவர்ந்துகொண்டு நடக்க முயலும் விட்டேற்றி மனப்பான்மை மாறத்தான் வேண்டும். இது சமுதாயச் சீர்குலைவு; மனிதநேயச் சிதைவு; ஒளிமயமான ஒரு நல்ல சமுதாயம் எதிர்காலத்தில் மலர நம்மால் ஆன வகையில் வாழ்ந்தே தீருவது என்று முடிவெடுத்து வாழத் தலைப்பட இன்றைய நாளையே தொடக்க நாளாகக் கொள்ளலாம். கண்டும்காணாமல் போகின்ற போக்கு எல்லாநிலைகளிலும் ஏற்புடையதன்று.

## கல்வி

மனிதனை உண்மையான மனிதனாக வாழக் கற்றுக் கொடுப்பது கல்வி. கல்விப் பயிற்சியே மனிதனை நிமிர்ந்து நிற்கச் செய்யும் மந்திரச் செயலாகும். ஒரு தனி மனிதனுக்குக் கல்வியறிவு மிகப் பயன்படும். அவன் வழிச் சமுதாய மறுமலர்ச்சி தழைக்கும். கல்வி, கேள்வி, அறிவுடைமை இம்மூன்றும் தொடர்நிலைப் பயிற்சி யாவன. இன்று நம் நாடு வளரவேண்டியவற்றுள் ஒன்று அறிவியற்கலை. தமிழ்த்தென்றல் திரு. வி. க. அவர்கள் 'தமிழ்க்கலை'யில் இதுபற்றிச் சிறக்கப் பேசுகின்றார். அதில் அவர் அறிவியலை இலக்கியக் கலையோடும் வாழ்வியலோடும் இணைத்துத் தொடர்புபடுத்துகின்றார்.

உலகப் பேரறிஞர்கள் பலர், மனித நேயத்தை அறிவியல் கண்கொண்டு பேசி அதுவே வழியென்று வற்புறுத்தியுள்ளனர். மனித நேயத்தை வளர்ப் பதற்குக் கற்கும் கல்வி மிகப் பயன்படும். இலக்கியத்தின் இலக்கும் அதுவே; இசையின் குறிக்கோளும் மனித நேயமின்றி வேறில்லை என்பர் அறிஞர். ஆகவே கல்வி மூலம் மனித நேயத்தை அறிமுகப்படுத்திப் பரவச் செய்வது இன்றைய உடனடித்தேவைகளுள் தலையாயதா கின்றது.

## வாழ்க்கை நீதிகள்

வளரும் இளம் செடிக்கு உரம் ஊட்டிக் களை களைந்து நீர்பாய்ச்சி காவல் செய்தால் கதிரவன் ஒளியின் துணையுடன் அப்பயிர் நன்கு செழித்து வளரும். இம்முறையில் இளம் நெஞ்சில் உயரிய கருத்துகளை எளிய சொற்களால் புகுத்தி, அரிய வாழ்க்கைத் தத்துவங்களை வெளிப்படுத்திய கவிமணி தேசிக விநாயகம் அவர்களை நினைவுகூர வேண்டும். அவரது 'வாழ்க்கைத் தத்துவங்

கள்' என்ற தலைப்பமைந்த கவிதையில், 'நாமே நமக்குத் துணையானால், நாடும் பொருளும் நற்புகழும், தாமே நம்மைத் தேடிவரும்' என்றும், 'நெஞ்சிற் கருணையும் நேயமும் விஞ்சும் பொறுமையும் கொண்டவர்க்கு வெல்லும் படைகள் வேறு வேண்டா' என்றும், 'உள்ளம் பொருந்தி ஊக்கம் பெருக உழைத்தால் தடைகள் பொடியாகிப் பள்ளம் உயர்மேடாகும்' என்றும் கூறுவதைக் கண்டு தெளியலாம்.

**நிலையாமை**

நாள் என்பது ஒரு காலவரையறை போல் தோன்றுகின்றது. அதனால் ஒவ்வொரு நாளும் கழிவதைக் கண்டு பலரும் மகிழ்கின்றார்கள். நாள் என்பது ஒரு காலவரையறை போல் காட்டினாலும், அந்த வரையறை முடிவதற்குள் செய்யத்தக்க நல்வினை எல்லாம் விரைந்து செய்ய வேண்டும். வாழ்நாள் உள்ளபோதே பயனுள்ளவற்றை எண்ணி அறத்தைப் போற்ற வேண்டும். உயிர் உடம்பில் வாழும் இயல்பை உணர்ந்தால் இந்த அறநினைவு மாறாது. விழிப்பு உள்ளபோது கடமைகளைச் செய்து முடிப்பதுபோல், வாழ்வு உள்ளபோதே அறத்தைப்போற்றி உயரவேண்டும்.

**துறவு**

அருளுணர்வு மிகுந்து தன்னலம் தேய்ந்து அழிந்த பின், வாழ்க்கையில் பற்று எல்லாம் அற்றுப் போகும், அப்போது இல்லறத்தில் இருந்து கொண்டு அகத்துறவோ, இல்லறத்தை தவிட்டு வாழும்புறத்துறவோ மேற்கொள்ளுவர். ஒருவன் எதனிடம் பற்றுக்கொண்டு வாழ்கின்றானோ அதனால் துன்பம் அடைவான். எதிலிருந்து எதிலிருந்து பற்று நீங்கி வாழ்கின்றானோ அதனால் அதனால் அவனுக்குத் துன்பம் இல்லை, ஆகையால் துன்பம்

அற்ற வாழ்வை விரும்பினால், எல்லாம் உள்ளபோதே பற்றற்ற துறவு வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும்; துறந்த பிறகு இந்த வாழ்க்கையில் கைகூடும் இன்பங்கள் பல உண்டு.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்" (341)

என்றும்,

"வேண்டின் உண்டாகத்துறக்க; துறந்தபின்
ஈண்டியற் பால பல" (342)

என்றும், திருவள்ளுவர் உணர்த்துவனவற்றை உளங் கொளல் தகும்.

**செய்யத்தக்கது**

உள்ளமே பெருங்கோயில் என்பதை—ஒப்புக்கொள்ள வேண்டும். மனம் ஐம்பொறிகளையும் தனக்குள் அடக்கி வைத்திருக்குமேயானால் மனத்தின் தூய்மை வாழ்க்கையி னுடைய தூய்மையாகத் துலங்கும் பாரதியார் வேண்டுவது போல,

"யார்க்கும் எளியனாய், யார்க்கும் வலியனாய்,
யார்க்கும் அன்பனாய், யார்க்கும் இனியனாய்,
வாழ்ந்திட விரும்பினேன்; மனமே நீ யிதை
ஆழ்ந்து கருதி, ஆய்ந்தாய்ந்து, பலமுறை
சூழ்ந்து, தெளிந்து, பின் சூழ்ந்தார்க்கெல்லாம்
கூறிக் கூறிக் குறைவறத் தேர்ந்து,
தேறித்தேறி நான் சித்திபெற் றிடவே,
நின்னா லியன்ற துணைபுரி வாயேல்,
பொன்னால் உனக்கொரு கோயில் புனைவேன்"

என வேண்டும் நாள் இப்புத்தாண்டு நாளேயாகும்.

# II

'உண்டால் அம்ம, இவ்வுலகம்' என்று புறநானூற்றுப் பாடல் ஒன்று தொடங்குகின்றது. 'பிறர்க்கென முயலுநர் உண்மையின், இவ்வுலகம் நடைபோடுகின்றது' எனக்கூறி, அவ்வாறு முயல்வதே சிறந்த உறுதிப்பொருளாகும் என்றனர் பண்டையோர். இக் காலத்துக்கு மிகவும் தேவையான செய்யுள் இது. பிறருக்காக உருகும் தன்மை பெற்ற பிறகே நெஞ்சம் வளர்கிறது எனலாம். அன்பு விரைந்து பெருகும் வாய்ப்பு மக்கட் பிறவிக்கு உண்டு. மானிடப்பிறவி விழுமியதே. உயர்ந்த அப்பிறவியைப் பயனுடைய பிறவியாக்கவேண்டும்.

"மனித வாழ்க்கை ஒரு தீப்பெட்டியைப் போன்றது. அதில் உராய்ந்து செல்லும் ஒவ்வொரு விநாடியும் ஒரு தீக்குச்சிக்கு ஒப்பானது. விதியின் கரங்களால் செயல்படும் அந்தத் தீக்குச்சிகளில் சில நமர்த்துப்போகலாம்; அப்போது வாழ்க்கை சாரமற்றும், சலனமற்றும் காணப்படுகின்றது. சில குச்சிகள் மத்தாப்பூத் தன்மையுடன் வர்ணவிசித்திரம் காட்டலாம்; அப்போது வாழ்க்கை இனிமையாகவும் எழிலாகவும் சுவையாகவும் தென்படுகிறது. சில குச்சிகள் திடீரென்று தீப்பற்றி எரியலாம்; அப்போது வாழ்க்கை துன்பமும், துயரமுமாக, கசப்பும், புளிப்புமாக, வெறுப்பும், வேதனையுமாக, சுமையும் சோதனையுமாக ஆகிறது இப்படிச் சுட்டுப் புண்படுத்தும் இத் தீக்குச்சிகளை மத்தாப்புக் குச்சிகளாக மாற்றும் முயற்சியிலேயே மனித சக்தி முழுவதும் செலவாகிறது. அது ஒரு தொடர்ப் போராட்டமாகவே நீடிக்கிறது.[1] போராட்டம் பூந்தென்றலாக மாறுமாறு நம் வாழ்க்கையினை அமைத்துக்கொள்ள வேண்டும்.

---

1. ஜெகசிற்பியன், சொர்க்கத்தின் நிழல், ப.424.

காலம் சுழலுகின்றது, நாள்கள் உருண்டோடுகின்றன; புத்தாண்டும் பிறக்கின்றது. காலப்போக்கில் எத்தனையோ புதுமைச் சிந்தனைகள், புரட்சிச் சித்தாந்தங்கள் தோன்றியே வந்துள்ளன. ஊழிக் கரங்களால் 'சுழற்றி வீசப்படும் நிகழ்ச்சிகள் வீறாந்த வேகத்துடன் பாய்ந்து வந்து கொஞ்சங்கூடக் குறிபிசகாமல் மனித வாழ்வைத் தாக்குகின்றன. மனிதனுடைய அறிவும் ஆற்றலும் இன்னும் உச்சநிலை எய்திவிடவில்லை என்பதையே இது காட்டுகின்றது. ஆயின் மனிதன் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியெய்தவில்லையா? உடலாலும், உள்ளத்தாலும் அவன் வளர்ச்சி பெற்றுக்கொண்டுதான் இருக்கிறான். மக்கள் நிறைந்த இந்தச் சமுதாயத்தின் விதிமுறைகள் காலத்தையொட்டி மாறிக்கொண்டே இருப்பதால் மனிதனது கணிசமான வளர்ச்சி கண்ணுக்குப் புலனாகவில்லை.

வாழ்க்கைப் பயணம் என்று கூறுகின்றோம். ஊர்ப் பயணம் மேற்கொள்ளும்போது ஒரு குறிப்பிட்ட ஊரைச் சென்று அடைவதுபோல இந்தப் பயணத்திலும் அழியாத சில நல்ல குறிக்கோள்களை முன்பணயமாக வைத்துத் தொடர்ந்து செல்லவேண்டும். அழியாத குறிக்கோள்கள் யாவை? அவை பலவாகும்.

### குடும்ப முன்னேற்றம்

குடும்ப முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றம். முன்னேற்றம் உடைய குடும்பம் எவ்வாறிருக்கும் என்பது பற்றிய பாவேந்தர் பாரதிதாசனின் எண்ணங்களை அவரது 'குடும்பவிளக்கு' ஒளிவீசச் செய்கின்றது. அதில் 'நல்ல குடும்பம் பல்கலைக்கழகம்' என்னும் கவிஞரின்

கருத்துப் பிழிவைக் காணுகின்றோம். அந்நூல் முழுவதிலும் இலக்கியச்சுவை இழையோடுகின்றது என்றாலும் 'ஒரு நாள் நிகழ்ச்சி' மட்டுமே படித்தாலும் பானைச் சோற்றுக்குப் பருக்கைப் பதங்காணச் சாலும்! அதில் 'பொதுத் தொண்டு செய்தோமா?' எனத் தங்கம் கேட்ட வினா ஒன்று போதும்!

"அதிகாலை தொடங்கி நாம் இரவுமட்டும் அடுக்கடுக்காய்
நமது நலம் சேர்ப்பதல்லால் இதுவரைக்கும் பொது
நலத்துக்கென்ன செய்தோம்
என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதுவு மில்லை''

என்றாள் அவள் தன் கணவனிடம்! 'வீட்டுத் தொண்டா பொதுத்தொண்டு?' என்றால் அதுவல்ல

'தமிழரென்று சொல்லிக்கொள்கின்றோம் நாமும்;
தமிழ்நாட்டின் முன்னேற்றம் விரும்புகின்றோம்!
எமதென்று சொல்கின்றோம் நாடோ றுந்தான்!
எப்போது தமிழனுக்குக் கையா லான
நமதுழைப்பை ஒருகாசைச் செலவு செய்தோம்?
நாமிதனை என்றேனும் வாழ்நாள் தன்னில்
அமைவாகக் குந்தி நினைத் தோமா? இல்லை
அனைவரு மிவ் வாறிருந்தால் எது நடக்கும்.

எனத் தங்கம் படிக்கணக்கைப் பேசிவிட்டாள்.

'வினையே ஆடவர்க்குயிரே' என்னும் சங்கத் தமிழ் கூறும் தலைவன் வாயிலாகவன்றி, மனையுறை தலைவி வாயிலாக இச்சொற்களைப் பேசவைத்த பாவேந்தரது பாங்கான மனத்தை இப் பெண் மக்கள் ஆண்டில்— அவரது நூற்றாண்டு நேரத்தில் நினையாதிருக்கக்கூடுமோ? கூடாது. ஒருநாள் நிகழ்ச்சியிலேயே இந்நினைவு எழக்கூடு

மேல், ஓராண்டை ஓடவிட்டிருக்கும் நிலையிலும், புத்தாண்டினைத் தொடங்கும் இந்நேரத்திலும் 'இது வரைக்கும் பொதுநலத்துக்கென்ன செய்தோம்?' என எண்ணிப் பார்ப்பதும், எடுத்துச் சொல்லுவதும் எழிலுற அவ்வழி வினையாற்றுவதும் பொருத்தமேயன்றோ?

'நாடெல்லாம் வாழக் கேடொன்றுமில்லை;' என்பர். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லால் வேறொன்றறியேன் பராபரமே" என்று கூறினார் தாயுமானசுவாமிகள்.

நம்பிக்கை :

மனிதனுக்குத் தன்னம்பிக்கைவேண்டும் புதியதோர் எழுச்சி கூடவேண்டும். ஏனெனில் மனிதன் புதுமை காண்பவன்; வளர்ச்சிகாண விழைபவன்; சிறந்த சாதனையாளன்; தன்னால் எல்லாமே இயலும் என்னும் திண்ணிய எண்ணம் மட்டுமே அவனுக்குத் தேவையானது கடந்தகாலச் சாதனைகளைக் கணித்துத் தொடங்கும் புத்தாண்டின் புதுச்சாதனைகளை வகைப்படுத்தி வளஞ் சேர்க்க அவன் பாடுபடவேண்டும்.

'தன்னைத்தான் ஆளும்தன்மை நான் பெற்றிடில்,
எல்லாப் பயன்களும் தாமே எய்தும்,
அசையா நெஞ்சம் அருள்வாய்'

என்று பாட்டுக்கொரு புலவன் பாரதி வேண்டியமை ஈண்டு நினைவுகூரத் தக்கதாம்? உயிரெலாம் இன்புற்றிருக்க வேண்டியே அசையா நெஞ்சம் வேண்டுமென்றார் அவர். நடமாடும் கோயில் நன்மக்களுக்கு இயன்ற அளவு தொண்டுபுரிதல், உயிர்களிடத்தில் இரக்கம் காட்டுதல், எளிய வாழ்க்கை வாழ்தல், பிறர்க்கின்னா செய்யாமை, பெரியோரைத் துணைக்கோடல் போன்றவை அழியாத குறிக்கோள்களுள் சிலவாகும்.

"கல்லாது போகிய நாளும், பெரியவர்கண்
செல்லாது வைகிய வைகலும் — ஒல்வ
கொடா அதுஒழிந்த பகலும், உரைப்பின்
படாஅவாம் பண்புடையார் கண்"

என நான்மணிக்கடிகை நவில்கின்றது. ஆம்! ஏதாவது ஒன்றைக் கற்றுக்கொள்ளாத நாள், சான்றோரைச் சந்திக்காமல் வீணே கழியும் நாள், தனக்கு இயன்றதைப் பிறருக்குக் கொடுத்து மகிழாத நாள்—சொல்லப் போனால் இவ்வித நாள் எதுவும் பண்புடையோர் வாழ்வில் வருவதில்லையாம்! இக்கருத்துகளை நம் மனம் ஒவ்வொரு நாளும் அசைபோடவேண்டும். சலனம் இல்லாத மனம், இருள் இல்லாத மதி, நினைக்கும் பொழுதெல்லாம் இறைவனுடைய அமைதிநிலை வந்திடும் வாய்ப்பு ஆகியவற்றோடு ஒரு வரம் வேண்டிடவேண்டும்.

பாரதியார் வேண்டுகின்றார் :

"மனத்திற் சலன மில்லாமல்,
மதியில் இருளே தோன்றாமல்,
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்;
கனக்குஞ் செல்வம், நூறு வயது;
இசையும் தர நீ கடவாயே"

இந்தப் பாடலைக் கொண்டுதான், நம்முடைய நாள் குறிப்பைத் தொடங்கவேண்டும் என்று தோன்றுகிறது!

# 2. அறநெறி

## I

இவ்வுலகத்தில் நிலையாக நிலைத்திருப்பது ஒன்றுண்டு. அதுதான் நிலையாமை. 'நில்லாமையே நிலையிற்று ஆகலின்' என்பர் சான்றோர். தமிழ்ச் சான்றோர் தொல்காப்பியனார் நிலையாமையினைக் 'காஞ்சி' என்ற சொல்லால் குறிப்பர். 'பலர் செலத் தான் செல்லாக் காடு' என்றும் நிலையாமை பேசப்படும். இந்நிலையற்ற உலகில் நிலைத்திருப்பது புகழ் என்று கண்டனர் நம் முன்னோர்.

> **மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்**
> **தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே**

என்ற புறநானூறு இதனைக் குறிப்பிட்டது நிலையற்ற வுலகில் நிலைத்திருக்கும் புகழ் எவ்வாறு ஒருவருக்குக் கிடைக்கும்? அவ்வாறு குன்றாப்புகழை ஈட்டுவதற்கு வழி என்ன?

அறநெறி சார்தலே பொன்றாப் புகழைப் பெறுதற்குரிய ஒரே வழியாகும். இதனைப் பண்டே நம் முன்னோர் நன்கு உணர்ந்திருந்தனர் என்பதற்குப் புறநானூறு என்னும் பழந்தமிழ் நூலே சான்று பகர வல்லதாகும்

மதுரை தமிழ் நிலைபெற்ற இடம். முச்சங்கம் வைத்து மொழி வளர்த்தவர்கள் பாண்டியர்கள். மாடமதுரை தமிழ் மொழியும் இலக்கியமும் தழைத்த

இடம். புகழ் பூத்த புலவர்கள் வாழ்ந்த திருவிடம். மதுரையில் அந்நாளில் மருதன் இளநாகனார் என்னும் புலவர் வாழ்ந்து வந்தார் அவர் முற்றிய புலமையாளர். சான்றாண்மைக்கு ஆழி என விளங்கிய அறவோர். புரவலர் தம் புகழ்மிகு செயல்களை வடியாநாவிற் வடித்துப் பாடியவர். அவர் பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறன் என்னும் வேந்தனைப் பற்றிப் பாடிய பாட்டொன்று புறநானூற்றில் இடம் பெற்றுள்ளது பாடாண்திணையில் செவியறிவுறூஉத் துறையில் அமைந்த அப்பாடல் அறிநெறி இதுவெனத் தெற்றென விளக்கிக் காட்டுகின்றது. அரசர்க்கு உணர்த்திய அறநெறியேயாயினும் அஃது அனைவரும் எண்ணிப் பார்த்துப் பின்பற்ற வேண்டிய அறநெறியாகத் துலங்குகின்றது.

**செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்குமிவ் வுலகு** (389)

என்பார் திருவள்ளுவர். பாண்டியன் நன்மாறனின் செவிகைப்ப மதுரை மருதன் இளநாகனார் பாடிய பாடலாகப் புறநானூற்றுப் பாட்டு துலங்கக் காணலாம்.

பாண்டியன் நன்மாறன் மூவெயில் எய்து அழித்த சிவபெருமானின் நெற்றிக் கண்ணைப் போலப் பிற வேந்தரினும் மேம்பட்டு விளங்குகின்றான். போர்க் களத்தில் எதிரிகளைக் கொல்லும் களிறுகளையும்; விரைந்து செல்லும் குதிரைகளையும், கொடி பறக்கும் தேர்களையும், கூற்று உடன்று வரினும் எதிர்த்துப் போர் புரிய அஞ்சாத போர் மறவர்களையும் உடைய வேந்தனாய் உள்ளான். ஆயினும் அவனுக்குப் பெருமை சேர்ப்பன : இவை மட்டுமன்று: அறநெறியை முதலாக வுடையவன் அரசன் என்னும் சிறப்பே அரசனின் உண்மை

யான உயர்வான சிறப்பாகும். எனவே அவன் மேற்கொள்ளவேண்டிய அறநெறிகள் மூன்றாகும். அவையாவன : ஒன்று : நமக்கு வேண்டியவர்கள் தவறு செய்வார்களேயானால் அவர்களுக்காக நீதியினின்றும் வழுவக்கூடாது. இரண்டு : அயலார் தனக்கு வேண்டாதவர்கள் எவ்வளவுதான் நல்லவர்களாக இருந்தாலும், எவ்வளவுதான் நன்மை விளைவிக்கும் செயல்களைச் செய்தாலும் அவர்களைப் பாராட்டி ஊக்குவிக்காமல், மாறாக செங்கோல் வளைந்து அவர்களைக் கொல்லும் முயற்சியில் ஈடுபடுதல் கூடாது. மூன்று : பகலில் வான வீதியில் வரும் பகலவன் போல ஆண்மையும் இரவில் வெண்ணிறக் கதிர்களைச் சொரியும் சந்திரன் போன்று அருளும், காலத்திற் பெய்து மக்கள் மனங்களைக் கனிவிக்கும் மழை போன்று கொடையும் உடையவனாகப் பாண்டியன் நன்மாறன் விளங்க வேண்டும். இல்லை என்று இரந்து வந்துவிட்ட இல்லாதவர்க்கு இல்லை என்று சொல்லாமல் அவர்களுக்கு ஈந்து அவர்தம் துயரினைத் துடைக்கவேண்டும் என்று புலவர் இடித்து மொழிகின்றார்.

**கறைமிடற்று அண்ணல் காமர் சென்னிப்**
**பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல**
**வேந்து மேம்பட்ட பூந்தள் மாற!**
**கடுஞ்சினத்த கொல்களிறும், கதழ்பரிய கலிமாவும்'**
**நெடுங்கொடிய நிமிர்தேரும், நெஞ்சுடைய புகல்மறவரும்**
**என**
**நான்குடன் மாண்ட தாயினும், மாண்ட**
**அறநெறி முதற்றே அரசின் கொற்றம்;**
**அதனால், நமரெனக் கோல்கோ டாது**

பிறர் எனக் குணங்கொல்லாது,
ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்கள் அன்ன தண்பெரும் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்
உடையை ஆகி இல்லோர் கையற
நீ நீடு வாழிய நெடுந்தகை!

—புறநானூறு; 55:4—17

பழைய புறநானூற்றுப் பாட்டே ஆயினும், அரசர்க்கு அறிவுறுத்தப்பெற்ற அறநெறியேயாயினும், ஈராயிரம் ஆண்டுகள் கழிந்து முடிந்து போயிற்றே ஆயினும்கூட, இப்பாட்டில் இன்று நாம் அனைவரும் மேற்கொள்ள வேண்டிய—மேற்கொண்டு உறுதியாக ஒழுகவேண்டிய அறநெறி பளிச்சிடக் காணலாம்.

எவ்வளவுதான் வல்லவராயிருந்தாலும் நல்லவராயும் இருத்தல் வேண்டும் எனபது முதலிற் பெறப்படும் செய்தியாகும். அடுத்து, வல்லமையும், எதனையும் சாதிக்கும் நிலைமையும் ஏற்பட்டாலுங்கூட, நம்மவர்கள் என்கிற ஒரே காரணத்திற்காக அவர்கள் முறையின்றிச் செய்யும் தீச்செயல்களைப் பொறுத்துப் பாதுகாப்பு கொடுக்கத் தலைப்பட்டு விட்டால் இறுதியில் அழிவு உறுதி என்பதாகும். அதுபோன்றே நமக்கு வேண்டாதவர் என்பதற்காக அவர் செய்யும் நற்செயல்களுக்குக்கூடக் களங்கம் கற்பித்துத் தண்டிக்கத் தொடங்குவோமானால் இறுதி நமக்கு உறுதி என்பதை உறுதியாக எண்ண வேண்டும் எனவே மறவர் ஒருவர் நற்செயல் செயினும் அதனைப் போற்றி வரவேற்று, தீச்செயல் செயின் அதனைக் கடிந்து நீக்கி, கதிரவன்போல் ஆண்மையும், திங்களைப் போன்று அருளையும், மழையைப் போல் கொடையும் பண்பும் கொண்டு அறநெறியில் வாழ

முற்படுவோமானால் திருச்செந்தூர் உறையும் திருமுருகன் திருக்கோயிலின்முன் குவிந்திருக்கும் மணலின் எண்ணிக்கை போலப் பல்லாண்டுகள் பயனுற இப்பாரில் வாழலாம் என்பது ஆன்றோர் கண்ட அறநெறி முடிபு.

# II

சைவப்பயிர் தழைக்கத் திருத்தொண்டாற்றிய அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர் சோமாசிமாறர். 'சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர்' இவர். 'சிவனை முழுதும் மறவாத சிந்தையான்' என்ற முன்னை வழக்குப்படி எந்நேரமும் சிவன் சேவடியையே சிந்தித்து வீடுபேறு பெற்றவர்.

நாயன்மார்கள் வாழ்ந்த வாழ்வு நமக்கெல்லாம் ஓர் எடுத்துக்காட்டான வாழ்வாகும். தென்னாடுடைய சிவனை—எந்நாட்டவர்க்கும் இறையை வந்தித்து வணங்கியவர்கள் நாயன்மார்கள்.

யாதொரு தெய்வம் கொண்டீர் ஆதொரு தெய்வமாக
மாதொரு பாகனார்தான் வருவார்

என்பது சைவ நியதியாகும். "நமச்சிவாய வாழ்க; நாதன்தாள் வாழ்க" என்று தொடங்குகின்றது சிவபுராணம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

என்பது பிள்ளையார் என்று புகலப்படும் திருஞானசம்பந்தப் பிள்ளையார் பாடிய தேவாரத் திருப்பதிகமாகும்.

சிவன் கழலைச் சிந்திப்பதற்கும் பேறு வாய்க்க வேண்டும். "அவனருளாலே அவன் தாள் வணங்கி" என்பர் ஆன்றோர். "சிவம்'' என்ற சொல்லிற்கே 'செம்மை' என்பது பொருள். "சிவனெனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி அம்மான்' என்ற தொடர்கொண்டு தூய்மையும் செம்மையும் கொண்ட சிவபெருமான் திறத்தினை ஒருவாறு உணரலாம்.

"சோழநாடு சோறுடைத்து" என்பர். மாரி பொய்ப்பினும் தான் பொய்யாப் பொன்னியாறு வளஞ்சுரந்து செழுமைப்படுத்தும் திருநாடு சோணாடு. காவிரிக்கரை நெடுகிலும் அதன் இரு மருங்கிலும் எண்ணற்ற சிவன் திருக்கோயில்கள் உண்டு. சைவப் பதிகள் பலவற்றைக் கொண்ட நாடு சோணாடு. அச் சோழ நாட்டில் திருஅம்பர் என்னும் ஊர் நீர்வளமும் நிலவளமும் நிரம்பிய ஊர் என்பதனை அவ்வூர் சோலைகள் மிகுந்துள்ள ஊர் என்பதனால் அறியலாம். இதனைத் தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமான் 'சூதம் பயிலும் பொழில் அம்பர்' என்று பாடுவார். இத்தகு இயற்கை எழில் சூழ்ந்த திருவம்பரில் ஒரு வேதியர் குடும்பத்தில் சோமாசிமாறர் பிறந்தார். அவர் பிறந்த குடி நற்றவக்குடி; தூய்மையும் வாய்மையும் தொண்டும் மிக்க குடி. வேதத்தினை முறையாகப் பயின்றவர்கள் ஆதலின் அவர்கள் நான்மறை முற்றிய புலமையாளர்களாகத் திகழ்ந்தனர். புலனின்பத்திற் செல்லாமல் ஈசன் கழலின்பத்தில் மனம் வைத்த மறையாளர்கள் அவர்கள். இவர்கள் வழிவழியாகச் சிவத் தொண்டில் தலைப்பட்டு நின்றார்கள். திரிபுரம் எரித்த விரிசடைப் பெருமானின் அடியார்கள் எவரேனும் வந்தால், அவர்கள் திருவடிகளில் முறைப்படி விழுந்து வணங்கி எழுந்து, அவர்களைத் தம்

வீட்டிற்கு அழைத்துச் சென்று அமுது படைக்கும் அருளாளர்களாக இச்சிவநேயச் செல்வர்கள் துலங்கினார்கள்.

திருவம்பரில் வாழ்ந்து வந்த வேதியர்க்கு இரண்டே தொழில்கள்தாம் இருந்தன. யாழைப் பழித்த மொழியினரான உமாதேவியினை இடப்பாகம் கொண்ட இறைவராம் சிவனார்க்கு வேள்வி இயற்றி நிற்றல் இவர்தம் கடன் எனக் கருதினர். பிறர் நலம் புரக்கும் பெருமாண்பினால் வேள்வி இயற்றல் இவர் பணியாயிற்று.

எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

என்று தாயுமான தயாபரர் கூறுமாறு, உலக மக்கள் உய்ய வேண்டும் என்னும் பெரு நினைப்பே இவர்தம் வாழ்க்கையின் குறிக்கோளாக இருந்தது. இரண்டாவதாக, 'சிவன் கழலேத்தும் செல்வமே செல்வம்' என்பது இவர்கள் சிந்தையில் ஊறிவிட்ட உறுதியான கொள்கையாகும். வேள்வி இயற்றலும், சிவன் கழல் போற்றலுமாக இவர்கள் வாழ்வு சென்றது.

'சிவாயநம' எனச் சிந்திக்கப் பெறுதல் உயர்நிலை உலகம் புகுதற்கு எளிய வழியாகும்.

"சிவாயநம என்று சிந்தித்திருப்பார்க்கு அபாயம் ஒரு
நாளும் இல்லை—இதுவே உபாயம்"

என்று பின்வந்த பெரியோரும் கூறினர். ஐந்தெழுத்து மந்திர ஆற்றல் வாய்ந்ததாகும். திருநாவுக்கரசர் பெருமானைக் கல்லிலே கட்டிக் கடலிலே போட்ட பொழுது,

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சி வாயவே

என்று பாடி இன்புற்றிருந்த நிலையைத் திருத்தொண்டர் புராணம் தெளிவுறுத்தும். அவ்வகையில் ஐந்தெழுத்தை விடாமல் பயிற்றுவரும் வேதியர் குலத்திற் பிறந்த சோமாசிமாறர், 'சீரும் திருவும் பொழியும் திருவாரூர்' சென்று சேர்ந்தார். சுந்தரமூர்த்தி நாயனாரின் திருத்தொண்டத் தொகை தோன்றக் காரணமாக இருந்த இடமே திருவாரூர்த் தேவாசிரிய மண்டபம் அன்றோ?' ஆரூரானை மறக்கலும் ஆமே' என்றபடி, திருவாரூர் தியாகேசப் பெருமானின் திருக்கோயிலுக்கு நாள்தோறும் சென்று அப்பரமன் பாதம் பாடிப் பரவி நின்றார். திருவாரூர் என்றவுடன் திருவாரூர்த் தெருவில் தம் பொருட்டுத் திருவாரூர்த் தெருக்களில் சிவபெருமானை நடக்கவிட்ட சுந்தரமூர்த்தி எனும் நாவலூரர் பெருமான் நினைவிற்குவருதல் இயற்கை. திருவாரூரில் பரவை, நாச்சியாரை மணந்து வாழ்ந்து, பின் திருவொற்றியூரில் சங்கிலி நாச்சியாரை மணந்து வாழ்ந்து, இறுதியில் 'வெறுத்தேன் மனை வாழ்க்கை' என்றும், 'மற்றுப்பற்று எனக்கின்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்' என்றும் பாடி நைந்து உருகியவர் நாவலூரர்ப் பெருமானாம் சுந்தரர் ஆவர். எனவே சோமாசிமாறர் நாவலூரர்ப் பெருமானின் நற்பதத்தினை நாள்தோறும் நினைந்து நைந்துருகினார். பொறி புலன்களால் வரும் இன்பத்தை வெறுத்தார், ஐம்புல வேடர்களால் அலைக் கழிக்கப்படும் வாழ்க்கை அல்லல் மிகுந்த வாழ்க்கை என்று துணிந்தார். சிற்றின்பத்திற்கு ஓர் எல்லை வரம்புண்டு; அஃது அழியக் கூடியது என்ற முடிவுக்கு வந்தார்.

பேரின்பம் நிலை பேறுடையது; சிவன் கழலே பேரின்பம்; அதனை அடைதலே வாழ்க்கையின் குறிக்கோள் என்று தெளிந்தார். தம் புலன்களை வென்று இறையடி சேர்ந்து சிவலோக இன்பம் பெற்றார்.

"புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம்" என்பதற்கு எடுத்துக் காட்டாகச் சோமாசிமாற நாயனாரின் வாழ்வு துலங்குகின்றது.

# III

'முருகு' என்னும் சொல்லுக்குத் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள் அழகு, இளமை, மணம், கடவுள் தன்மை என்று நான்கு பொருள்களைத் தந்துள்ளார். பழந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியம் 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று குறிப்பிடும். 'சேய்' என்பது சிவ பரம்பொருளின் மகவாய் உள்ள முருகனைக் குறிக்கும். அல்லது அழிந்து நல்லது நிலை பெற—சூரன் வதைபட்டுத் தேவர் குலம் உய்யத் துணையாய்—முழுமுதற் காரணமாய் நின்றவன் முருகப் பெருமான் ஆவான். அவனைத் தமிழ்க் கடவுள் என்றும் பண்டையோர் பாராட்டினர். 'நூலறி புலவ' என்று முருகப்பெருமானை நக்கீரர் பெருமான் திருமுருகாற்றுப் படையில் பாராட்டுவர். புலவர் ஏறாக விளங்கும் முருகன் விரும்பியுறைகின்ற இடங்கள் ஆறு என்று சுட்டப்பெறும். ஆறுபடை வீடுகள் என வழங்கப்படும் திருத்தலங்கள்—பரங்குன்று என்னும் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் என்னும் திருச்செந்தூர், திருவாவினன்குடி என்னும் பழனி, திருவேரகம் என்னும் சுவாமிமலை, குன்றுதோறாடல் என்னும் திருத்தணி, பழமுதிர்சோலை என்னும் அழகர்கோயில் மலை முகடு என்பனவே அவை.

கூடல் மாநகர் என வழங்கும் மதுரை நகரத்திற்கு மேற்கில் அமைந்திருப்பது திருப்பரங்குன்றம். அங்கு அமைந்திருக்கும் திருமுருகனின் திருக்கோயில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது.

'பரங்குன்று இமயக் குன்ற நிகர்க்கும்' என்பது பரிபாடல் தொடர் (பரிபாடல் 8:11). இமயமலை சங்ககாலத் தமிழர்க்கே நன்கு அறிமுகமான மலை. புறநானூற்றுப் பாடல் அடியொன்று 'தென்குமரி வட பெருங்கல்' என்று தொடங்குகின்றது. இமயமலைச் சாரல் பற்றியும் அங்கு மான்கள் அந்தணர் இயற்றும் வேள்வி முத்தீ வெளிச்சத்தில் உறங்குகின்றன என்றும் குறிப்பிடப் பெறுகின்றது. அறிவிற்சிறந்த ஔவை பிராட்டியாரர் பெருங்காற்றை நோக்கி "இமயமலையையே தூக்கியெறியக் கூடிய ஆற்றல் உடைய நீ, துணைவரைப் பிரிந்து வாடும் பெண்கள்மீது வீசித் துன்புறுத்தலாமா? என்று வினவும் போக்கில் "இமயமும் துளக்கும் பண்பினை துணையிலர், அளியர், பெண்டிர் இஃதெவனோ" என்று குறுந்தொகைப் பாடலொன்றில் பாடியிருக்கக் காணலாம்.

இத்தகைய இமயமலையோடு திருப்பரங்குன்றம் ஒப்பிட்டுப் பேசப்படுகின்றது. "பரங்குன்று இமயம் நிகர்க்கும்" என்று பரிபாடல் குறிப்பிடுவதனால் இமயமலை போற்றப்பட்ட அளவிற்குத் திருப்பரங் குன்றமும் அந்நாளிலேயே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலேயே போற்றப்பட்டது என்பது தெளிவாகின்றது.

திருச்செந்தூர் திருக்கோயில் புறநானூற்றிலேயே இடம்பெற்ற திருக்கோயிலாகும். மதுரை மருதம் இளநாகனார் என்னும் புலவர் பெருமான், அத்திருக்

கோயிலை அடையாளம் காட்டுமுகத்தான் ஒரு செய்தியைச் சொல்லுகின்றார். அத்திருக்கோயிலின் முன் பெருங்காற்று வீசி வீசித் தொடுக்கப்பட்ட மணல் குன்று போலக் குவிந்து கிடக்கின்றது என்று குறிப்பிடுகின்றார்.

.........தாழ்நீர்
வெண்டலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுவாழ் எக்கர் புறநானூறு 55 : 17-21

மேலும்,

சூர்மறுங் கறுத்த சுடரிலை நெடுவேற்
சினம்மிகு முருகன் தண்பரங் குன்றத்து
அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை
—அகநானூறு 59 : 10 12

என்று அகநானூறும்,

ஒன்னாதார்க் கடந்தடூஉம் உரவுநீர் மாகொன்ற
வென்வேலான் குன்று —கலித்தொகை 27

என்று கற்றறிந்தார் ஏத்தும் கலித்தொகையும்,

வன்கை வினைஞர் அரிபறை யின்குரல்
அளிமழை பொழியும் தண்பரங் குன்றில்
—மதுரைக்காஞ்சி 262-263

என்று மதுரைக்காஞ்சியும் திருப்பரங்குன்றத்தைக் குறிப்பிடுகின்றன.

'வேலுண்டு வினையில்லை'

என்பது தமிழர் நம்பிக்கை

மெய்கண்ட தெய்வமித் தெய்வமல் பொற்புவியில்
வேறில்லை
—முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் 7 : 6

என்று முருகப் பெருமானே முழுமுதற் பரம்பொருள் என்பார் குமரகுருபரர். மேலும் வால்மீகி இராமாயணத்தில்

வியாச முனிவர், விசுவாமித்திரர் வாக்காக, "எவரா யிருப்பினும் கார்த்திகேயனிடத்தில் பக்தி பண்ணுபவர் புதல்வன் முதலிய பல பேறுகளைப் பெறுவர்" என்று குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

முன்னாளில் பெரியோர் முருகனைப் பற்றிய தொல் தமிழ் நூலாம் திருமுருகாற்றுப்படையினைப் பாராயண நூலாகக் கொண்டிருந்தனர்

பரங்குன்றிற் பன்னிருகைக் கோமான்றன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு—சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே அணிமுரு காற்றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்

திருமுருகாற்றுப் படையின் அடியிற் காணும் இவ் வெண்பா முருக பூசை செய்யும் முறையினைக் கிளத்து கின்றது.

.........யாஅம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதா ரோயே. (பரிபாடல் 78-81)

என்னும் பரிபாடற் பகுதி அந்நாளில் திருப்பரங்குன்றம் செல்லும் திருமுருக அடியார்கள், திருமுருகன்பால் வேண்டுவனவற்றை விளம்பி நிற்கின்றது.

வாழ்க்கைக்குப் பொருள் தேவை. 'பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை' என்றும், "செய்க பொருளை, செறுநர் செருக்கறுக்கும் எஃகதனிற் கூரியதில்" என்றும் வள்ளுவர் குறிப்பிடுவார். ஆனால் அந்தப் பொருளையே வேண்டா என்று கூறுவதோடு அமையாது, "பொன்னினாகும் பொருபடை" என்ற சிந்தாமணித்தொடரினின்றும்

மாறுபட்டுப் பொன்னையும் வேண்டா எனக் கூறி, "எல்லாவுயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வருவும் மேவற்றாகும்" என்ற தொல்காப்பிய நூற்பாவிற்கும் மாறாகப் போகத்தையும் வெறுத்து நிற்கின்றனர் முருக அடியார்கள். பொருளையும் பொன்னையும் போகத்தையும் வெறுத்து, அவற்றிற்கும் உயர்வாக ஒளிரும் திருமுருகப் பெருமானின் அருளையும், அன்பையும், அறத்தையும் நாடி நிற்கிறார்கள். ஏனெனில் முருகப் பெருமான் வழங்கும் அருளும், அன்பும், அறமும் நிலைபேறுடைய பொருள்கள். எனவே நிலையாவுலகில் நில்லாத பொருளையும் பொன்னையும் போகத்தையும் வெறுத்து, நில்லாவுலகில் நிலைத்து நிற்கும் ஆறுமுகப் பெருமானின் அருளையும் அன்பையும், அறத்தையும் வேண்டி நிற்கிறார்கள்.

எனவே, திருப்பரங்குன்றத்தில் உறையும் குமரவேளின் திருவடிகளைப் பற்றிக்கொண்டு நாம் சிந்திக்க வேண்டிய அறநெறிக் கருத்துகளை ஒருவாறு தொகுத்துக் காண்போம்.

"ஆசையே அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம்" என்பார் புத்தர்.

> **யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்**
> **அதனின் அதனின் இலன்.** (341)

என்பார் திருவள்ளுவர். பற்றுகள் படர்கொடியாய்ப் படர்ந்து சென்றுகொண்டிருக்கின்றன. 'படர்' என்ற சொல்லே துன்பத்தைக் குறிப்பதாகும் எனவே நில்லாதவுலகத்தின் நிலைமையினைச் சீர்தூக்கிப் பார்த்தால் முருகப்பெருமானின் அருளும் அன்பும் அறமுமே நம்மை என்றும் காக்க வல்லன என்பது பெறப்படும். பெறவே, திருப்பறங்குன்றில் அமர்ந்துறையும் முருகவேளினை முறையுற அறநெறிப் பற்றிப் படருவோம்.

# 3. ஓதுவது ஒழியேல்

"கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்று தமிழிலும் ''Art is long; Life if Fleeting'' என்று ஆங்கிலத்திலும் கல்வி கடல்போல் பரந்துகிடக்கும் தன்மையினைப் புகல்வர்.

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர்** —*திருக்குறள் :93*

என்று திருவள்ளுவர் பெருமானும் கல்வியின் கணக்கிலாச் சிறப்பைக் கழறியுள்ளார். அம்மட்டோடன்றி ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வி, ஏழு பிறப்பிலும் உதவும் நீர்மைத்து என்றும் கூறியுள்ளார்.

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து** —*திருக்குறள் 398*

**கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே** *(35)*

என்றும்

**எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்**
**அக்குடியில் கற்றோரை மேல்வரு கென்பர்** *(38)*

என்றும்

**அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்** *(39)*

என்றும் நறுந்தொகை கூறும் கல்வியின் சிறப்பினைப் பழந்தமிழர் நன்கறிந்திருந்தனர். ஏழை மாணவர்கள்

செல்வர்கள் வீட்டில் ஒவ்வொரு வேளை உண்டியினை ஏற்றுப் படிப்பினை முடிப்பதனையும், அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் உண்டி வயிறு புடைக்க உண்ணும் உண்டியாக இல்லாமல் அளவாக இருந்த காரணத்தினால் அவர்கள் உடம்பு மெலிந்து இருந்ததென்றும் குறுந்தொகைப் புலவர் படுமரத்து மோசிகீரன் குறிப்பிடுகின்றார்.

அன்னாய் இவன்ஓர் இளமா ணாக்கன்
தன்ஊர் மன்றத்து என்னன் கொல்லோ
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே

(குறுந்தொகை 33)

அடுத்து, புறநானூற்றுப் பாடலொன்று கல்வியின் இன்றியமையாமையினையும், கல்வி கற்றார் பெறும் சிறப்பினையும் புலப்படுத்தும். ஒரு குடும்பத்தில் பலர் பிறந்திருந்தாலும், அக்குடும்பத்தில் வயதால் மூத்தவனுக்குத்தான் தனிச் சிறப்பு, மரியாதை என்னாது, ஒரு நாட்டின் அரசன், அக்குடும்பத்திற் பிறந்த பலருள்ளும் கற்றவனையே அழைத்து மதிப்புத் தந்து, அவன் சொன்ன அறிவுரைப்படியே தன் அரசாட்சியைச் செலுத்துவான் என்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியின் சிறப்பினை உள்ளவாறே உணர்த்தி நிற்கக் காணலாம். பாடல் வருமாறு :

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்பு ஓர் அன்ன உடன்வயிற்றுள்ளும்
சிறப்பின் பாலாய் தாயும் மனம்திரியும்
ஒருகுடிப் பிறந்த பல்லோருள்ளும்

மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடை யோன்ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே

(புறநானூறு 183)

"படி படி, படித்துக்கொண்டே இரு" என்று உருசிய நாட்டு உலகப் பெருந்தலைவர் இலனினும் மாணவர்க்கு அறிவுரை கூறியதாகக் குறிப்பிடுவர். இறை நம்பிக்கையும் பக்தியும் மிகுந்த தமிழகத்தில் மக்கட்குக் கல்வியின் சிறப்பை உணர்த்தப் பின்வருமாறு குறிப்பிடுவர். கல்விக்குக் கடவுள் கலைமகள் எனப்படும் சரசுவதி தேவியார். அந்தச் சரசுவதி தேவியாரே இன்னும் கையில் நூல் வைத்துக்கொண்டு எந்நேரமும் படித்துக்கொண்டிருக்கிறார். அவ்வாறிருக்கையில் மக்களாகப் பிறந்த நாம் அனைவரும் கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உளகளவு என்பதனைப் பின்வரும் தனிப்பாடல் உணர்த்துகிறது.

உற்ற கலைமடந்தை யோதுகிறாள்—மெத்த
வெறும்பந்த யங்கூற வேண்டாம் புலவீர்
எறும்பும் தன் கையால் எண்சாண்

(பி. இரத்தினநாயகர் சன்ஸ்—தனிப்பாடல் திரட்டு
முதற்பாகம் ப. 18)

இந்தியா பெற்றெடுத்த இணையிலாத ஓவியர் இரவிவர்மா வரைந்த அமர ஓவியம் கலைமகள் சித்திரத்தைக் காணும் எவர்க்கும் இந்தப் பாட்டு, பளிச்சென்று நினைவிற்கு வராமற் போகாது.

"பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்பது தமிழ்ப் பழமொழி. இப்பழமொழி பிறழ உணரப்பட்டுத் தவறான

பொருள் கூறப்படுகின்றது. இதன் உண்மையான வடிவம்,

பாஷை ஏறினும் ஏடது கைவிடேல்

என்று இலக்கணத் தாத்தா மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கள் குறிப்பிடுவார்கள். அதாவது ஒருவர் தாம் பயின்ற மொழியில் எவ்வளவு தான் முற்றிய புலமை பெற்றவராக இருந்தாலும், மொழித்திறனை முட்டறுத்தவராக இருந்தாலும், இனி நாம் படித்துத் தெரிந்துகொள்வதற்கு ஒரு பொருளும் இல்லை, படிப்பதற்கு ஒரு நூலும் இல்லை என்று தருக்கி வாளாவிருந்து விடக்கூடாது. மொழியைச் சிறப்பாகக் கற்ற நிலை வந்துவிட்டதாக ஒருவர் கருதிவிட்டாலுங்கூட, கையில் நூலெடுத்துப் படிப்பதை விட்டுவிடக் கூடாது என்பதுதான் இந்தப் பழமொழியின் உண்மையான பொருளாகும்.

பதினேழாம் நூற்றாண்டின் இணையிலாப் பெரும் புலவராக குமரகுருபரர் தாம் இயற்றிய நீதிநெறி விளக்கத்தில் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஓர் அருமையான கருத்தினை வெளிப்படுத்துகின்றார். வாழ்க்கைக்குப் பொருட்செல்வம் கல்விச் செல்வம் ஆகிய இரண்டுமே தேவை. கல்விச் செல்வத்தை வற்புறுத்திய திருவள்ளுவர்,

அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லா கியாங்கு —திருக்குறள் 247

என்றும்,

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூறிய துஇல் திருக்குறள் 759

என்று குறிப்பிடும் திருக்குறள்கள் செல்வத்தின் இன்றியமையாமையினைப் புலப்படுத்தும்.

வாழ்க்கையில் நம்மைக் காட்டிலும் பொருட்செல்வம் குறைவாக உள்ளவர்களைக் கண்டு அவர்களைக் காட்டிலும் நாம் வசதியாக வாழும் வாய்ப்புப் பெற்றிருக்கிறோமே என்று மனத்தில் அமைதிகொள்ள வேண்டுமாம். ஆனால் நம்மைக் காட்டிலும் கற்றவர்களைக் காணுகின்ற நேரத்தில் இவர் அறிவுக்கு நம் அறிவு எம்மாத்திரம் என்று கருத்தழிய வேண்டுமாம், இவ்வாறு குறிப்பிடுவார் குமரகுருபரர்.

தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்று அகமகிழ்க—தம்மினும்
கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றே யிவர்க்குநாம் என்று

நீதிநெறிவிளக்கம் 220

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டிய ஒன்று, கல்விக்கு ஓர் எல்லை இல்லை என்பதேயாகும். எனவே ஓதுவதனை—படிப்பதனை—ஒழியேல்—விடாமல் தொடர்ந்துகொண்டேயிருக்க வேண்டும் என்பதாகும்.

தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவரும், திரைப்படப் பாடல்கள் துறையில் தம் முத்திரையைப் பதித்தவருமான கவியரசு கண்ணதாசன் அவர்கள்,

சாவில் தமிழ் படித்துச் சாக வேண்டும்; எந்தன்
சாம்பல் தமிழ் மணந்து வேக வேண்டும்

என்று தம் தணியாத தமிழ்ப் பற்றையும், சாகும் வரை தாம் தமிழ் படிக்க வேண்டும் என்று கொண்ட வேட்கையினையும் வெளிப்படுத்திக் காட்டினார்.

உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் என்ற மனிதனின் மூன்று இன்றியமையாத் தேவைகள் முதற்கண் வாய்க்க வேண்டும். இம் மூன்றும் வாய்த்த பிறகு—பொருட்செல்வத்தால் இம்மூன்றும் ஒருவர் வாழ்வில் அமைந்த பிறகு கல்விச் செல்வம் வந்து சேர வேண்டும். கல்வி வந்து ஒருவர் வாழ்வில் இயைந்த பிறகே அவர் முழு மனிதராகிறார். கல்விதான் ஒரு மனிதரை நிறையுடையவராக்குகிறது. கல்வி இல்லை என்றால்அவர் குறையுடைய பிறவியே.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. சின்னஞ்சிறு வயதில் பிஞ்சு மனத்தில் ஏற்றுக்கொள்ளும் கல்வி கல்லில் பொறித்த எழுத்தாகக் கணக்கற்ற காலம் நிலைத்து நிற்கும். எனவே மக்கட் செல்வங்களுக்கு ஒருவர் கல்வியையே செல்வமெனக் கருதி அதனைத் தர வேண்டும். நாலடியார் என்னும் சமண சமய நீதிநூல், கல்வியைக் கள்வராற் கவர முடியாது; தகுதியான ஒருவருக்குச் சொல்லிக்கொடுத்தால் அம்மாணவர் தமக்குச் சொல்லிக்கொடுத்த ஆசிரியர் பெயரை விளங்க வைப்பார். கல்வி கற்றவர் மாட்டு அரசனே ஒருகாற் சினங்கொண்டாலும், அவரிடமிருந்து எதைப் பறிமுதல் செய்தாலும், அவர் சிறுகச் சிறுகக் கற்றுச் சேர்த்திருக்கும் கல்வியைப் பறிமுதல் செய்ய ஆணை பிறப்பிக்க முடியாது; அதனால் எப்பொழுதும் எஞ்சி நிற்பது; கரையாமல் விளங்குவது கல்வியேயாகும். எனவே அக்கல்வியினையே ஒவ்வொருவரும் தத்தம் மக்கட்குச் செல்வமென எண்ணிச் சேர்த்து வைக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றது.

வைப்புழிக் கோட்படா வாய்த்தீயின் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின் வவ்வார்
எச்சம்என ஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற —நாலடியார் 143

மேனாட்டிலும் இவ்வாறு கல்வி கொள்ளப்படுகிறது· "ஓர் உயர்ந்தநூல் உத்தமர் ஒருவருடைய குருதிக்குச்சமம்" (A Precious Book is the Life—Blood of a Master Spirit) என்பர். "இன்று காலையுணவின்போது ஒருவகைத் தனிமைத் துன்பம் உணர்ந்தேன். ஷேக்ஸ்பியர் நூலொன்றினை விரித்துப் படித்தேன். அங்கே நான் நல்லமைதி கண்டேன்" (I Felt Rather lonely This Morning at Breakfast. So I Went and unboxed a Shakespeare, There is My Comfort ) என்று கீட்ஸ் என்ற ஆங்கிலக் கவிஞர் தம் கடிதம் ஒன்றில் குறிப்பிட்டிருப்பதை நினைவில் பதித்தல் நல்லது.

இராபர்ட் சதே என்னும் கவிஞர் "அறிஞர் என்றோர் ஆங்கிலக் கவிதை புனைந்துள்ளார், அக் கவிதையில் நூல்கள்தாம் தம்மைவிட்டு நீங்காத நல்ல நண்பர்கள் என்றும், அவர்களோடுதாம் நாள்தோறும் உறவாடி மகிழ்ந்து அமைதி பெறுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

My never failing friends are they
With whom I converse day by day
—Robert Southey, The Scholar

பொருட்செல்வம், கல்விச்செல்வம் ஆகிய இரண்டினும் நம் முன்னோர்கள் கல்விச் செல்வத்திற்கே அதிக மதிப்புத் தந்தார்கள். செல்வம் வண்டிச்சக்கரம் போல மாறிமாறி வரும்; ஓரிடத்தில் நிலைத்து நிற்காது என்று

கருதினார்கள். இதையொட்டியே பதினாறு ஆண்டுகள் வளமாக வாழ்ந்தவர்களும் இல்லை; பதினாறு ஆண்டுகள் வறுமையில் தாழ்ந்தவர்களும் இல்லை என்பர். ஆனால் கல்விச்செல்வம் அத்தகையதன்று. அது எப்போதும் ஒருவரிடம் நிலைத்து நிற்பதாகும். அதனால்தான் பொருட்செல்வம் மிகவுடைய மன்னனுக்குத் தன்னுடைய ஆணை செல்லும் தன்னுடைய நாட்டில் மட்டுமே சிறப்பு; ஆனால் கற்றவர்க்கோ சென்றவிடமெல்லாம் சிறப்பு வந்து சேரும் என்று ஔவையார் மூதுரை என்னும் நூலில் குறிப்பிடுவர்.

**மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்**
**மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்**
**தன்தேசமல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்**
**சென்றவிட மெல்லாம் சிறப்பு** —மூதுரை 26

இந்த உண்மையினைப் பழந்தமிழக நிகழ்ச்சிகளி லேயே காணலாம். அறிவிற் சிறந்த ஔவைபிராட்டி நெடுநாள் வாழவைக்கும் அரிய நெல்லிக்கனியினை அதியமானிடமிருந்து பரிசாகப் பெற்றார். "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்று படித்தவர்கள் சங்க காலத்தில் தமிழகத்தில் வீறோடு விளங்கினர். தொண்டைமானிடம் தூது சென்று தம் நாவன்மையால் போரை நிறுத்திய திறலுடன் ஔவையார் காட்சி தருகிறார். புல்லாற்றூர் எயிற்றியனார், கோவூர்கிழார் முதலான புலவர்கள் போரிட முனைந்த இருபெரு வேந்தரிடையிலும் சென்று சந்து செய்வித்துப் போரைத் தவிர்த்தார்கள் என்பதைப் பார்க்கிறோம். பாண்டியன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் வஞ்சினம் கூறுகின்றபொழுதுங்கூட, நான் என் பகைவரைப் போரில் வெல்ல முடியாமல் தோற்க நேரிட்டால், மாங்குடி

மருதனாரைத் தலைமையாகக் கொண்ட புலவர் அவை என்னைப் பாடாது ஒழியட்டும் என்று கூறியதைக் காண்கிறோம்.

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைகஎன் நிலவரை புறம் : 72

கவிச்சக்கரவர்த்தி கம்பநாடர் பாடலாகத் தனிப் பாடல் திரட்டில் ஒரு பாடல் காணப்படுகிறது. அப் பாடலில், எந்த மரக்கிளையும் குரங்கை ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருப்பதுபோல, எந்த அரசரும் என்னை ஏற்றுக்கொள்வர் என்று எக்காளத்துடன் முழங்கி யிருப்பதனைக் காணலாம்.

மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ
உன்னையறிந்தோ தமிழை யோதினேன்—என்னை
விரைந்தேற்றுக் கொள்ளாதவேந்தனுண்டோ வுண்டோ
குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு

(பி. இரத்தினநாயகர் சன்ஸ்; தனிப்பாடல் திரட்டு; முதற்பாகம், ப. 84)

இனி, நிகழ்காலத்திற்கு வருவோம். எந்தத் துறையிற் பெருமை பெற்றவர்களாக இருப்பினும் அவர்கள் தாம் கற்ற கல்வியால், அதன் பயனாய் எழுதிய நூல்களால் புகழ் ஒளிர நிற்கிறார்கள். உலக வரலாறுகளை உருவாக்கியதும், மாற்றியமைத்ததும் சில சில நூல்களே என்பர். காரல்மார்க்ஸின் 'தாஸ் காபிடல்' என்ற ஒப்பற்ற பெருநூல் ஒரு புத்துலகத்தை உருவாக்கிய

தன்றோ? ஜான் ரஸ்கினின் 'அண் டு தி லாஸ்ட்' (Un to the last) என்னும் நூல் அண்ணல் காந்தியடிகள் மனத்தில் ஓர் உயர்ந்த சிந்தனையை உருவாக்கவில்லையா? திருவள்ளுவர், கன்பூசியஸ், மார்க் அரேலியஸ், கலீல் இப்ரான், உமார் கயாம், ஷேக்ஸ்பியர், பெர்னார்ஷா, பெட்ரண்ட ரஸ்ஸல் முதலானோர் நூல்கள் இன்றும் நிலைத்து வாழ்கின்றனவே!

எனவே, மனிதன் மனிதனாகத் திகழ படிக்கவேண்டும்; படித்துக் கொண்டேயிருக்க வேண்டும். சமயங்களை உருவாக்கிய பெருமக்கள் தாம் உணர்ந்ததை உலகிற்கு உணர்த்தினார்கள். மகாவீரர், புத்தர், ஏசுநாதர், நபிகள் நாயகம், திருமூலர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், மத்துவர், இராமானுசர், இராமகிருட்டினர், விவேகானந்தர், இராமலிங்கர், தாயுமான தயாபரர் முதலானோர் உபதேசித்த உண்மைகளால் மெய்ஞ் ஞானம் வளர்ந்தது என்றால் அது மிகையன்று.

படித்தால் படியலாம் என்பர். கல்வி கற்றவர் அடங்கி அடக்கமாக இருப்பர் என்கிறார் சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர். நெற்பயிர் கதிர்முற்ற முற்றத் தலை சாய்வது போலக் கற்றவர்கள் கல்வி மிகமிக அடக்கம் பெறுவர் என்கிறார்.

சொல்லரும் சூற்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருவிருந் தீன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் நிறைஞ்சிக் காய்த்தவே

(—சீவக சிந்தாமணி; நாமகள் இலம்பகம் : 24)

மேலும் அறிவைப் பரப்பும் நூல்கள் மனவிருளைப் போக்குகின்றன. புறவிருளைப் போக்கும் கதிரவன் போல் அகவிருளைப் போக்குவது தமிழ் என்ற கருத்தில் தண்டியலங்கார மேற்கோள் செய்யுளொன்று ஈண்டுக் கருதத்தக்கது.

**ஓங்கட லிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்**

—தண்டியலங்காரம்; பொருள் வேற்றுமை

மரத்தச்சன் காட்டிற்குச் செல்கிறான். மேசை, நாற்காலி, நிலைப்பேழை முதலிய கருவிகள் செய்வதற்குக் காட்டிலிருந்து மரத்தைக் கொணர்கிறான். அவை ஒரே நேராக அளவில் இருப்பதில்லை. கோணல் மாணலான மரத்தை நேரான சட்டங்களாகக் கரிக் குழம்பில் நூலைத் தோய்த்துக் கோடு அடித்துக்கொண்டு, கோட்டின்வழியே வாள்கொண்டு அறுத்து, நல்ல சட்டத்தை உருவாக்கிக் கொள்கிறான் அதுபோல, கோணலான மனத்தினை நல்ல நூலொன்று ஒழுங்குபடுத்த முடியும் என்கிறார் பவணந்தி முனிவர்,

**உரத்தின் வளம்பெருக்கி புள்ளிய தீமைப்**
**புரத்தின் வளமுருக்கிப் பொல்லா—மரத்தின்**
**கனக்கோட்டந் தீர்க்குநூ லஃதேபோன் மாந்தர்**
**மனக்கோட்டந் தீர்க்குநூன் மாண்பு**

— நன்னூல், பொதுப்பாயிரம் 24

எனவே அறிவைப் பெருக்கிக்கொள்ள அறியாமையை அகற்றிக்கொள்ள ஓதுவோம், ஓதிக்கொண்டே இருப்போம்; ஓதுவது ஒழியோம்.

# 4. செய்ந்நன்றியறிதல்

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (110)

பெறுதற்கரிய பிறவி மனிதப் பிறவி. "மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமா நிலத்தே" என்று அப்பரடிகளும் தில்லையில் எல்லையில்லாத கூத்து நிகழ்த்தும் நடராசப் பெருமானை வந்தித்து வணங்க மனிதப் பிறவியை வேண்டினார். பிற உயிரினங்களுக்கும் மானிட இனத்திற்கும் உரிய பெரிய வேறுபாடு 'நல்லது இது தீயது இது' என்று பகுத்தறிந்து பார்க்கின்ற சிந்தனையாற்றல்—ஆறாவதறிவு மனிதப் பிறவிக்கு மட்டுமே வாய்த்திருப்பதாகும்.

மனிதன் வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதற்குப் பெற்றிருக்க வேண்டிய பண்புகள் பலவாகும். அப்பண்புகள் அனைத்திலும் தலையாய பண்பு 'செய்ந்நன்றியறிதல் என்னும் பண்பாகும்.

கொள்வதும் கொடுப்பதும் ஆக அமைவதே வாழ்க்கை. சமுதாயம் என்பது மனிதர்களின் கூட்டு வாழ்வாகத் துலங்குகிறது. ஒருவருக்கொருவர் உதவிக் கொள்வதில் தான் சமுதாயம் உயிர்த் துடிப்புடன் இயங்க முடியும். ஒருவர் ஒரு காலத்தே தமக்குச் செய்த நன்மையை

மறவாமல் போற்றுவது மனிதப் பண்பின் உச்சியாக ஒளிர்கின்றது. "தனக்குப் பிறர் செய்த நன்மையை மறவாமை'' செய்ந்நன்றியறிதல் என்பர் பரிமேலழகர். மணக்குடவர் மேலும் ஒருபடி மேற்சென்று "பிறர் செய்த தீமையை மறந்து நன்மையை மறவாமை'' என்பர்.

"நன்றி எனப்படுவது இதயத்தின் நினைவு" (Gratitude is the memory of the heart) என்று மேற்புற அறிஞர் ஒருவரும் (Massieu) குறிப்பிடுவர். சர் ராபர்ட் வால்போல் என்னும் அறிஞர், ''எதிர்கால நன்மைக்கு நிகழ்காலத்தில் நன்றி என்னும் உணர்வு நின்று நிலைத்திருக்க வேண்டும்" (Gratitude is a lively sense of future favours) என்று குறிப்பிடுவர்.

தமிழ்நாட்டு நீதி நூலார் நன்றியுடைமையின் இன்றியமையாமையினை நாள்தோறும் நாம் காணும் காட்சியினை வைத்தே அறிவுறுத்தியிருக்கக் காணலாம்.

தென்னங்கன்றுக்கு மனிதன் அதன் அடியில்—வேரில் தண்ணீர் ஊற்றுகிறான். தென்னங்கன்று வளர்கிறது. எருவிடுகிறான். மேலும் நன்றாக வளர்கிறது. இப்பொழுது நீண்ட மரமாக உயர்ந்து விட்டது. தென்னங்குலை தள்ளிவிட்டது. தென்னை முற்றியவுடன் மனிதன் இளநீரைப் பறித்து அதன் உள்ளிருக்கும் நீரைப் பருகுகிறான். தீஞ்சுவையாக இனிக்கிறது. மனிதன் தென்னைக்குப் பாய்ச்சியதோ எளிய தண்ணீர்தான்; ஆனால் அது வளர்ந்து தருவதோ தீஞ்சுவை மிக்க இளநீர்.

**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி**
**என்று தருங்கொல் எனவேண்டா—நின்று**

தளரா வளர்தெங்கு தாள்உண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்

என்று வாக்குண்டாம் இச் செய்தியைப் பாடிற்று.

அறங்களை நாளும் நாடிச் செய்யவேண்டும் என்பது வாழ்வியல் நெறியாகும். மாறாக அறங்களை ஆற்றாமற் சிதைத்தல் அடாத செயலாகும். அதிலும் பெரிய அறங்களைச் சிதைத்தல் என்பது மன்னிக்க முடியாத பெருங்குற்றமாகும். ஒருவன் பேரறங்களைச் சிதைத் தாலுங்கூட, பாவம் என்னும் ஆழ் நரகிலிருந்து மீண்டு விடலாம். ஆனால் ஒருவன் செய்த நன்றியைச் சிதைத்த மகனுக்கு எவ்வகையிற் பார்த்தாலும் பாவத்திலிருந்து நீங்கும் தன்மை என்பது உண்டாகாது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்ப் பெரும் பாவங் களாகக் கருதப் பட்டனவாகப் புறநானூற்றுப் பாடலொன்று (34) பின்வரும் பாவங்களைக் குறிப்பிடு கின்றது பசுவின் மடியை அறுத்தல், மகளிர் தம் கருச் சிதைத்தல், பெருமுது குரவரைப் பிழைத்தல் என்பனவாம் அவை.

ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வது ஆயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ

—புறநானூறு; 34:1—7

இப்பாட்டால் திருக்குறளுக்கு 'அறம்' என்றொரு பெயரும் வழங்கியிருக்குமோ என்பதும் புலனாகின்றது.

துன்பக் காலத்து நமக்கு உதவிய ஒருவனுக்கு அவன் துன்பப்படுங்காலையில் உதவவில்லை எனில் அது அவன் பரம்பரைக்கும் ஆகாது என முழங்கும் 'கற்றறிந்தார் ஏத்தும் கலி'.

**ஒற்கத்துள் உதவியார்க்கு உதவாதான் மற்றவன்**
**எச்சத்து ளாயினுமஃ தெறியாது விடாதேகாண்**

—கலி; 149:6—7

கவிச்சக்கரவர்த்தி கம்பநாடரும் செய்ந்நன்றியறிதலின் திறத்தினைப் பின்வரும் பாடலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்.

**சிதைவகல் காதல் தாயைத் தந்தையைக் குருவைத் தெய்வப்**
**பதவிஅந் தணரை ஆவை பாலரை பாவை மாரை**
**வதைபுரி குநர்க்கும் உண்டாம் மாற்றலாம் ஆற்றல் மாயா**
**உதவிகொன் றார்க்குஒன் றானும் ஒழிக்கலாம் உபாயம்**
**உண்டோ**

—கம்ப; கிட்கிந்தை. 6

இதனையே இளங்கோவடிகள்,

**செய்ந்நன்றி கொல்லன்மின்**

—சிலம்; 30:191

என்றார்.

உலக மகாகவி ஷேக்ஸ்பியரும் 'நீ விரும்பியவாறே' (As you like it) என்னும் நாடகத்தில்,

Blow, blow thou winter wind
Thou art not so unkind
as man's ingratitude

என்று குறிப்பிடுவது காணலாம்

**சுழன்றடி சுழன்றடி குளிர்காலக் காற்றே**
**மனிதரின் செய்ந்நன்றி மறத்தல் போல்**
**நீ அன்பற்று வீசவில்லை**

என்பது செய்ந்நன்றியறிதலின் சிறப்பைப் புலப்படுத்தும்.

# 5. நடுவு நிலைமை

**நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை**
**அன்றே ஒழிய விடல்** (113)

தீங்கன்றி நன்மையே தந்தாலும், நடுவு நிற்றலை ஒழிதலால் உண்டாகின்ற ஆக்கத்தை அப்பொழுதே ஒழிய விடுக என்பது வான்புகழ் வள்ளுவர் வழங்கும் செய்தியாகும்.

உலகில் வாழ்வோரில் இருவகை உள்ளனர். எப்படியாவது வாழ வேண்டும் என்று எண்ணி வாழ்பவர் ஒரு வகை; இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்பவர் பிறிதொரு வகை. எப்படியாவது வாழலாம் என்பவர் நெறிமுறைகளைப் பற்றி அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. இப்படித்தான் வாழ வேண்டும் என்பவர்கள் வயலுக்கு வரப்பமைத்து வாழ்பவர்கள்போல் நெறிமுறைகளைப் போற்றி அவற்றின் வழியே ஒழுகுபவர்களாவர்.

எப்படியாவது வாழலாம் என்பவர் வாழ்க்கை உடனடி வெற்றியினை நோக்கியதாகும்; இப்படித்தான் வாழ வேண்டும் என்று எண்ணுபவர் வாழ்க்கை, உடனடி வெற்றியினை நோக்காது அவ்வெற்றி என்னும் இலக்கை அடைய எடுத்துக்கொள்ளும் முயற்சியை—மேற்கொள்ளும் வழிமுறைகளைப் பற்றியதாகும்.

நம் நாட்டின் தந்தை அண்ணல் காந்தியடிகள் கூறுவார் : "நாம் மேற்கொள்ளும் இலட்சியம்—குறிக்கோள் மட்டும் உயர்ந்ததாக இருந்தாற் போதாது;

அந்த இலட்சியத்தை—குறிக்கோளை அடைகிற வழி முறைகளும் தூயனவாய் உயர்வுடையனவாய் இருக்க வேண்டும்" என்பர். இதனை ஆங்கிலத்தில் "Mean should justify the ends" என்று குறிப்பிட்டார்.

இன்று வேகமும், பரபரப்பும், போட்டியும் நிறைந்த இந்த உலகத்தில் எப்படியும் இலட்சியங்களை அடைந்து விட வேண்டும் என்றே பலரும் துடிக்கின்றனர். அந்த இலட்சியத்தை நேர்வழியில்—நேரிய வழியில் அடைய முடியாதநிலை ஏற்படுகின்ற பொழுது, குறுக்கு வழியிற் சென்றாவது மேற்கொண்ட இலட்சியத்தை அடைந்து தீர வேண்டும் என்று ஆரா வேட்கை கொள்கின்றனர்.

நம் பாரத நாட்டின் விடுதலைப் போராட்டத் தினையே கருத்திற் கொள்வோம். அண்ணல் காந்தியடிகள் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்யாமல், இன்னா செய்யாமை— அதாவது அகிம்சை நெறியில் நின்றுபோராடி, ஆங்கிலேய ஆட்சியை அகற்ற வேண்டும் என்று பாடுபட்டார். அதற்கு மாறாக வேறு சில தலைவர்கள் பலாத்காரத்தில் நம்பிக்கை வைத்து, ஆங்கிலேயர்களைக் கொன்று குவித்து, துப்பாக்கி முனையில் சுதந்திரத்தைப் பெற வேண்டும் என்று எண்ணி அந்த வகையில் தம் முயற்சியையும் மேற் கொண்டனர். பின்னவரின் நோக்கம்—இலட்சியம்— குறிக்கோள்—நல்லதுதான். ஆனால் அந்த இனிய இலட்சியத்தை அடைய அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள்தாம் நடுவுநிலைமை என்னும் நற்பண்புப் பாதையினின்று நீங்கியவைகள் ஆகும்.

நடுவுநிலைமை என்றால் என்ன? பகைவர், தெரிந்தவர், நட்பினர் என்னும் மூவரிடத்தும் அறத்தின் வழுவாது ஒப்ப நிற்கும் தன்மையாகும். மணக்குடவர்

'நட்டார் மாட்டும் பகைவர் மாட்டும் ஒக்க நிற்கும் நிலைமையே' நடுவுநிலைமை என்பர்.

இறைவனால் படைக்கப்பட்ட ஐம்பெரும் பொருள்கள் (பஞ்சபூதங்கள்) நிலம், நீர், காற்று, தீ, வான் என்பர். இவ்வைந்து பொருள்களையும் சற்று நோக்குவோம். தம்மை வெட்டித் தோண்டுபவரையே தாங்கி நிற்கிறது நிலம் (அகழ்வாரைத் தாங்கும் நிலம்). நீர் இன்னார் இனியார் என்னாமல் எல்லார்க்கும் தன்னைவழங்குகிறது. காற்று, இன்னவர் வேண்டியவர், இன்னார் வேண்டாதவர் என்று பாடுபாடு காட்டி வீசுவதில்லை. எல்லோர்க்கும் ஒன்றாகவே வீசுகிறது. நெருப்பும் அவ்வாறே எவரிடமும் பாகுபாடு காட்டாமல் தன்னைச் சார்ந்தவர் அனைவரையும் சுட்டுப் பொசுக்குகிறது. வானம், அதன் கூரையின் கீழ் உள்ள எல்லோர்க்கும் பொதுவாகவே காட்சி தருகின்றது இவ்வைம் பெரும் சக்திகளும் எவ்வாறு நடுவு நிலைமை பிறழாமல் இயங்குகின்றனவோ, அவ்வாறே மனிதனும் இயங்க வேண்டும் என்பது குறிப்பு.

ஞாயிற் றன்ன வெந்திறல் ஆண்மையும்
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையும் மூன்றும்

—புறநானூறு; 55:13—15

சூரியன் எல்லோரையும் சுடுகிறது; நிலா எல்லோரையும் குளிர் விக்கிறது; வானம் எல்லோர்க்கும் மழை தருகிறது. இதுபோன்றே வாழ்க்கையில் ஒவ்வொருவரும் நம்மவர்—நமக்கு வேண்டியவர் என்கின்ற காரணத்தால் அவ்வொருவருக்காக நடுவுநிலைமையிலிருந்து பிறழ்ந்துவிடுவதும், நமக்கு வேண்டாதவர் என்கின்ற காரணத்திற்

காக அவருடைய குணங்களையெல்லாம் பாராட்டாது விடுவதும் அறத்தின்பாற்பட்ட செயல்களாகா என்பது சங்ககாலச் சான்றோர் மதுரை மருதன் இளநாகனார் கருத்தாகும்.

தீய வழியில் ஈட்டி, நல்ல அறச்செயல்களுக்குப் பணத்தைச் செலவிடலாம் என்பது சிலருடைய கருத்து. அக்கருத்தினைக் கலித்தொகை வன்மையாக மறுக்கின்றது. நடுவுநிலைமையினின்றும் நீங்கித் தகாத வழியில்திரட்டிய பொருள் இந்த பிறவியில் மட்டுமின்றி மறுபிறவியிலும் பகையாகும் என்கிறது அந்நூல்.

செம்மையின் இகந்தொழிஇப் பொருள் செய்வார்க்கு அப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயோ
(—கலி; 4:14—15)

எனவே பாரதி கூறியபடி நல்லவே எண்ண வேண்டும்; திண்ணிய நெஞ்சம் வேண்டும்; தெளிந்த நல்லறிவு வேண்டும். எனவே எவ்வளவுதான் நன்மையைப் பயப்ப தாக இருந்தாலும், நடுவுநிலைமையினின்றும் நீங்கியமை யால் வரும் ஆக்கத்தினை அந்தக் கணத்திலேயே நீக்கி விடுதல் நலம பயப்பதாம் என்கிறார் தெய்வப்புலவர் திருவள்ளுவர்.

# 6. அடக்க முடைமை

**காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்**
**அதனினூஉங் கில்லை உயிர்க்கு** (122)

ஐம்பெரும் பூதங்கள்வழி உலகம் இயங்குவதுபோல் ஐம்புலன்கள்வழி மனிதன் இயங்குகின்றான். "ஐம்புல வேடரால் ஆட்பட்டு" என்பது ஆன்றோர் அருளிய அருள் வாக்கு. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன் களும் மனிதனை இயக்குகின்றன. இவற்றின் கருவியாக மனிதன் அமைந்து விடுவானேயானால் அது துன்பமாக முடியும். இவ்வைம்பொறிகள் வழி மனிதன் இயங்காமல் இவ்வைம் பொறிகளையும் அவன் இயக்கிச் செல்லுதல் வேண்டும். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் கருவிகளாகும்; மனிதனின் உறுப்புகளாகும். உறுப்புகளை இயக்க வேண்டியது—உறுப்பியின்— அதாவது மனிதனின் கடமையாக இருக்க, மாறாக அம் மனிதன் அவ்வுறுப்புகளினால் இயக்கப் பெற்றால் நிலைமை தலை கீழாகத்தானே மாறும்?

"அறிவுவழிச் செல்கிறவனுக்கு வாழ்க்கை ஓர் இன்ப நாடகம்; உணர்ச்சி வழிச் செல்பவனுக்கு அஃதோர் அவல நாடகம்" என்றார் அறிவுமேதை வால்டேர். அறிவுக்கும் உணர்ச்சிக்கும் எப்போதும் போராட்டம் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றது. அறிவு வென்றால் மனிதன் ஆக்கம் பெறுகிறான். மாறாக உணர்ச்சி வென்றால் மனிதன் சீரழிந்து போகிறான். உணர்ச்சி என்னும் மதம் பிடித்த யானை தன் போக்கிற் போகாமல், அறிவு என்னும் அங்குசத்தால் மனிதன் தன் வயப்படுத்திப் பணி கொள்ளுவது போல, மனம், மொழி, மெய் மூன்றும் தீ

நெறிக்கண் சென்றால், அவ்வாறு செல்ல விடாமல் அடக்கிப் பணிவுடையனாக அமைதல் மனிதனுக்கு வேண்டிய மாறாத பண்புகளாகும்.

ஒருவன் அடக்கமாக இருந்தால் அமரர் உலகையும் அடையலாம்; அடங்காதவனாக இருந்தால் அவன் நரகருலகுதான் செல்லவேண்டும். இந்தப் பிறவியில் அடக்கமாக வாழ்ந்து புகழ் பெற்றால் உறுதியாக உயர் நிலையை அடையலாம் என்று அறநெறிச்சாரம் குறிப்பிடு கின்றது.

இம்மை அடக்கத்தைச் செய்து புகழாக்கி
உம்மை உயர்கதிக் குய்த்தலான்

—அறநெறி : 43.

எனவே உயிர்களுக்கு அடக்கத்தைக் காட்டிலும் பெரிய செல்வம் இல்லை. ஆதலால் அந்த அடக்கத்தை வாழ்க்கை யின் உறுதிப் பொருளாகக் கொண்டு அழியாமல் காக்க வேண்டும் என்று திருவ்ள்ளுவர் வற்புறுத்துகின்றார்.

செல்வம் உடையார் உலகில் தருக்கித் திரிவது இயற்கை யான் ஈட்டிய செல்வம் ஏழு தலைமுறை களுக்கும் வரும் என்று கூறி, அடங்காமல் ஆர்ப்பரிப்பர் செல்வர். அத்தகைய செல்வர் பணிந்தே போக வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். எல்லாருக்கும் பணிவுடைமை என்கிற பண்பு வேண்டப்படுவதே என்றாலுங்கூடப் பணக்காரர்களுக்குஅப்பண்பு கட்டாயம்தேவை என்கிறார் வள்ளுவர். ஏனெனில் தாங்கள் ஈட்டிய பொருளைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அப்பணிவுடைமை துணை நிற்கும் என்கிறார். செல்வர்க்கே அமையும் மற்றொரு செல்வம் பணிவுடைமை என்றும் கூறுவர்.

"ஒட்டகம் ஊசி முனையில் நுழைந்தாலும் நுழைய லாம்; ஆனால் பணக்காரன் பரமண்டலத்தில் நுழைய முடியாது" என்பதாக விவிலியம் கூறும். பொறுமைக்கும் அன்பிற்கும் அடக்கத்திற்கும் அருளிற்கும் ஒரு நிலைக்களனாகத் திகழ்ந்த ஏசுபெருமான் ஏழைகளுக்கே மோட்சவுலகம் என்று தம் மலைப்பொழிவில் பொழிந்த தாகக் கூறுவர்.

Blessed are the poor in spirit, for
theirs is the Kingdom of heaven

-Matt; 5 : 3

Blessed are the meek for they shall inherit the earth

Matt; 5 : 5

திருநாவுக்கரசர் பெருமான் வாழ்க்கையினை அடக்கத்திற்கோர் எடுத்துக்காட்டாய்க் கொள்ளலாம். திருஞான சம்பந்தர் சிவிகையில் திருப்பூந்துருத்தி நோக்கி வருகிறார். ஊரின் மருங்கே அவர் வரவை நோக்கிக் காத்திருக்கும் அவரினும் வயதும் அனுபவமும் மிக்க திருநாவுக்கரசர் காத்து நிற்கிறார். சிவிகையைக் கண்ட மாத்திரத்தில் அதைத் தாங்கும் ஓர் அடியாராகத் தம்மை மாற்றிக் கொள்கிறார். திருப்பூந்துருத்தியருகில் திருஞான சம்பந்தக் குழந்தை, "எங்குற்றார் அப்பர்?'' என்கிறது. "உம் அடியேன்; ''உம் அடிகள் தாங்கிவரும் பெருவாழ்வு வந்தெய்தப் பெற்று இங்குற்றேன்' என்கிறார் ஆளுடைய அரசு. ''என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற வாக்கிற்குச் சொந்தக்காரர் அல்லவா அப்பர் பெருமான். அவர் அடக்கத்தின் எல்லையாகத் திகழ்ந்த திறத்தினை அவர் வாழ்விற் கண்டோம். இந்த அடக்கமுடைமை என்னும் செல்வமே, மகேந்திர வர்ம பல்லவனால் தீங்கு வந்துற்றபொழுது

நாமார்க்கும் குடியல்லோம்; நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை யில்லோம்;
ஏமாப்போம்; பிணியறியோம் பணிவோ மல்லோம்;
இன்பமே எந்நாளும் துன்பமில்லை

*மறுமாற்றத்திருத்தாண்டகம் : 1*

என முழங்க வைத்தது.

"தன்னைத்தான் தாழ்த்திக் கொள்பவன் எவனோ, அவனே பிறரால் உயர்த்தப்படுவான்" என்று ஏசுநாதர் கூறுவார் :

......And he that humbleth himself
shall be exalted

Luke 18 : 24

எனவே அடக்கத்தை ஓர் ஒப்பற்ற பொருளாகக் கருதி—உறுதிப் பொருளாகக் கொண்டு ஒவ்வொருவரும் போற்றிக் காக்கவேண்டும். அந்த அடக்கத்தைக் காட்டிலும் மேம்பட்ட ஆக்கம் உயிர்களுக்கு இல்லை என்பதை உணர வேண்டும். இவ்வாறு உணர்ந்தால் அவ்வடக்கமுடைமை காரணமாக ஒருவன் வாழ்க்கையில் உயர்வதென்பது உறுதி; புகழ் பெறுவதென்பது அதனினும் உறுதி; வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதென்பது உறுதியினும் உறுதி.

# 7. நாலடியார் நல்லுரை

## 1. ஆறுவது சினம்

**மதித்திறப் பாரும் இறக்க; மதியா**
**மிதித்துஇறப் பாரும் இறக்க—மிதித் தேறி**
**ஈயும் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்**
**காயும் கதமின்மை நன்று**

*—நாலடியார்; சினமின்மை :1 (61*

அறநெறி மேற்கொண்டு, அறநெறியினைக் கடைப் பிடித்தொழுகி, அறநெறியினைப் போதித்து வாழ்ந்தவர் கள் சமண முனிவர்கள் ஆவர். இல்லற நெறியில் ஈடுபட்டு வாழாத இம் முனிவர்கள் இல்லற இன்பம் சிறக்க, இல்லம் பொலிவும் பொற்பும் பெற்றுத் திகழப் போதித்துச் சென்ற பாக்களின் தொகுதியே நாலடியார் என்னும் நல்லற மருந்தாகும். அறத்துறையில் ஒரு மனிதனை ஆற்றுப் படுத்தும் திறல்வாய்ந்த நாலடியாரின் நலமுறு பாக்கள், மனிதன் இப்படித்தான் வாழ வேண்டும் என்னும் வழியினைப் புலப்படுத்தி நிற்கின்றன.

கோபம் பொல்லாதது என்பர். சினமடக்கக் கற்றல் அரிய கலை என்பர் ஆன்றோர். சினமின்மை என்னும் பண்பு வாய்த்து விட்டால் இவ்வையகத்தில் வெற்றி முரசு கொட்டலாம்.

**குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி**
**கணமேயுங் காத்தல் அரிது** (குறள் 29)

என்றார் திருவள்ளுவர். முற்றத் துறந்த முனிவர்களாலும் சினத்தை அடக்குதல் கடினம் என்றால் அந்தச் சினத்தால் வரும் தீங்குகள் மிகப் பலவாம். எனவேதான் திருவள்ளுவர் 'வெகுளியை யார்மாட்டும்மறக்க' என்றும், சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்' என்றும் சொன்னார்.

'ஆறுவது சினம்' என்பது ஆத்திசூடி. 'தீராக் கோபம் போராய் முடியும்' என்பது கொன்றைவேந்தன். உலகநீதி என்னும் நீதி நூல், 'சினந்தேடி அல்லலையும் தேட வேண்டாம்' என்று புகல்கிறது.

உலக மக்கள் அனைவரும் இறைவன் படைப்பு என்றும், எந்தவொரு மனிதருக்கும் ஒவ்வொரு செயல் எளிது என்றும் அறிஞர் உரைப்பர். எனவே மனிதர் அனைவரும் சமம் எனக்கொண்டு ஒவ்வொருவரிடத்தும் அன்பும் மதிப்பும் செலுத்தி வாழுவதே ஒருவருடைய கடமையாக இருக்கவேண்டும். ஆறறிவுடைய மக்களை மட்டுமன்றி, ஆறறிவுக்கும் குறைவுபட்ட உயிரினங்களிடத்திலும் அன்புசெலுத்தி வாழ்ந்த இனம் தமிழினம் எனப் பழந்தமிழ் இலக்கியங்கள் பறைசாற்றும். எனவே மரியாதை தந்து மரியாதை பெறுதல் என்றபடி வாழ்வு அமைய வேண்டுமேயானால் முதற்கண் கோபம் என்ற கொடிய பண்பினை அடியோடு விட்டொழிக்க வேண்டும். "உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம்" என்று அறம் உரைக்க வந்த புலவர் ஒருவர் சினத்தை வருணிக்கிறார். அத்தகைய சினத்தை அடக்கிக் காத்துக் கொள்ளுகின்ற குணத்தையே குணம் என்று நம் பெரியவர்கள் கொண்டனர்.

உலகில் இரு வகையினர் உள்ளனர். ஒரு வகையினர், பிறரை மதித்து நடக்கின்றனர்; மற்றொரு வகையினர்

பிறரை மிதித்து நடக்கின்றனர். இந்த இருவகை மனிதர்களில் பிறரிடம் மதிப்புக் குறைவாக நடப்பவர்கள் ஒன்றை உற்று நோக்க வேண்டும். உயிரினங்களில் அற்ப உயிரினம் ஈயாகும். ஈ என்பது ஓரெழுத்தொருமொழி. ஈயென இளிக்காதே என்று நாட்டு வழக்கில் ஒரு சொல்லும் உண்டு 'கொல்லன் உலைக்களத்தில் ஈக்கென்ன வேலை?' என்ற பழமொழியும் உண்டு. மிகக் கேவலமாக எவராலும் மதிக்கப்படுகிற ஈ, மிகப் புனிதமாக நினைக்கத்தக்க, ஏன் வணங்கத்தக்க தகுதியினையும் உடைய ஒரு முற்றும் துறந்த முனிவரின் உடம்பு முழுவதிலும் உட்காரக் கூடிய ஆற்றல் பெற்றுள்ளது ஈ பொதுவாகத் தூய்மையான பொருள்களில்தான் எப்போதும் போய் அமரும் என்று சொல்ல முடியாது எது தூய்மையான பொருள், எது தூய்மையற்ற பொருள் என்றுங்கூட வேறுபாட்டினைக் காணக் கூடிய திறம் ஈக்குக் கிடையாது. எனவே தூய்மையற்ற பொருளில் உட்கார்ந்து விட்ட நிலையினையடுத்து, அந்த ஈ, தூய்மைக்கே நிலைக்களனாக உள்ள ஒரு புனிதமான பொருளிலும் சென்று அமரலாம். அதனைத் தடுத்துவிட முடியாது. ஆக, வாழ்க்கையில் அனைவராலும் அற்பமாகக் கருதக்கூடிய ஈ கூட, ஒரு புனிதமான மனிதரின் உடம்பில் எந்தப் பகுதியில் வேண்டுமானாலும் போய் அமர்ந்து பின் அவரின் தலையிலேயே கூடப் போய்த்தங்கி விடும் ஆற்றலினையும் பெற்றிருத்தலைக் காணும்பொழுது, தம்மையொத்த மக்கள் தம்மை மதியாது நடத்தலை ஒரு குற்றமாகக் கருதிவிடக்கூடாது. அவ்வாறு கருதிவிடுவதே தவறுஎன்கிற நிலையில் அதற்காக—தம்மை மதிக்கவில்லை என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள் மீது சினங்கொண்டு விடுதலாகாது என்கிறது நாலடியார்ப் பாட்டு.

நெருப்பிலே தோய்த்தெடுத்தது போன்ற தீமை யினையே ஒருவர் செய்யினும் அவரிடத்துச் சினங் கொள்ளக் கூடாது என்ற பொருளில் வள்ளுவப் பெருந் தகை,

இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று

—திருக்குறள்: 308

என்று குறிப்பிடுகின்றார். தன்னுடைய கோபம் செல்லு மிடத்தில், வெல்லுமிடத்தில் காப்பவனே சிறந்தவன்; தன் கோபம் வெற்றி பெறாவிடத்தில் கோபத்தை அடக்கிக் கொள்பவனைப் பாராட்டுவது எற்றுக்கு?

எனவே நாலடியார்ப் பாட்டு, நாம் அன்றாட வாழ்விற் காணும் ஓர் ஈயின் வாழ்க்கையினை எடுத்துக் காட்டி, அந்த ஈ, ஒரு மனிதனின் எந்த உறுப்பில் போய் உட்கார்ந்து, தலையிற் போய்த் தங்கினும் ஒருவன் அந்த ஈயினைக் கோபித்துச் செயலொன்றும் மேற்கொள்ளாமல் வாளாயிருத்தல் போலவே, ஒவ்வொரு மனிதனும் தன்னை மதியாது மிதித்து, நடப்பவராயிருந்தாலும் அவரிடத்தில் கோபங்கொள்ளாது இருத்தலே வாழும் நெறி என்று புலப்படுத்தி நிற்கிறது.

மதித்திறப் பாரும் இறக்க; மதியா
மிதித்திறப் பாரும் இறக்க—மிதித்தேறி
ஈயும் தலைமேல் இருத்தலால் அஃதறிவார்
காயும் கதமின்மை நன்று.

## 2. கல்வி

**இம்மை பயக்குமால், ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால், தாம் உளராக் கேடின்றால்**
**எம்மை உலகத்தும் யாம் காணோம்; கல்விபோல்**
**மம்மர் அறுக்கும் மருந்து.**

—நாலடியார்; கல்வி: 2 (132)

'அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார் அறிவிற் சிறந்த ஔவை பிராட்டியார். மனிதப் பிறவி மதிக்கப்படுவதற்கே காரணம் அப்பிறவி ஆறறிவு வாய்த்திருப்பதுதான். நல்லது இது, கெட்டது இது என்று பகுத்தறிகின்ற பகுத்தறிவு மனிதப் பிறவிக்கே வாய்த்திருக்கின்றது. ஆறறிவு உடைய உயிர்க் குலத்தை மக்கள் என்றும் ஆறறிவிற்குக் குறைந்த உயிரினங்களை மாக்கள் என்றும் வழங்கும் வழக்கு தமிழில் உண்டு.

கல்வி என்ற ஒன்றே மனிதனை முழுமையுடையவனாக்குகின்றது. இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கெல்லாம் எண்ணும் எழுத்தும் கண்கள் என்பர் வள்ளுவர். 'கண்ணுடையவர் என்பவர் கற்றோர்' என்பதும் அவர் வாக்கு. ஒருவன் பெறக்கூடிய செல்வங்களில் கெடுதலில்லாத் தலையாய செல்வம் கல்வி; மற்றச் செல்வங்களெல்லாம் செல்வங்களென்று போற்றப்பட மாட்டா என்னும் கருத்தில் திருவள்ளுவர் பெருமான்,

**கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு**
**மாடல்ல மற்றை யவை**

—(குறள் 400)

என்றார்.

எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்

என்று கொன்றைவேந்தனும்,

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்

என்று உலகநீதியும் உரைத்தன 'கல்' என்ற சொல்லிற்கே தோண்டுதல் என்று பொருள் கூறுவர். அறியாமை என்னும் இருளை அகத்திலிருந்து அகற்றி, அறிவு என்னும் ஒளியை அகத்தில் பாய்ச்சுவதற்குக் கல்வி தேவை. 'கல்வியில்லாத பெண்களைக் களர் நிலம்' என்பர் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். தமிழ்நாடு தொன்னெடுங்காலத்திலேயே அறிவிற்சிறந்த ஆன்றோர் பெருமக்களைப் புலவர்களாகப் பெற்றிருந்தது. எனவே தான் சங்ககாலம் என்னும் தமிழின் பொற்காலத்தில் புலவர் பெருமக்கள் மிகப் பலர் வாழ்ந்து எண்ணற்ற பாடல்களை இயற்றிச் சென்றுள்ளனர். இது குறித்தே தான் பாட்டுக்கொரு புலவன் என்று நாட்டு மக்களால் நலமுறப் போற்றப்பெறும் மகாகவி பாரதியாரும் தமிழ் நாட்டைக் "கல்வி சிறந்த தமிழ்நாடு" என்றார்.

கல்லார் நெஞ்சில் நில்லார் ஈசன்

என்றும் ஆன்றோர் அருளியுள்ளனர். எனவேதான் நறுந்தொகை என்னும் நற்றமிழ் நூல்,

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

என்று கூறிற்று. பதினேழாம் நூற்றாண்டின் இணையிலாப் புலவரான குமரகுருபரர் 'சிற்றுயிர்க்குற்ற துணை' கல்வியைக் காட்டிலும் பிறிதொன்றில்லை; ஏனெனில்

அஃதொன்றே 'அறம் பொருள் இன்பமும் வீடும் பயக்கும்' என்றார்.

நாலடியார்ப் பாடலும் கல்வியினைப் போல் அறியாமையினை அறுக்கும் நன்மருந்து வேறொன்றும் இல்லை என்ற பொருளில் 'கல்வி போல் மம்மர் அறுக்கும் மருந்து எம்மை உலகத்தும் யாம் காணோம்' என்றார். எந்த வுலகத்திலும் காணமுடியாத அளவிற்குக் கல்வி என்னும் அருமருந்து அமைந்திருப்பதற்கு அதனிடத்துக் காணப் படும்சிறப்புகள் யாவை? அவற்றை நாம் கண்டறிய வேண்டாமா?

முதற்கண் மனிதன் இப்பிறவியில் அடைவதற்குரிய இன்பங்களைக் கொடுக்கும். அக்கல்விச் செல்வமானது கிள்ளக் கிள்ளவும் குறையாது; அள்ள அள்ளவும் வற்றாது. பிறர்க்குக் கொடுத்தலினால் செல்வம் குறைந்து போகும்; ஆனால்கல்விச் செல்வம் குறைவுபடாது; மேலும் கல்வியுடையவர் புகழ் கடல் கடந்தும் சென்று நெடுந் தூரம் நிலைத்து நிற்கும். அக்கல்வி கற்றவர் உயிரோடி ருக்கும் வரையிலும் ஒரு நாளும் அழியாது என்று கூறிக் கல்வியின் சிறப்பினைக் கவினுறப் போற்றுகின்றது நாலடியார். இக் கருத்தினையே வேறொரு வகையில் விளக்கமுறும்வண்ணம் மற்றொரு நாலடியார்ப் பாடல் நவிலுகிறது கல்வி ஒருவர் வைத்துள்ள இடத்திலிருந்தும். பிறரால் கைக்கொள்ளப்படமாட்டாது; தகுதியுடைய மாணாக்கனுக்குக் கொடுத்தால் ஒருநாளும் குறையாது; மிகுந்த சிறப்பினையுடைய அரசர் கோபித்துக் கொண்டாலும் கல்வியைப் பறிமுதல் செய்ய இயலாது; ஆதலால் ஒருவன் தன் மக்களுக்குத் தன் காலத்திற்கு எஞ்சி நிற்கும் பொருளாகச் செய்யத் தகுவன இக்கல்வியே யாகும் என்கிறது அப்பாடல்.

வைப்புறிக் கோட்படா; வாய்த்தீயின் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்;
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற —நாலடியார் 134

எனவே கல்வி என்பதன் இன்றியமையாமையை வற்புறுத்தாத நூல் இல்லை. "கல்வி கற்கையில் கசப்பு; கற்றபின் இனிப்பு" என்று கூறி இளைஞர்களை ஊக்குவிக்கும் நிலையினையும் காணலாம். கடிதாயிருக்கு மிப்போது; கல்வி வேளைதோறும் சென்று கற்பதால் படியும் அப்போது" என்பார் பாவேந்தர். எனவே கல்வி என்னும் பேறு வாய்த்தவர் வழியேதான் அரசனும் நடப்பான் என்பனை "அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்" என்று புறநானூறு கூறும். "எக்குடியிற் பிறந்து யாவரேயாயினும் அக்குடியிற் கற்றோரை மேல்வருக என்பர்" என்பதும், "மன்னர்க்குந் தன்தேசமல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு'' என்பதும் பொருள் மொழிகளன்றோ. இதனாலன்றோ புறநானூற்று புலவர் ஒருவர் நெஞ்சார்ந்த பெருமிதத்துடன் ''எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்றார். இதனையே குறள் தந்த கோமான்,

யாதானும் நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு (குறள் 397)

என்றார். அந்தக் கருத்திலேதான் நாலடியாரும்,

இம்மை பயக்குமால்; ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால்; தாம் உளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாம்காணோம்: கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து

என்றது.

## 3. முயற்சியுடைமை

**ஆடுகோ டாகி அதரிடை நின்றதூஉம்**
**காழ்கொண்ட கண்ணே களிறணைக்கும் கந்தாகும்**
**வாழ்தலும் அன்ன தகைத்தே ஒருவன்தான்**
**தாழ்வின்றித் தன்னைச் செயின்**

*—நாலடியார்; தாளாண்மை; 2 (192)*

**முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை**
**இன்மை புகுத்தி விடும்**

*(—குறள் 616)*

*முயற்சி என்பது ஒருவனை முடிநிலைக்கு உயர்த்தும் திறம் சான்றதாகும். தாள் என்றால் கால், அடி, பாதம் என்பதாகும். காலின் செயலை முயற்சி என்றனர். தாளாண்மை என்றால் முயற்சியுடைமை என்றாகும். ஒருவர் வாழ்க்கையில் உயர முயற்சி தேவை. முயன்றால் உலகில் முடியாப் பொருள் இல்லை என்பர். ஒரு குடியின் பெருமையினை உயர்த்தப் பாடுபட்டு உழைக்கும் ஒருவனுக்குத் தெய்வமே துணைக்கு வந்து சேரும் என்பர் திருவள்ளுவர்.*

**குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்**
**மடிதற்றுத் தான்முந் துறும்**

*—(குறள் 1023)*

*திருவள்ளுவர் மேலும் சொல்லுவார்*

**தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன்**
**மெய்வருத்தக் கூலி தரும்** *—(குறள்—619)*

*இதுமட்டும் அல்ல; விதி என்ற ஒன்றையும் எஞ்ஞான்றும் முயற்சி மேற்கொண்டு உழைப்பவர் வெல்லுவர் என்ற பொருளில்,*

ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்

—(குறள் 620)

என்றும் கூறிப் போந்தார்.

ஊக்க முடைமை ஆக்கத்திற் கழுகு

என்கிறது கொன்றைவேந்தன் (86). முயற்சியுடையோரின் சிறப்பினைப் பழம் பாடலொன்று பலபடியாகப் பேசுகின்றது.

மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்

எனவே முயற்சி சிறக்க வாழ்பவர் அந்நிலைக்கு வர எப்பாடுபட்டிருக்க வேண்டும் என்பதனை அறியலாம்.

உறுதியற்று அசைகின்ற கொம்பினையுடையதாக வழியிலே நின்ற இளமரமும் உறுதி வாய்ந்த மரமாகக் காலப்போக்கிலே வளர்ந்த பிறகு, ஒரு பெரிய யானை யினைக் கட்டுவதற்குரிய கட்டுத்தறியாகவும் ஆகும். அது போல் ஒருவன் தன்னை எல்லா வகையாலும் குறை வற்றவனாகச் செய்து கொள்வானேயானால், அவன் வாழ்க்கையும் அவ்வாறே சிறப்புறுவதாக அமையும் என்று நாலடியார்ப் பாட்டு ஏற்றமுடன் எடுத்துரைக்கின்றது.

சிறுசெடியாக இருக்கும்பொழுது வளையும் தன்மை யுடைய ஒன்று காலப் போக்கில் வளர்ந்து உறுதியுடைய தாகிறது. அசையும் நிலையில் இருந்த செடி, இன்று அசையா நிலைக்கு, யானை கட்டினாலும் அசைய முடியாத நிலைக்கு மரமாக மாறிவிட்டது. எனவே

"முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்" என்றபடி முயற்சி முன்னேற்றங்களை முறையே தரும் பெருமை சான்றதாகும். மேலும் உழைக்காமல், முயற்சி மேற்கொள்ளாமல் சோம்பேறியாக இருக்கும் ஒருவனிடம் எந்த ஆக்கமும் உண்டாகாது. "தெண்ணீர் தாம் தந்தது உண்ணலின் ஊங்கினியது இல்" என்பர். அதாவது முயற்சியால் கிடைப்பது எளிய பொருளாக இருந்தாலுங் கூட அதனை உண்ணும்பொழுது ஏற்படும் இன்பம் அளவற்றதாக இருக்கும்.

முயற்சியற்றவர்கள் எவ்வளவுதான் ஆற்றல் உடையவராயிருப்பினும் பயன் இல்லை; முயற்சி மேற்கொள்பவர் தொடக்கத்தில் ஆற்றல் குறைந்தவராயிருந்தாலும், படிப்படியே அவர்கள் பல வெற்றிகளைப் பெற்று உயர்வர் என்பது உறுதி.

**தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
**வேளாண்மை செய்தற் பொருட்டு**

(குறள்—212)

என்பர் வள்ளுவர். முயற்சியுடையவரே பிறருக்கு உதவி செய்யும் நிலைக்கு உயரமுடியும். "அலைகள் ஓயாமல் மோதும் போதும் கற்பாறை போன்று மனவலிவோடு இரு; அது தன்னைச் சூழ்ந்துள்ள நீரின் வேகத்தை அடக்குவது போல முயற்சியுடையவரும் ஒருநாள் துன்பங்களையும் தொல்லைகளையும் வென்று வெற்றிபெறுவர்" என்று அறிஞர் உரைப்பர். வலிமைமிக்க புலியேயாயினும் தனக்கேற்ற இறைச்சியாகிய இரை கிடைக்கப் பெறாமையால் ஒரு நாளைக்குச் சிறிய தவளையையும் கூடப் பிடித்துத் தின்னும்; அதனால் ஒருவர் எத்தொழிலையும் அற்பமான தொழிலென்று கருதக்கூடாது; ஏனென்றால் அவ்வற்பமான தொழிலே ஒருவனுடைய முயற்சியால்

மேலான தொழிலாக அமைந்துவிடும் என்ற கருத்தில் சமண முனிவர் ஒருவர் பாடிய பாட்டொன்றினை நாலடியாரிற் காணலாம்.

> உறுபுலி ஊனிரை இன்றி ஒருநாள்
> சிறுதேரை பற்றியும் தின்னும் —அறவினால்
> கால்தொழில் என்று கருதற்க; கையினால்
> மேல்தொழிலும் ஆங்கே மிகும்
>
> —நாலடியார் : 193

எனவே ஒருவன் கலங்காது தான் மேற்கொண்ட செயலில் ஊக்கம் குறையாது, தூக்கத்தையும் விடுத்துச் செயலாற்ற வேண்டும். அவ்வாறு கொண்ட கருமமே குறிக்கோளாக இருந்தால் வெற்றித் தேவதை அத்தகைய முயற்சியுடையவனுக்கு வாகை சூட்டுவது இயல்பு.

எங்குப் பிறப்பினும் எத்தகைய பிறப்பாயிருப்பினும் பிழையில்லை. தம் முயற்சியால் உழைத்து முன்னுக்கு வர வேண்டும். 'உழப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்பர். எனவே உழைக்க உழைக்க, சோம்பலின்றிச் செயலாற்றச் செயலாற்ற உயர்வு என்பது உறுதியாகக் கிடைக்கும். விதியையும் வெல்லலாம்: ஊழையும் உப்பக்கம் காணலாம். தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருத்தக் கூலி தரும், முயற்சி திருவினையாக்கும் என்றெல்லாம் ஆன்றோர் அருளியுள்ளதற்கிணங்கவே நாலடியாரும்,

> ஆடுகோ டாகி அதரிடை நின்றதூஉம்
> காழ்கொண்ட கண்ணே களிறணைக்கும் கந்தாகும்
> வாழ்தலும் அன்ன தகைத்தே ஒருவன்தான்
> தாழ்வின்றித் தன்னைச் செயின்

என்கிறது.

# 8. வாழ்வியற் நெறி

## 1. செய்வன திருந்தச் செய்
### (Do well what you have to do)

உள்ளம், சொல், செயல் என்ற மூன்றும் மனிதனின் வாழ்வின் உயர்விற்கு உறுதுணையாக நிற்கின்றன. உள்ளம் நினைக்கிறது. அங்கிருந்து சொல் வெளிப்படுகின்றது. பின்னர் செயல் சிறக்கின்றது. எண்ணம் ஏற்றம் மிக்கதாக இருந்து, சொல் பயனுடையதாக இருந்தால், செயல் சிறக்கும். செயல் சிறக்க வேண்டுமானால் அச் செயலைத் திருந்தச் செய்ய வேண்டும். செயல் வெளிப்படும்போது திருத்தமும் செம்மையும் கொண்டதாக இருக்கவேண்டும். ஒருவரின் மதிப்பு, அவர் எவ்வாறு செயலாற்றுகிறார் என்பதைப் பொறுத்திருக்கின்றது.

உலகப் பெரியோர் பலரை எடுத்துக்கொள்வோம். ஏசுநாதர், நபிகள் நாயகம், மகாவீரர் புத்தர், திருவள்ளுவர், திருமூலர், சங்கரர், இராமானுசர், நம்மாழ்வார் முதலான பெருமக்கள் பலர் இன்றும் நம்மால் நினைவு கூரப்படுகின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் அவர்கள் ஆற்றிய செயலும், அந்தச் செயலை அவர்கள் ஆற்ற மேற்கொண்ட வழியுமே காரணங்களாகும்.

**செய்யுந் தொழிலே தெய்வம்; அதில் திறமைதான்**
**நமது செல்வம்**

என்றோர் கவிஞர் குறிப்பிட்டார். "எழுதுகோல் தெய்வம், இந்த எழுத்தும் தெய்வம்'' என்று பாரதி குறிப்பிட்டதனையும் ஈண்டு நினைவிற் கொள்ளுதல் வேண்டும். எந்தச் செயலை மேற்கொண்டாலும் அதை நிறைவேற்ற முயலும்பொழுது தெய்வ சந்நிதானத்தில் நிற்பது போல உணரவேண்டும். தெய்வச் சந்நிதியில் நிற்கும்பொழுது, 'யானும் நீயுமாய் ஏகபோகமாய்' என்று ஆன்றோர் அருளியவாறு போல, எப்படி தெய்வச் சிந்தனையில் ஒன்றிவிடுகின்றோமோ, அதுபோல் நாம் மேற்கொள்ளும் செயலோடு ஒன்றிவிட வேண்டும். "செம்மை சிறக்க அகத்தும் புறத்தும்" என்றாற்போல ஒரு முழுமை—ஆங்கிலத்தில் Perfection என்று சொல்கிறார் களே அந்தச் செம்மை அந்த நிறைவு செயலில் சிறக்க வேண்டும்.

சிலர் செயலை ஏனோதானோ என்று செய்வார்கள். எப்படியோ ஒரு வழியிற் செயலை முடிப்பார்கள். அதில் ஓர் அழகோ ஒழுங்கோ புலப்படாது. அப்படிப்பட்டவர் களை மேலோர் பாராட்ட மாட்டார்கள். அவர்களுக்கு மேற்கொண்டு வாய்ப்பையும் வசதியையும் வழங்க மாட்டார்கள். அதனால் அவர்கள் பிறரால் இகழப்படு வதற்குக் காரண கர்த்தர்களாக ஆகி விடுவார்கள்.

எந்தச் சிறு செயல் ஒருவரிடத்தில் ஒப்படைக்கப் பட்டாலும், அச்செயலை ஒரு முறையோடு செம்மை சிறக்கச் செய்வதற்குப் பாடுபட வேண்டும். மேலும் ஒருவர் அவர் மேற்கொள்ளும் செயல் திறமையால், செயலாற்றும் பண்பால் அளக்கப்படுவதனால் அந்தச் செயலை அரைகுறையாக அன்றிச் செம்மையாக, திருத்த மாகச் செய்யவேண்டும்.

'செய்வன திருந்தச் செய்' — Do well what you have to do) என்பதற்கியைப நம் நாட்டவர்கள் செயல் சிறக்கப் பாடுபடுவார்களேயானால் உலகின் முன்னணி நாடாக இந்தியா விளங்கும். மேலை நாடுகள் சென்று வருபவர்கள் அங்கெல்லாம் செய்வன திருந்தச் செய்பவர்களை, செயலைச் செம்மையுடன் மேற்கொள்ளும் திறமுடையவர்களைச் சந்திக்கிறார்கள். இரண்டாம் உலகப் பெரும் போரில் முற்றிலும் அழிவுக்குள்ளான நாடுகளான ஜப்பானும், ஜெர்மனியும் இன்று உலகில் முன்னேறியிருப்பதற்குக் காரணம், அந்நாடுகள் அழிவினின்றும் தங்களை விடுவித்துக் கொண்டு தாங்கள் செய்யும் தொழிலால் சிறந்து, நன்கு பாடுபட்டு முன்னேறி விட்டதைக் காண்கிறோம். ஜப்பானின் தொழில் வளர்ச்சியைக் கண்டு உலகமே வியக்கிறது. ஜெர்மனி அறிவியல் துறையில் பெரிதும் முன்னேறிய நாடு என்று போற்றப்படுகிறது. இதற்கெல்லாம் காரணம், அந்நாட்டு மக்கள் தாங்கள் மேற்கொள்ளும் செயலில் திருத்தமும் செம்மையும் காட்டுவதுதான் காரணங்களாகும்.

நாட்டு வாழ்க்கையிலன்றித் தனிமனித வாழ்க்கையிலும் இதனையே நாம் உண்மை எனக் காணலாம். காந்தியடிகள் எந்தச் செயலைத் தொடங்கினாலும் உள்ளார்ந்த மெய்ம்மையோடு, பிசிறின்றிச் செம்மையும் தெளிவும் தோன்றச் செயலாற்றினார். அதனால் ஒரு பெரிய பேரரசே அவருக்குத் தலை வணங்கியது. திருமுறைச் சான்றோர்களும், ஆழ்வாராதிகளும் ஆற்றிய செயல் செம்மையினாலேயே பழம்பெரும் சமயங்களும் மக்களும் பக்திக் காலத்தில் மறுமலர்ச்சி கண்டார்கள். எனவே செய்வன திருந்தச் செய்தால் வாழ்க்கையில் வெற்றி உறுதி.

## 2. நா அசைய நாடு அசையும்

### (A good tongue is a good weapon of the country)

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் மனிதனை ஆள்கின்றன. இந்த 'ஐம்புல வேடரால் ஆட்பட்டேன்' என்று அயர் பெருமானும் புலம்பிக் கூறியிருப்பதனை நோக்கலாம். ஐம்புலன்களின் ஆளுகையில், அதன் வசத்தில் இருக்கும்பொழுது, மனிதன் முன்னேறுவதில்லை. ஐம்புலன்களை ஆளுகின்ற பெற்றியினை மனிதன் பெற்றுவிட்டால், அவன் ஏவலுக்கு ஐந்து புலன்களும் நின்று பணி செய்கின்றன. உலகை உருவாக்கிய உத்தமர்கள், உலகைத் திருத்திய உத்தமர்கள் பலர் ஐம்புலன்களின் வழியே தாம் செல்லாமல், தம் வழியில் ஐம்புலன்களை ஆட்டிப்படைத்தவர்கள் ஆவார்கள்.

இந்த ஐம்புலன்களில் கண் நுட்பமான கருவியே எனினும், நாக்கு சிறப்பிடம் பெறுகிறது. 'பேசப் போனாயோ சாகப் போனாயோ' என்றொரு பழமொழி நாட்டில் வழங்குகின்றது. சொல்லும் சொல்லில் சோர்வு, பட்டு விட்டால், அதனால் வரும் தீங்கு சில சமயங்களில் உயிருக்கே உலை வைப்பதாகவும் அமைந்துவிடும். எனவே தான் திருவள்ளுவரும் 'காத்தோம்புக சொல்லின் சோர்வு' என்றார். எனவே சொற்குற்றம் வாராது காத்தல் தலையாய செய்யாகின்றது. 'சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது" என்றார் திருவள்ளுவர். சொல்லுதல் வல்ல ஒருவன் வெற்றிக் கனியை வேண்டும்போது பற்றிக்கொள்ளலாம் என்பது இதனால் பெறப்படுகின்றது! சொல்வன்மை

என்றே ஓர் அதிகாரம் படைத்திருக்கும் திருவள்ளுவப் பெருந்தகையின் மதிநுட்பம் பாராட்டத்தக்கது. அரசனைச் சார்ந்திருப்போர் சொல்வன்மை மிக்கவர்களாக இருக்க வேண்டும் என்றார் அவர்.

**சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க**
**சொல்லிற் பயனிலாச் சொல்** (குறள் 200)

என்றும் அவர் சொல்லியிருப்பதனைக் காணும்பொழுது வெல்லும் சொல்லை விரும்பி மேற்கொள்ள வேண்டிய திறப்பாடு புலனாகின்றது. 'வெல்லும் சொல் இன்மை அறிந்தே ஒரு சொல்லைப் பயன்படுத்த வேண்டும்' என்று அவர் குறிப்பிடும் கருத்து உணர்ந்து போற்றத் தக்கது.

கிரேக்க நாட்டு வரலாற்றினைப் படிக்கும்பொழுது, அத்தொன்னெடுங் காலத்திலேயே டெமாஸ்தனிஸ் முதலானோர் தம் நாவின் திறத்தால் நாட்டை அசைத்த செயல் புலப்படுகின்றது. நெப்போலியன் பிரெஞ்சு நாட்டை உருவாக்கிய திறம் உணரப்படுகின்றது. வின்ஸ்டன் சர்ச்சில் இங்கிலாந்தின் புகழ் வாய்ந்த பிரதமராய்த் துலங்கிய மேன்மை புலப்படுகின்றது. எட்மண்ட் பர்க்போன்றவர்கள் பாராளுமன்றத்தில் பேசிய பேச்சின் பெருஞ்சிறப்பு இன்றும் பலராலும் மேற்கோள் காட்டிப் பேசப்படுகின்றது.

திருஞானசம்பந்தர், சங்கரர், இராமானுஜர் முதலான சான்றோர்கள் தத்தம் சமய நெறிகளை வளர்க்கத் தம் நாக்கு வன்மையினை உலகறியக் காட்டி உயர்ந்த செயல் தெற்றென விளக்கமுறுகின்றது. அவர்களின் பேச்சாற்றலே அவர்களின் கருத்துகளுக்கு வெற்றி தேடித் தந்ததனைக் காண்கிறோம்.

பேச்சு, எழுத்து ஆகிய இரண்டனுள் பேச்சுதான் உடனடி வெற்றியைத் தரும். எழுத்து பயனளிக்கக் காலம் கடக்கும். மனிதருள் மாணிக்கம் நேருவின் பேச்சு, வங்காள இளஞ்சிங்கம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பேச்சு, திலகரின் பேச்சு, சுப்பிரமணிய சிவாவின் பேச்சு, தீரர் சத்தியமூர்த்தியின் பேச்சு, அறிஞர் அண்ணாவின் பேச்சு இவையனைத்தும் நாட்டு மக்கள் நெஞ்சில் இன்றும் நின்று நிலவுகின்றன. சமயத்துறை எனில் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் சுவாமிகளின் பேச்சை இன்றும் பலர் நினைவு கூர்ந்து வியப்புக் கடலில் ஆழ்கின்றார்கள். எனவே நாக்கின் திறத்தால் நாட்டு மக்கள் நெஞ்சில் இடம் பிடிக்க முடியும் என்றாகிறது.

இந்திய நாட்டின் வரலாற்றில் அதிலும் குறிப்பாக விடுதலைப் போரில் நா அசைந்தால் நாடு அசைந்த திறம் காணப்பட்டது. ‘வெள்ளையனே வெளியேறு’ ‘டெல்லி நோக்கிச் செல்’ என்று விடுதலை வேண்டி நின்ற மக்களுக்கு அரசியல் தலைவர்கள் அருளிய தாரக மந்திரங்கள் வெறிக்கொள்ளச் செய்து, அவர்கள் உணர்வுகளை இயக்கி இறுதியில் வெற்றி தேடித் தந்தன. வேறு எத்துறையினைக் காட்டிலும் நாக்கின் பயன் அரசியல் துறையில் உடனடி வெற்றியை வழங்கி நிற்கக் காணலாம். எனவேதான் கொடிய படைக்கலன்கள் பலவற்றைக் கொண்டிருந்த, கதிரவன் மறைவதைக் காணாத பேரரசு என்று புகழப்பட்ட ஆங்கிலப் பேரரசே அண்ணல் காந்தி அடிகளின் உறுதிமிக்க வீர வாசகங்களுக்கு முன்னால் நிலைகுலைந்து போனதை வரலாறு காட்டுவதனைக் காணலாம். (A good tongue is a good weapon) நல்ல நாக்கே சிறந்த படைக்கலன் என்னும் உண்மை, வாழ்வின் பல நிலைகளிலும் விளங்கக் காணலாம்.

அ.—ப

## 3. எண்ணித் துணிக

**சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம்**
**சொல்லிய வண்ணம் செயல்** (குறள்-664)

என்பது திருவள்ளுவர் வாக்கு. எதைப்பற்றியும் பேசி விடுவது எளிது. ஆனால் பேசியவற்றிற்குச் செயலுருவம் தருவதென்பது அரிய செயலாகி விடுகின்றது. மனம் எண்ணுகின்றது; எண்ணிய எண்ணம் சொல்லாகிச் செயலாக வெளிப்படுகின்றது; அறிவு சிறந்திருந்தால் நல்லதைச் சிந்திக்க முடியும்; "நல்லவே எண்ணவேண்டும்; எண்ணிய முடிதல்வேண்டும்" என்பார் பாரதி. பலர் இன்று போற்றப்படுவதற்குக் காரணம் அவர்கள் ஆற்றிய செயல்களால்தான். ஒருவன் முன்னேற்றத்தை அளந்து காணும் கருவியாக அவர் ஆற்றும் செயல்கள் அமைகின்றன.

சொன்ன சொல்லைச் செயலாக்கும்பொழுதுதான் இடர்ப்பாடே தொடங்குகின்றது. முதலாவது எண்ணிய எண்ணம் செயல் வடிவம் பெற எவ்வெவ் வகையில் முயலலாம் என்பது முடிவு செய்யப்பட வேண்டும். ஒரு செயல் என்னும் வெற்றித் தூணைச் சென்றடைவதற்குப் பல வழிகள் அமையலாம், அவற்றில் எந்த வழி எளியதும் முறையானதும் சிறப்புடையதும் ஆகும் என்பதைக் காணவேண்டும். பின் விளைவுகளையும் எப்போதும் கருத்தில் கொள்ளவேண்டும். செயலாற்றும்போது நேரக்கூடிய விளைவுகளையும் நன்கு சிந்திக்கவேண்டும்.

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**
**எண்ணுவம் என்பது இழுக்கு** (குறள்-467)

என்றார் திருவள்ளுவர். ஒரு செயலைத் தொடங்குவதற்கு முன் அச் செயலின் சாதக, பாதகங்களை (Pros and Cons) நன்கு சிந்திக்க வேண்டும். அவ்வாறு சிந்தித்துப் பார்த்துவிட்டுச் செயலாற்றத் தொடங்கிவிட்டால் பின்னர் இடைவழியில் தயங்கி நிற்கக்கூடாது. அவ்வாறு நின்றால் அச்செயல் இடையில் நின்றுவிடும். ஒருவேளை தொடர்ந்து மேற்கொள்ளப் பெற்றாலும் அரை மனத்தோடு செய்யும் செயல் முழு வெற்றியைத் தராது. பிறர் பாராட்டும் வெற்றியினதாகவும் அமையாது.

"ஆத்திரக்காரனுக்கு அறிவு மட்டு" என்னும் பழமொழியும் நாட்டு மக்கள் நெஞ்சில் நின்று நிலவுகிறது. சிலருக்கு எதிலும் அவசரம்தான். அவர்கள் நன்கு திட்டமிடாமலேயே களத்தில் இறங்கிவிடுவார்கள். எதிலும் ஒரு திட்டம் வேண்டும். முதற்கண் செயல் திட்டத்தை வகுத்துக்கொள்ள வேண்டும். திருவள்ளுவர் வினைத்தூய்மை, வினைத்திட்பம் கூறியதோடு மட்டும் நிற்கவில்லை. காலமறிதல், இடமறிதல், வலியறிதல், துணையறிதல் முதலியவற்றையெல்லாம் குறிப்பிட்டுள்ளார். இரண்டாம் உலகப் போரில் வெற்றிமேல் வெற்றி பெற்றுக்கொண்ட ஜெர்மனியும் ஜப்பானும் ரஷ்யாமேல் குளிர் காலத்தில் படையெடுத்தபோதுதான் தோல்வியை நோக்கி—அழிவை நோக்கி அடியெடுத்து வைத்தன.

ஒரு செயலை விரைந்து செய்ய வேண்டியது அவசியம்தான். வேகமாகச் செய்யவேண்டும் என்று நினைத்து, விவேகமற்ற அறிவுக்குப் பொருந்தாத வழிகளில் ஈடுபடுதல் கூடாது. 'அறிவு அற்றம் காக்கும்

கருவி' என்பார் திருவள்ளுவர். சீக்கிர புத்தி—உடனடியாக முடிவு எடுத்துச் செயல்படுவது தேவைதான். ஆனால் எதிர் விளைவுகளை நோக்காது மேற்கொள்ளும் சீக்கிர புத்தியால் அதன் செயல்களால் ஆக்கமின்றி அழிவே முன்னிற்கும். எனவே சீக்கிர புத்தியே ஒரு செயலின் பலவீனமாக அமைந்துவிடுவதைக் காணலாம்.

'கால மயக்கம் சாலவும் தீதே' (Delay is dangerous) என்று மனோன்மணீயம் சுந்தரம்பிள்ளை புகல்வார். சிலர் எச்செயலையும் நாளைக்கு நாளைக்கு என்று தள்ளிப் போட்டுக்கொண்டே போவார்கள். எந்த ஒரு நாளிலாவது முடிப்பார்களா என்றால் அது இல்லை என்பது நாள் போகப் போகத் தெரியும். (Delaying tactics) என்று இது சொல்லப்பட்டாலும்கூட ஒரு செயலை முறைப்படச் சூழ்ந்து செய்யாவிடிற் பழுது ஏற்பட்டுவிடும். சீக்கிர புத்தி பலவீனம் ஆவதுபோல, வரையறையற்ற காலந் தள்ளிப்போடுவது என்பதும் பயன் விளைவிக்காத ஒன்றாகிவிடும். 'வெட்டு ஒன்று துண்டு இரண்டு' என்பது போலச் சிலர் செயலாற்ற முற்படுவர். விரைந்து ஒரு முடிவுக்கு வருவது போற்றத்தக்க செயல்தான் என்றாலும் அச்செயலின் முடிவு தோல்வியாக அமைந்துவிட்டால் அது வாழ்க்கையையே பாதித்துவிடும் அன்றோ?

திருவள்ளுவச் சான்றோர்,

**கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**
**தூக்கம் கடிந்து செயல்** (குறள்-668)

என்று அருளியுள்ளதனை நோக்க, ஒரு செயலை எடுத்துக் கொண்டபிறகு, அச் செயலால் எதிர்கொள்ள வரும் இடையூறுகளை இன்னல்களைப் பொருட்படுத்தக்கூடாது என்பதும், இடைவழியின் ஏதம் அறிந்து தங்கிவிடக்

கூடாது என்பதும், தூக்கத்தையும் நீக்கி, அல்லும் பகலும் உழைத்து குறிக்கோளை அடையவேண்டும் என்பதும் தெற்றெனப் புலனாகின்றது.

குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத் தொன்று
உண்டாகச் செய்வான் வினை

(குறள்-758)

என்று திருவள்ளுவர் கூறியிருப்பதனை நோக்கும்பொழுது, யானைப் போரைக் குன்றின் மீதிருந்த பார்ப்பவன் சேத முறாதது போல, பிறரை எதிர்நோக்காது, தன்செயல்கள் வழியே தான் எண்ணிய எண்ணத்தை இனிது முடிப்பவன் ஆபத்தில் சிக்கிக் கொள்ளாமல் வெற்றி என்னும் துறை முகத்தை விரைவில் சென்றடைவான் என்பது பெறப் படுகிறது. எனவே ஒரு செயலைச் செய்து முடிக்கும் நேரத்தினும், (Time) அச்செயலை மேற்கொள்ளும் வழிகளும் இறுதியில் வந்தெய்தும் பிறர் பாராட்டும், வெற்றியுமே முக்கியம் என்பது விளக்கமுறுகின்றன.

# 9. சான்றோர் நெறி

## 1. பகுத்துண்டு பல்லுயிரோம்புதல்

இந்த உலகில் வாழும் மனித இனத்திற்கு அடிப்படைத் தேவைகள் மூன்றாகும். அவை உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடமாகும். இதனையே புறநானூற்றுப் புலவர் ஒருவர்,

> **உண்பது நாழி; உடுப்பவை இரண்டே**
> **பிறவு மெல்லாம் ஓரொக் கும்மே**

என்று குறிப்பிட்டார். தாயுமான தயாபரர், "யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாக முடியும்" என்றார். இதனையே இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர் பாரதியாரும்

> **வயிற்றுக்குச் சோறிட வேண்டும் இங்கு**
> **வாழும் மனிதருக்கு எல்லாம்**

என்றார். எனவே வயிற்றுப் பசியைத் தணிப்பதே மேலான அறமாகின்றது.

''உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே'' என்பது பழந்தமிழர் வாக்கு. "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடிய" இரக்க நெஞ்சினரான வடலூர் வள்ளற்பெருமானும் 'அற்றார் அழிபசி தீர்த்தல்' சமுதாயத்திற்கு ஆற்றும் பெருந்தொண்டு எனக் கருதி வடலூரில் சத்திய தருமச் சாலை கண்டு, பசியறாது நின்ற ஏழைகளின் வயிற்றுப்பசியை நீக்கினார்.

எனவே உயிர்க் குலத்திற்கு உணவு தருதல் என்பது அன்றும் இன்றும் பேரறமாகக் கொள்ளப்படுகிறது. சுவாமி விவேகானந்தர், அண்ணல் காந்தியடிகள் முதலானவரும் பசியால் துடிக்கும் ஏழை மக்களிடம் கடவுளைப் பற்றிப் பேசக்கூடாது அவர்களுக்குக் கடவுள் கஞ்சியின் வடிவில், ரொட்டியின் வடிவில் தான் வருவார் என்று குறிப்பிட்டு, ஏழைகளின் பசியைத் தணித்த பிறகே அவர்களிடம் ஆன்மீகம் பற்றிப் பேச வேண்டும் என்றார்.

இதனைப் பண்டுதொட்டே நம் மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

> பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாம் தலை
>
> (—குறள் 322)

என்று திருவள்ளுவர் தெளிவுறக் குறிப்பிட்டார்.

இந்த வுலகில் எண்ணற்ற மக்கள்—இனத்தவர்கள் பல்வேறு நாடுகளில் வாழ்கிறார்கள். அவர்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகிறார்கள். அவ்வம்மொழிகளில் பல்வேறு இலக்கியங்கள் முகிழ்த்துள்ளன; அறிவு சான்ற பெருமக்களின் அறநூல்கள் உருவாகியுள்ளன. அந்நூல்களில் வாழ்க்கைக்குத் தேவைப்படும் அறக்கருத்துகள் பல கூறப்பட்டுள்ளன. அவ்வனைத்துக் கருத்துகளின் முடிமணியான—தலையாய கருத்து என்னவென்று பார்த்தால், அக்கருத்து, 'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல்' என்பதாக அமைவதைக் காணலாம்.

பெருஞ்சித்திரனார் என்னும் புலவர் சங்ககால இலக்கியத்தில் ஒரு குறிப்பிட்ட இடம்பெறும் நற்றமிழ்ப்

புலவராவர். அவர் வறுமைவாய்ப்பட்டார். அதன் விளைவாக அவருடைய குடும்பமே பசிப்பிணியில் சிக்குண்டது. அவர் மனைவி ஓரளவு கூட உண்ண முடியவில்லை. அதனால் தான் பெற்ற குழந்தைக்கே பால் கொடுக்க முடியாத பரிதாப நிலைமை. புலியைக் கூறி அச்சமூட்டியும் நிலவைக்காட்டிக் குழந்தையினை அமைதிப்படுத்த நினைக்கிறாள். இயலவில்லை. குழந்தை தாய் முகம் நோக்கி அழுகிறது. என் மனைவி என் முகம் நோக்கினாள். நான் நின்முகம் நோக்கினேன் குமணா என்று குமண வள்ளலை நாடிச்சென்று இரந்து வேண்டினார்.

இல்லுணாத் துறத்தலி னின்மறந் துறையும்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் பன்மாண்
பாலில் வறுமுலை சுவைத்தனன் பெறாஅன்
கூழுஞ் சோறுங் கடைஇ ஊழின்
உள்ளில் வறுங்கலந் திறந்தழக் கண்டு
மறப்புலி யுரைத்து மதியங் காட்டியும்
நொந்தன ளாகி நுந்தையை யுள்ளிப்
... ... ... ... ... ...
அல்லல் உழப்போள்

—புறநானூறு 160; 17-23

இவ்வாறு தன் குடும்ப நிலைமையினைக் கூறியிரந்த புலவர் பெருஞ்சித்திரனார்க்குக் குமணவள்ளல் பெரும் பொருளினைப் பரிசாக நல்கினான். அப்பொருளைக் கொணர்ந்து தன் மனைவியிடம் பெருஞ்சித்திரனார் தந்தார். தன் மனைவியைப் பார்த்துப் பேசலுற்றார்.

பலாப்பழங்கள் நிறைந்து தொங்கிக் கொண்டிருக்கும் முதிரமென்னும் மலைக்குத் தலைவனாகிய திருந்திய

வேலையுடைய குமண வள்ளல் நல்கிய செல்வத்தை உன்னை விரும்பி வாழும் நின் சார்பினராகிய பெண்களுக்கும், உன்னால் அன்பு செலுத்தப்பட்டு வாழுகின்ற பெண்களுக்கும், பல்வகையாலும் பெருமைகள் நிறைந்திலங்கும் கற்பினையுடைய உனது உறவினர்களான மூத்த பெண்களுக்கும், பொதுவான நம் உறவினர்களது மிக்க பசி நீங்க, முன்னாளில் குறித்த அளவு குறிப்பிட்டுக் கடன் தந்தோர்க்கும், மற்றும் இன்ன தன்மையர் என்று கருதாது, என்னிடம் கேட்டே பிறர்க்கு வழங்க வேண்டும் என்றும் முடிவெடுத்து விடாது, பரிசாகப் பெற்ற பொருளைச் சேமித்து வைத்துப் பன்னெடுங்காலம் பிற்காலத்தே வளமுற வாழலாம் என்றும் முடிவு செய்து விடாமல், கிடைத்த பொருளை எல்லார்க்கும் வழங்குவாயாக" என்று விரிவாகக் குறிப்பிட்டார்.

மனித குலத்திற்கே மாண்புறு கருத்தினை நல்கிக் கொண்டிருக்கும் பெருஞ்சித்திரனாரின் சிறந்த கருத்தமைந்த பாடலைக் காண்போம்:

நின்னயந்து உறைநர்க்கும் நீநயந்து உறைநர்க்கும்
பன்மாண் கற்பின்நின் கிளைமுதலோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்குங் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே

—புறநானூறு 163

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழகத்தில் நிகழ்ந்த இந்நிகழ்ச்சியினைக் காணும்போது, தமக்கு

அரிதாகக் கிடைத்த செல்வத்தையும் பிறர்க்கும் வழங்கி வாழ வேண்டும் என்னும் உயரிய கருத்தை உள்ளடக்கிய இப்பாடலைப் படிக்கும்பொழுது திருவள்ளுவர் சொல்லிய

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை

—(குறள்-322)

என்னும் திருக்குறள் நினைவுக்கு வருகின்றது அன்றோ!

## 2. உலகம் ஒரு குடும்பம்

"எதிர்காலத்தில் நம்முடைய சிந்தனைகள் உலகம் அளவியதாக இருக்கவேண்டும்" என்று "ஒரே உலகம்" என்னும் நூலில் அமெரிக்கப் பேரெழுத்தாளரான வெண்டல் வில்கீ என்னும் அறிஞர் குறிப்பிட்டார். இருபதாம் நூற்றாண்டில் எழுந்த இந்தக் கருத்தை அமெரிக்கர்கள் தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறார்கள். "கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றிய மூத்த குடி"யினரான தமிழ் மக்கள் உலகம் முழுவதும் ஒரே குடும்பம் என்னும் பரந்துபட்ட சிந்தனையில் வாழ்ந்தவர்கள் என்பதற்கு,

யாதும் ஊரே யாவரும் கேளிர்

என்ற கணியன் பூங்குன்றனாரின் கவிதை அடியே சான்று பகரும். திருவள்ளுவரும்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

(குறள் 397)

என்றார் குறளில். கற்ற ஒருவனுக்கு எல்லா நாடுகளும், எல்லா ஊர்களும் உரிமையுடையன; அவன் கற்ற கல்வி

காரணமாக எல்லா நாடுகளிலும் எல்லா ஊர்களிலும் அவனுக்கு வரவேற்பு இருக்கும் என்கிறார் வள்ளுவர்.

'தொல்காப்பியம்' என்னும் அரிய இலக்கண நூலினைத் தந்த காலத்தால் முற்பட்ட தொல்காப்பியனார் பொருளதிகாரத்தில் முதற் பொருள் என்று நிலங்களையும் (Earth) பொழுதுகளையும் (TIme) குறிப்பிட்டார். தொல்காப்பியனார் குறிப்பிடும் இந் நிலங்களும் பொழுதுகளும் 'முதல்' பொருள்களாக மட்டுமல்லாமல் மனிதன் வாழ்வாங்கு வாழ 'முதல்' (Capital) கொடுக்கும் ஊற்றுகளாகவும் திகழ்வதனைக் காணலாம்.

நிலங்களும் பொழுதுகளும் இல்லையெனில் உலக வாழ்வு என்றே ஒன்று இருக்காதன்றோ! பழந்தமிழர் தாம் வாழ்ந்த திருவிடத்தினை 'நானிலம்' என வகுத்தனர். மலையும் மலையைச் சார்ந்த இடம் குறிஞ்சி என்றும், காடும் காட்டைச் சார்ந்த இடம் 'முல்லை' என்றும், வயலும் வயலைச் சார்ந்த இடம் 'மருதம்' என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடம் 'நெய்தல்' என்றும் விதந்தோதப்பட்டன. வளங்குறைந்த (வாழ்க்கைக்கு அவ்வளவாகத் துணை நிற்காத) நிலம் 'பாலை' எனப் பட்டது. இந்நிலங்களில் எழுந்த மரஞ்செடி கொடி களிடத்திலும்கூட நம்பழந்தமிழ் மக்கள் பற்றுச் செலுத்தினர். புன்னைமரமொன்று தன் தாயால் தான் பிறப்பதற்குமுன் ஆர்வத்துடன் வளர்க்கப்பட்டதாலின், அப் புன்னை மரத்தைத் தன் தமக்கையாக, அக்காவாக எண்ணித் தன் காதலனிடம் பேசவே நாணி வெட்கப் பட்ட தலைவி ஒருத்தியை நற்றிணைப் பாடலொன்றில் கண்டு தெளியலாம்.

நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகுமென்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே

—நற்றிணை 172:4—6

இதனாற் பெறப்பட்டது என்னையெனின் புன்னை மரத்தை தமக்கையாக எண்ணி வாழ்ந்த தலைவியின் ஈர நெஞ்சமும் இரக்கவுணர்வும் ஒருங்கே புலனாகின்றன.

இதனை யொத்த செய்தியொன்று குறுந்தொகைப் பாடலொன்றிலும் எதிரொலிக்கக் காணலாம். காதலன் ஒருவன் பலநாள் காதலின் வீட்டெல்லைக்கு வந்து காதலியுடன் பழகிச் சென்றான். ஆனால் இப்போது நெடு நாட்களாக வரவும் இல்லை; திருமண முயற்சிகளில் ஈடு படவும் இல்லை. இந்நிலையில் காதலிக்குத் துயரம் மேலிடுகிறது. துன்பம் தரும் இராக்காலத்தே முன்னாளில் தன்னைச் சந்தித்துப் பேசவந்த காதலனுக்கு இனிய துணையாக இருந்த (மனைத் தோட்டத்தின்கண் இருந்த) வேங்கை மரத்திற்காகவாவது பிரிந்து செல்வதில் வல்லவராக இன்று திகழும் காதலன், பறவை ஒன்றன் வாயிலாகத் தூது மொழியொன்று சொல்லி விடுத்திருக்கலாம் என்று அலமறுகிறாள். தனக்குத்தான் தூது அனுப்பவில்லை. இரவில் அவருக்குத் துணையாக இருந்த வேங்கை மரத்திற்குக் கூடவா தூது அனுப்பக்கூடாது என்பதில் தலைவியின் பிரிவுத்துன்பம் புலனாகிறது.

நமக்கொன்று உரையார் ஆயினும் தமக்கு ஒன்று
இன்னா இரவின் இன்துணை யாகிய
படப்பை வேங்கைக்கு மறந்தானர் கொல்லோ
துறத்தல் வல்லியோர் புள்வாய்த் தூதே

—குறுந்தொகை : 265

சங்கப் புலவர்களுள் விரல்விட்டு எண்ணத் தக்க பெரும் புலவர்களுள் ஒருவரான நக்கீரரின் இந்தப் பாட்டு உலக ஒருமைப்பாட்டுக்கு வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

மகாகவி பாரதியாரும், காக்கையும் குருவியும் தம் சாதி என்றும், கடலும் மலையும் தம்முடைய உறவினர் களென்றும், எந்தப் பக்கம் நோக்கினாலும் நம்மவர்களே யன்றி மற்றவர்களான விரோதிகள் எவரும் இல்லை யென்றும் களிபொங்கக் கவிதை பாடுகின்றார்.

காக்கை குருவி எங்கள் சாதி—நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை
நோக்க நோக்கக் களியாட்டம்

—பாரதியார் கவிதைகள்

சங்க காலத்தில்,

பூத்தலை அறாஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி

—புறநானூறு : 200 : 9-12

என்று பாரி முல்லைக்குத் தேரீந்த காரணத்தாலே போற்றப் பெறுகிறான். பேகன், காட்டில் குளிரால் வாடிய மயிலுக்குத் தான் அணிந்திருந்த விலையுயர்ந்த போர்வை யினையே நல்கினான் எனப் புறப்பாடலொன்று புகலுகின்றது.

மடத்தகை மாமயில் பனிக்கும்என்று அருளிப்
படாஅம் ஈத்த கெடாஅ நல்லிசைக்
கடாஅ யானைக் கலிமான் பேக

—புறநானூறு: 145:1-3

நம்முடைய நாட்டில் அஃறிணை உயிர்களைக்கூடத் தம்மோடு ஒத்த மதிப்புடைய உறவினர்களாகக் கருதி வாழ்ந்த செய்தி விளக்கமுறுகின்றது. இத்தகைய செயல்கள்தாம் தமிழரைப் பண்பாட்டு நோக்கில் உலகில் தலைநிமிரச் செய்தவைகளாகும்.

'மனித நாகரிகம் வளர்ந்த தொட்டில்' (The Cradle of human Civilization) எனக் கூறப்படும் லெமூரியா எனும் கடல்கொண்ட பகுதியில் அந்நாளில் முகிழ்த்திருந்த நாகரிகம் நம்தமிழ் நாட்டை உள்ளிட்டது என்பதனை அனைவரும் அறிவர். எனவே அன்றுதொட்டு இன்றுவரை தமிழ் மக்கள் 'உலகம் ஒரு குடும்பம்' என்ற உணர்வோடு வாழ்ந்துவருதல் கண்கூடாகும்.

## 3. திருமூலர் நெறி

எண்ணற்ற தவஞானியர் இந்த மண்ணில் பிறந்திருக்கிறார்கள். அவர்கள் மனிதகுலம் வாழ, வளமான செறிவான கருத்துகளை வழங்கிச் சென்றுள்ளனர். அத்தகையோருள் காலத்தால் முற்பட்டுத் திகழும் தவஞானியருள் தலையாயவராய்த் திகழ்பவர் திருமூலர் ஆவர். திருமூலர் இயற்றிய திருமந்திரம், திருக்குறள் போல வாழ்க்கைக்கு வழிகாட்டும் சிறந்த நூலாகும். திருமூலர் கூறும் கருத்துகள் பல, மன்பதை உய்ய, உயர வழிகாட்டும் சீர்மை சான்றனவாகும்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" என்ற கருத்து, சாதி ஒன்றே இறைவனும் ஒருவனே என்ற கருத்தை உணர்த்தி நிற்கிறது. இதுபோன்றே ஏழைகளுக்கு இரங்கி உதவுவதே தலையாய அறம் என்பதனை வலியுறுத்தி நிற்கின்றது. மேலும் 'நடமாடும் கோயில்'

என்று ஏழை எளிய மக்களைக் குறிப்பிடுகின்றார். 'படமாடுங்கோயில்' என்று இறைவனைக் குறிப்பிட்டு, ஓர் அரிய கருத்தொன்றனைத் தம் பாடலில் புலப்படுத்துகின்றார்.

**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றீயில்**
**பட மாடக் கோயில் பகவற்க தாமே** —திருமந்திரம்

மேலும் உயிரையும், உடலையும் ஓம்ப வேண்டுவதன் இன்றியமையாமையினையும் நன்கு வலியுறுத்துகின்றார். நம் உடம்பினை இறைவன் வாழும் ஆலயமாக எண்ணி உடலோம்புதல் வேண்டும் என்பதனையும் குறிப்பிடுகின்றார்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**

இவ்வாறு உடலை ஓம்பி வாழவேண்டுவதன் அவசியத்தினைக் குறிப்பிடும் திருமூலர், உடம்பு எத்தகைய தன்மையுடையது என்பதனை மனத்தில் ஆழப் பதியுமாறு ஒரு பாடல் புனைந்துள்ளார். தன் மனைவி அருமைப்பாட்டுடன் சமைத்த உணவினை உண்ட ஒருவன், உண்டபின் தன் மனைவியுடன் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருக்குங்காலையில், தன் உடம்பில் இடப் பாகத்தில் அமைந்திருக்கும் இதயம் வலிக்கிறது எனக் கூறிய அளவிலேயே உயிர் நீங்கிய செய்தியினை அவலந் தோன்றக் குறிப்பிடுவார்.

**அடப்பண்ணிவைத்தார் அடிசிலை உண்டார்**
**மடக்கொடி யாரொடு மந்தணங் கொண்டார்**
**இடப்பக்கமே இறைநொந்தது என்றார்**
**கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந் தாரே**

—திருமந்திரம்

யாக்கை நிலையாமையினை வற்புறுத்தும் திருமூலர் யாக்கையை ஒம்ப வேண்டுவதன் அவசியத்தினையும் குறிப்பிட்டிருப்பதை மேலே கண்டோம்.

கிடைத்தற்கரிய அரிய பிறவி மனிதப் பிறவியாகும். அந்தப் பிறவி பெற்ற ஒருவர் எவ்வாறு வாழ்க்கையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு விளக்கமாகத் திருமூலர் செப்பிடும் கருத்துகளைச் சற்று ஆழச் சிந்திக்க வேண்டும்.

தமிழ்ப் பண்பாட்டின் அடிக்கூறாக விளங்குவது இறைக் கொள்கையாகும். இறைவன் ஒருவன் உளன்; அவன் நம்மையெல்லாம் இயக்குகின்றான் என்பதுதான் தமிழர் தத்துவம். "தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்" என்பது பாரதியின் வாக்கு. எனவே தெய்வத்தை வணங்கி வழிபாடாற்றுவது என்பது உயிர்க்குலத்தின் உயர்கடமையாகும். இறைவனை வணங்க மலரிட்டு, உளம் உருகி நின்று வழிபாடாற்றுவது மரபு. மலர் கிடைக்கவில்லையெனில் உள ஒருமைப் பாட்டுடன் பத்திரம் பறித்து இறைவன் மலரடிகளில் அதனைத் தூவி நிற்கவேண்டும். அடுத்து வாயில்லாப் பிராணிகள் என்று குறிப்பிடும் உயிர்க் குழாத்துள் பசு தலைமையிடம் வகிக்கின்றது. பசு உணவின்றித் துடிதுடித்து நிற்கும்போது எவரும் வாளாயிருந்துவிடக் கூடாது. புல் தேடிப் போட்டுப் பசு உண்ணுமாறு செய்யவேண்டும். பசுவிற்குப் பல்லாற்றானும் துணை நிற்க வேண்டியது மாந்தனுக்கு வகுக்கப்பட்ட ஓர் உயரிய கடமையாகும். மூன்றாவதாக, மனிதனுக்கு மனிதன் தன்னாலியன்ற உதவியினைச் செய்யவேண்டும். அறங்களில் தலையாய அறம் ஒருவர் பசியினை—வயிற்றுப் பசியினைப் போக்குவதேயாகும். எனவே உண்ணுவதற்கு

முன் தம் உணவில் ஒரு படியாவது பசித்திருப்பவருக்குத் தந்து உதவவேண்டும். நான்காவதாக, மேற்கூறிய மூன்று செயல்களைச் செய்ய இயலாமற்போனாலும் பிறரோடு பேசும்பொழுது இன்மொழிகளையே பேசவேண்டும் என்று குறிப்பிடுகின்றார் திருமூலர். இந் நான்கு நல்ல கருத்துகளையும் உள்ளடக்கித் திருமூலர் உலகிற்குத் தந்த திருமந்திரப் பாடல் வாழ்க்கைத் தெளிவினை வகையுறக் காட்டுகிறது.

யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே —திருமந்திரம்

திருமூலர் நெறியினைப் பின்பற்றி ஒழுக முனைவோர் இப் பாடலின் சாரத்தினை முற்றும் பின்பற்ற உறுதிபூண வேண்டும். ஏனெனில் உண்ண உணவு வழங்க இயலாவிடினும் இறைவன் படைத்த நாவினைக் கொண்டு எளிதாக இன்சொல்லாவது பிறருக்கு வழங்கலாமன்றோ? இச்சீரிய கருத்தினையே மகாகவி பாரதியாரும்,

நிதி மிகுந்தவர் பொருட்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் நல்குவீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளுவீர்

என்றார்.

பசி என்று வந்தவர்க்குப் புசி என
ஒரு பிடி கொடுத்துப் பாரப்பா

என்று பாவேந்தர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் குறிப்பிட்டிருப்பதனையும் ஒப்ப நோக்க வேண்டும்.

"காக்கை கரவா கரந்துண்ணும் ஆக்கம்"
எனச் சொல்லப்படுவதும் இதுதான்.

எனவே திருமூலர் உணர்த்தியுள்ள வாழ்க்கை நெறிகள் பலவாகும். அப்பலவற்றுள் உடம்பு நிலையாமையும் ஒன்று. எந்நேரத்திலும் அழியக்கூடிய உடம்பினை இறைவன் எழுந்தருளியிருக்கும் இல்லமாக நினைத்து உடம்பினை நாள்தோறும் நன்கு பாதுகாக்க வேண்டும் என்பதும் இறைவனைப் பச்சிலையிட்டு வணங்கவேண்டும் என்பதும் பசுவிற்குப் புல் இட்டுப் போற்றவேண்டும் என்பதும் உண்ணப் புகுமுன் உண்ண வசதியில்லாதவர்க்கு உண்ண ஒரு பிடிச் சோறு தந்து அவர்களை வாழ்விக்கவேண்டும் என்பதும், மேற்காணும் எந்த உதவியும் வழங்க வாய்ப்பில்லாமற்போனால் பிறரிடம் இனிய சொற்கள் கொண்டு பேசி மனம் மகிழச் செய்யவேண்டும் என்பதும் பெறப்படுகின்றன.

# 10. நல்லோர் நவின்ற நன்னெறி

## 1. உலகம் ஏன் இயங்குகின்றது?

இந்த உலகம் ஏன் இயங்குகின்றது என்று இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு மன்னன் மனத்தில் ஐயம் எழுந்தது. இந்தக் கேள்வி அவனுடைய மனத்தை ஓயாமல் சிந்தனைக்கு உள்ளாக்கியது. அதன் விளைவாக அவனுடைய மனத்தில் ஒரு விடையும் கிடைத்தது. இவ் உலகம் இடையறாது இயங்கிக்கொண்டிருப்பதற்குக் காரணம் தனக்கு என வாழாமல் பிறருக்கு என வாழும் பெருமனம் கொண்டவர்கள் வாழ்ந்து கொண்டு இருப்பதனால்தான் இப்பொழுதும் உலகம் உயந்து கொண்டிருக்கிறது என்று அதற்கு அவன் விடை கண்டான். அரிய பொருளே தனக்குக் கிடைப்பதாக இருந்தாலும் தான் மட்டும் இவ் அமிர்தத்தை உண்டு பன்னெடுங்காலம் வாழலாம் என்று தன்னல நோக்கில் முடிவுகட்டாமல், பிறரும் அந்தத் தேவாமிர்தத்தைப் பருகி, அவர்களும் பல்லாண்டுகள் வாழவேண்டும் என்ற பெருநோக்கத்தோடு அந்தத் தேவாமிர்தத்தைப் பிறருக்கும் கொடுத்து வாழ்கிறவர்கள்— நல்ல பெருநோக்கு எண்ணம் உடையவர்கள் இவ் உலகத்தில் வாழ்கிறார்கள் என்று கண்டான். அத்தகையவர்கள் கோபமோ, வெறுப்போ பிறர் மாட்டுக் கொள்ளாமல் சோர்வு என்கிற ஒன்றினைத் தூரத் துரத்தியவர்கள் ஆவார்கள். சோம்பலுக்கு இரையாகாமல், அஞ்ச வேண்டியவைகளுக்கு அஞ்சி, அறவோர் அஞ்ச வேண்டும் என்று கருதியவைகளுக்கு மட்டும் அஞ்சி, புகழ்

வருகிறது என்று சொன்னால் தன் உயிரையே தந்து, அதே நேரத்தில் பழி என்று சொன்னால் உலகத்தையே பெறுவதாக இருந்தாலும் அது வேண்டா என்று ஒதுக்கி, வாழ்நாள் முழுதும் தமக்கு என்று இல்லாமல் பிறர்க்கு என்று வாழும் பெருமனம் உடையவர்களாக—கொடை மனம் கொண்டவர்களாக உலகில் பலர் வாழ்ந்துகொண்டு இருக்கின்ற காரணத்தினால் இந்த உலகம் நாள்தோறும் இயங்கிக்கொண்டு இருக்கின்றது என்ற ஓர் அரிய உண்மையினைத் தன்னுடைய வினாவின் பயனாக விடை கண்டான்; ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் இந்த மண்ணில் வாழ்ந்த ஒரு மன்னன். அவனுடைய பெயர் 'கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி' என்று புறநானூறு புகலுகின்றது.

"உண்டா லம்மஇவ் வுலகம்; இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவ தஞ்சிப்
புகழெனின் உயிரும் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்!
அன்ன மாட்சி அனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"

—புறநானூறு : 182

அரியதொரு நெல்லிக் கனியைப் பெற்ற வள்ளல் அதியமான் அந்த நெல்லிக் கனியைத் தான் உண்டு பன்னெடுங்காலம் வாழவேண்டும் என்று எண்ணாமல், தான் வாழ்வதைவிட அறிவில் சிறந்த ஔவைப் பிராட்டி உண்டால்—அவள் பன்னெடுங்காலம் வாழ்ந்தால், அது

தமிழ் உலகிற்குப் பெரும் பயன் நல்கும் என்று எண்ணி, அந்த நெல்லிக் கனியினை ஔவைக்கு ஈந்தான் என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

எனவே, தனக்கு என வாழாமல் பிறருக்கு என வாழும் பெருமனம் உடையவர்களைக் கொண்டு சமுதாயம் விளங்குமேயானால், அதனால் விளையும் நன்மைகள் பல. சங்க காலத்தில் வாழ்ந்த பெருஞ்சித்திரனார் எனும் செந்தமிழ்ப்புலவர், தம் வறுமை தீர வள்ளல் குமணனை நாடிச் சென்றார். வரையாது வழங்கும் அவ் வள்ளலும், பெரும் பொருளை நல்கினார். அப் பொருளைப் பெற்றுவிட்டுத் திரும்பிய புலவர் தன் காதல் மனையாளை அழைத்து "நீ விரும்புகின்றவர்களுக்கும் உன்னை விரும்புகின்றவர் களுக்கும், கற்பிற் சிறந்துள்ள உறவினர்களுக்கும் வறுமை வரப்பட்ட பொழுது நம்க்கு உதவியவர்களுக்கும், மற்ற எவருக்கும்—இவ்வளவுதான் பொருள் வழங்க வேண்டும் என்றுவரையறை செய்யாமல், என்னுடையஇசைவினையும் கேட்டுக்கொண்டு இருக்காமல், முதிர மலைக்குத் தலைவனாகிய குமணவள்ளல் வாரி வழங்கிய செல்வத்தை, நாளைக்கு நமக்கு எனச் சேமித்து வைக்காமல், இன்னவருக்கு என்று இல்லாமல் எல்லோருக்கும் கொடுப்பாயாக" என்று கட்டளையிட்டான்.

"நின்நயந்து உறைநர்க்கும் நீ நயந்து உறைநர்க்கும்
பன் மாண் கற்பின் நின்கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி எதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி மனைகிழ வோயே!

பழுந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே"

—புறநானூறு : 163

இவற்றால், பகுத்துண்டு வாழும் வாழ்க்கை பெரும் சிறப்புடையது என்பது புலனாகின்றது.

## 2 நல்லாற்றுப் படும்நெறி

இவ் உலகில் மூன்றில் இரண்டு பங்கு நிலம் நீராக உள்ளது. அக் கடல் சூழ்ந்த உலகை வெண்கொற்றக் குடையின் கீழ் அமர்ந்து எல்லோருக்கும் பேரரசராக—சக்கரவர்த்தியாக ஒருவன் ஆளுகின்றான். அவனுடைய ஆட்சியின் கீழ் மன்னரும் மறவரும் வேளிரும் வேந்தரும் கைகட்டிச் சேவகம் செய்கின்றனர். இது ஒரு பக்கம். பிறிதொரு பக்கம் நள்ளிரவிலும் நடுப்பகலிலும் கண்ணுறங்காமல் விலங்குகளை வேட்டையாடித் திரியும் கல்வி அறிவு அற்ற ஒரு வேட்டுவன். இவ்வாறு இருவேறு துருவங்கள்; இரு வேறு வாழ்க்கை நிலைகள். ஆனால், இவ் இருவரும் உயிர் வாழத் தேவையானவை நாழி அரிசிச் சோறு மட்டும்தான். இவ்இருவரும் தம் மானத்தைமறைக் கப் பயன்படுத்தும் துணி இரண்டே இரண்டுதான். ஒன்று இடையில் உடுத்துவது. மற்றொன்று தோளில் தொங்கப் போட்டுக் கொள்ளும் மேலணி. ஆக இரண்டு துணிகள் இருந்தால் இருவரும் தத்தம் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம். இவர்கள் வாழ்வு இயக்கத்திற்குத் தேவை யான பிற பொருள்களும் ஒவ்வொருவருக்கும் ஒன்றாகவே அமைகின்றன. இத்தகைய வாழ்க்கைப் போக்கு அமைந்த இவ் உலகத்தில் செல்வத்தைத் தேடுவதற்காகவே மனிதனுடைய வாழ்க்கையின் பெரும் பகுதி கழிகின்றது

"எல்லாம் யோசிக்கும் வேளையில் பசி தீர உண்பதும்
உறங்குவதும் ஆகமுடியும்"

என்றார் தாயுமான தயாபரர்.

திருவள்ளுவர், "பொருள் இல்லார்க்கு இவ்உலகம் இல்லை" என்று புகன்றார். பிறிதோர் இடத்தில் "செய்க பொருளை" என்றுகட்டளைப் பிறப்பித்தார். பொருளால் பலவற்றைப் பெறலாம் என்றும் அவர் கருதினார்.

"அருளென்னும் அன்பீன் குழவி, பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு"

என்ற குறள்வழி, பொருள் என்னும் செவிலியால், அன்புத் தாய் ஈன்றெடுக்கின்ற அருள் என்னும் குழந்தையைப் பெறலாம் என்றும் சொன்னார். இந்த வகையில் பொருளே வாழ்வின் முதல் என்றாலும் அதுவே முற்றுமாக ஆகிவிடாது. பொருள் சேர்ப்பதனுடைய பயன் பிறருக்குக் கொடுப்பதாக இருக்கவேண்டும். இதனை,

"ஈத்துவக்கும் இன்பம்"

என்றும் திருவள்ளுவர் குறிப்பிடுவார். பிறருக்கு வழங்காமல் தாமே கோடிகோடியாகப் பொருளை அடுக்கி வைத்துக்கொண்டால், அதனால் விளையப்போவது விபரீதங்களும் தவறுகளுமே ஆகும் என்று புறநானூற்றுப் புலவர் நக்கீரனாரும் நலமுற நவின்றுள்ளார்.

'தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும்
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடுமாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்
உண்பது நாழி; உடுப்பவை இரண்டே!

பிறவும் எல்லாம் ஓர் ஒக்கும்மே;
செல்வத்துப் பயனே ஈதல்;
துய்ப்பேம் எனினே தப்புந பலவே''

—புறநானூறு : 189

மேலும், வாழ்க்கையில் பிறருக்கு நல்லது செய்வது என்பதையே குறிக்கோளாகக் கருதவேண்டும். அவ்வாறு நல்லது செய்யமுடியாத சூழல் ஏற்பட்டால், பிறருக்குத் தீமையாவது செய்யாமல் இருக்கவேண்டும். அவ்வாறு நன்மை செய்பவர்களை உலகம் பாராட்டுவதும், தீமை செய்பவர்களைப் பழித்து ஒதுக்குவதும் இயல்பாக நிகழ்கின்ற சூழல்களாகும். எனவே, நல்லது செய்யமுடியாமல் போனால் பிறருக்குக் கெடுதலாவது செய்யாது ஒருவர் இருப்பது சிறப்பாகும். அதனையே, அறிவு உலகம்— அன்பு உலகம் விரும்புகின்றது; அதுவே நல்ல நெறி என்றும் கொள்கின்றது; எனவே, அந்த நிலையில் நின்றுவாழ்கின்ற ஒருவரே இந்த உலகில் புகழ் உரைகளும், பாராட்டு மொழிகளும் உடையவர்களாக அமைவர்.

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்! அதுதான்
எல்லாரும் உவப்பது ; அன்றியும்
நல்லாற்றுப் படூஉ நெறியும் ஆர் அதுவே''

—புறநானூறு 195 : 6—9.

மறந்தும் பிறன்கேடு சூழாதவர்களே மண்ணுலகில் வாழ்ந்து விண்ணுலகைக் காண்பர் என்று சங்கச் சான்றோர்கள் சாற்றினர். எனவே, பிறருக்குத் தீமை செய்யாமல் வாழும் வாழ்க்கையே, பிறருக்கு உதவும் வாழ்க்கையே வாழ்க்கையாகும். அதனைவிடப் பிறருக்கு மனத்தாலும் தீமை நினையாமல் வாழும் வாழ்க்கை

பெருமித வாழ்க்கை என்பது பெரியவர் வாழ்விலே இருந்து நாம் பெறுகின்ற செய்தி ஆகும்.

## 3. மனைமாட்சியின் மாண்பு

திருவள்ளுவர் 'மங்கலம் என்ப மனைமாட்சி' என்றார். ஒருவன் பெறுகிற பேறுகளில் தலையாய பேறு குழந்தைச் செல்வம் என்று குறிப்பிட்டார்.

**"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை, அறிவறிந்த**
**மக்கட்பே றல்ல பிற"**

என்றார் அவர். ஆணின் உயிர் கடமையின் மீதே கருத்துக் கொள்கின்றது. பெண்ணின் வாழ்வு கணவனே உயிர் என அமைகின்றது.

**''வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்''**

(குறுந்தொகை :135; 1-2)

என்று குறுந்தொகை குறிப்பிடுகின்றது. அந்த வகையில், இல்லற வாழ்வின் இலக்காக, மையமாக, அச்சாணியாகத் திகழ்கின்றாள் பெண். இதனையே திருவள்ளுவர்.

**''மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனைமாட்சித் தாயினும் இல்''**

எனும் குறள்வழி வாழ்க்கைத் துணையின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறினார்.

செல்வக் குடியில் பிறந்த ஒரு பெண், திருமணமும் ஆகிப் புகுந்தவீடு சென்றாள். புகுந்த வீட்டில் வறுமை வந்து சேர்ந்தது. தேன் கலந்த பாலினைப் பொற் கிண்ணத்தில் ஊற்றிச் செவிலித்தாய் வற்புறுத்திக் குடிக்கச் செய்யவும், அதனை மறுத்து ஓடிஓடித் தன் காலில்

இருந்த முத்துப்பரல் இட்ட பொற்சிலம்பு ஒலிக்கச் செவிலியர் கையில் பிடிபடாது அவள் தத்தித் தத்தி நடந்து நெளிந்து ஓடிய பெண் அவள். அன்புள்ளம் கொண்ட செவிலியர் இவளுக்குப் பாலை ஊட்ட முடியவில்லையே என்று பரிதவித்து நின்ற காட்சி, இவள் வாழ்வில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி. ஆனால் அந்தக் காலம் கழிந்துஒழிந்தது. இப்பொழுதோ மாறுபட்ட காட்சி அவளுடைய வாழ்வில் அரங்கேறுகின்றது. உண்ண உணவு இன்றி அவள் வாழ்க்கையில் அவலம் வந்து சேருகின்றது. அந்தப் பெண்ணின் தந்தை தன்னுடைய மகள் தன் வீட்டில் வாழ்ந்த பெருவாழ்வினை எண்ணிப் பார்த்து நெடுமூச்செறிகிறார். என் மகள் தன் வீட்டில் வாழ்ந்தபொழுது என்னென்ன உணவினை விரும்பி மகிழ்ந்து சுவைத்தாளோ அத்தகைய உணவு வகைகளைப் பக்குவத்தோடு சமைத்து, அதை ஒரு தூக்கில் போட்டு அவள் புகுந்த வீட்டிற்குத் தக்கவர் வழிக் கொடுத்து அனுப்புகிறார். ஆனால் அவருடைய மகளோ இன்று வேறொருவர் வீட்டில் மருமகளாக வாழ்ந்து வருகின்றாள். எனவே தன் தந்தை கொடுத்து அனுப்பிய அந்த கொழுவிய—இனிய சோற்றினை அவள் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை. அவ் உணவு வகைகளை அவள் நெஞ்சாலும் நினைக்கவில்லை. அந்த வகையில் அவள் வாழ்கின்றாள். நீர் செல்லும் போக்கில் வளைந்து வளைந்து உருவாகிக் கிடக்கும் கருமணலைப்போல, வேளைதோறும் உண்பதையும் கைவிட்டு மறந்து, தன் புகுந்த வீட்டின் பொருள் நிலைக்கேற்பத் தன்னைச் சரிசெய்துகொண்டு விளங்குகின்றாள். ஒரு பொழுது உணவைத் துறந்து அதற்கு அடுத்த பொழுது ஏதோ சிறிது உண்டு வாழும் வன்னெஞ்ச வாழ்க்கையை—உறுதிமாறாத வாழ்க்கையைக் கொண்டவளாக அவள் விளங்குகின்றாள்.

"பிரசங் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்
புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்
உண்ணென்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்
முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்துற்று
அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்
பரிமெலிந்து ஒழியப் பந்தர் ஓடி
ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந் தனள்கொல்?
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்
கொடுத்த தந்தை கொழுஞ் சோறு உள்ளாள்
ஒழுகுநீர் நுணங்கறல் போலப்
பொழுது மறுத்து உண்ணுஞ் சிறுமது கையளே" (நற்:110)

இவ்வாறாக, பிறந்த வீட்டின் பெருமையை எண்ணாமல் புகுந்தவீட்டின் சூழலுக்கு ஏற்பத் தன்னை ஆட்படுத்திக்கொண்டு, அதற்கு ஏற்ப வாழுகின்ற பெண்ணின் பெருந்தக்களாகிய ஒருத்தியின் இருவேறு வாழ்க்கை நிலைகளைப் போதனார் எனும் புலவர் நற்றிணைப் பாடல் ஒன்றில் நயமுற விளக்கியுள்ளார். இந்த வாழ்வுநிலை பெண்களால் எண்ணிப் பின்பற்றப் பட்டால் வளமையிலும் வளத்திலும் வாழ்வில் இயைந்து வாழும் மனப்பக்குவமும் கொண்டு வாழலாம். அம் மனநிலையே அரியதொரு வாழ்விற்கு உரிய ஒரு பாடமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை"
"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்தாயினும் இல்"

என்ற திருக்குறள்களையும் ஈண்டு நீள நினைந்து நோக்கத்தக்கனவாகும்.

## 4. வாழும் முறைமை

'பாட்டுக்கொரு புலவன்' என்று நாட்டு மக்களால் நலமுறப் பேசப்பெறும் மகாகவி பாரதி தன் பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்திடவேண்டும் என்று சொன்னார். இந்த உலகில் வாழும் முறைமையினைத் தான் இயற்றிய பாப்பாப் பாட்டில் எடுத்துமொழிந்தார் நெடிய பாட்டாய் இருக்கின்ற அந்தப் பாட்டில் அமைந் துள்ள ஒரு பாட்டு, வாழும் நெறியினை—அறநெறியினை இனிமையுற எடுத்து மொழிவதாக அமைந்துள்ளது.

"உயிர்க ளிடத்திலன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடையநெஞ்சு வேணும்—இது
வாழு முறைமையடி பாப்பா"

என்று குறிப்பிட்டார். இந்தப் பாட்டைச் சற்று ஆழ நினைந்துப் பார்ப்போம்.

முதலாவதாக, பாரதி குறிப்பிடுவது 'உயிர்களிடத்தில் அன்பு வேணும்' என்பதாகும். இந்த உலகே ஒரு குடும்பம் என்று வாழ்வது தமிழ்ப் பண்பாடு. ஈராயிரம் ஆண்டு களாக இடையறாது உயிர்த்துவரும் தமிழ்ப் பண்பாட்டின் தலைஊற்றாக உலக உயிர்கள் அனைத்தையும் ஒன்றாக நேசிக்கும் உயிர் பண்பினைக் குறிப்பிடலாம். புன்னை மரத்தை, தன் உடன்பிறந்த சகோதரியாக எண்ணிய ஒரு பெண்ணின் மனம் சங்கப்பாடல் ஒன்றில் சாற்றப் படுகின்றது.

''காக்கை, குருவி யெங்கள் ஜாதி—நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க, நோக் கக்களி யாட்டம்''

என்ற பாடலில் காக்கை, குருவி தன்னுடைய இனம் என்று பாரதி குறிப்பிடுவதோடு, கடலும், மலையும்கூட தன்னுடைய உறவினர்கள் என்றும் குறிப்பிடக் காணலாம்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்"

எனும் கணியன் பூங்குன்றனாரின் கருத்தும் இங்கு நினைக்கத்தக்கதாகும். மனிதர்களன்றி, மரம், செடி, கொடி, பறவைகள், விலங்குகள் முதலியவற்றைக்கூடத் தம் உயிர்போல் எண்ணி வாழுகின்ற இனம் தமிழ் இனம் என்பதனைப் பழந்தமிழ் இலக்கியங்கள் தெள்ளெனத் தெளிவுபடுத்தியுள்ளன.

இரண்டாவதாக, 'தெய்வம் உண்மை என்று தான் அறிதல் வேணும்' என்று பாரதி முழங்குகின்றார். தெய்வம் உண்டென்று இரு; ஒன்றென்று இரு' என்று பெரியோர் கூறுவர். 'ஒன்றே குலம். 'ஒருவனே தேவன் 'இதை நன்றே நினைமின்' என்று தவயோகியாம் திருமூலர் கூறுவர். தெய்வ நம்பிக்கை ஒரு மனிதனை நன்னெறியில் செலுத்தும் ஆற்றல் வாய்ந்ததாகும். பல்வேறு சமயத்தவர்கள், பல்வேறு வகையில் இறைவனை வெவ்வேறு பெயர் சொல்லி அழைத்தாலும் இப் பெயர்களால் அழைக்கப் பெறுகின்ற தெய்வம் ஒன்றேயாகும். எனவே, அந்த மெய்ப் பொருளை—உண்மைப் பொருளை—உயிர்ப் பொருளை—பேரருட் பிழம்பாம் அக் கடவுளை எல்லோரும் வணங்கிடுதல் வேண்டும். கதிரவன் தன்னுடைய ஒளிக் கற்றைகளால் இறைவனை வணங்குகின்றான். பறவைகள் இன்னிசை எழுப்பி வணங்குகின்றன. மரங்கள் பூக்களை இட்டு வழிபடுகின்றன. ஐம்பூதங்கள் தத்தம் தொழில்களைத் தவறாதாற்றித் துதிக்கின்றன. அலைகடல் தன் அரிய முழக்கத்தால் கடவுளை வணங்குகின்றது. அவ்வாறு இருக்க மனித மனம் கடவுளை வணங்கித் துதிக்க வேண்டும் என்று வற்புறுத்துகின்றார் மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்கள்.

''கதிரவன் கிரணக் கையால் கடவுளைத் தொழுவான்
புட்கள் கதியொடும் ஆடிப்பாடித் துதிசெய்யும்
தருக்களெல்லாம் பொதியலர் தூவிப் போற்றும்
பூதந்தன் தொழில் செய்தேத்தும்
அலைகடல் ஒலியால் வாழ்த்தும்
அகமே நீ வாழ்த்தா தென்னே!''

மூன்றாவதாக 'வைரமுடைய நெஞ்சு வேணும்' என்கிறார் பாரதியார். ஆங்கிலத்தில் "Will power" என்று சொல்லப்படுவது இதுவேயாகும். ஒரு முடிவிற்கு வருவதற்கு முன் மனம், அந்தச் செயலினுடைய சாதக பாதகங்களை எண்ணிப்பார்க்கவேண்டும். அவ்வாறு தீர எண்ணி ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், பின்னர் அதைப்பற்றி மேலும் எண்ணிக் கொண்டிருக்கக்கூடாது. ஓர் உறுதியான மனம் படைத்தால்தான் செயலிலே வெற்றிபெறமுடியும். இதனையே, பாரதியார் பிறிதோர் இடத்தில்,

"நல்லவே எண்ணவேண்டும்''

என்றும்,

''திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
''தெளிந்த நல் அறிவு வேண்டும்''

என்றும், குறிப்பிட்டுள்ளார். எனவே, நெஞ்சில் உறுதி கொண்டால், அந்த உறுதியுடன் செயலாற்றினால் வெற்றி உறுதி என்பது இதன்வழிப் புலப்படுகின்றது.

உயிர்களிடத்தில் அன்பு வேண்டுமென்றும், தெய்வம் உண்மை என்று தான் அறிதல் வேண்டும் என்றும், வைரமுடைய நெஞ்சு வேண்டும் என்றும் இதையே வாழ்வின் முறைமை என்றும் பாரதியார் பாப்பாக்களுக்குப் பாப்பாப் பாட்டில் கூறியுள்ளார். இவ் அறிவுரைகள் மனித சமுதாயத்திற்கே பொதுமையானவை என்று உணரலாம்.

# 11. விவேகானந்தர் சிந்தனைகள்

## I

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்; இதை நன்றே நினைமின்" என்பது தவயோகியாம் திருமூலர் வாக்கு. அவருக்குப் பன்னெடுங் காலத்திற்கு முன்னே கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்று கூறி உலகம் அனைத்தையும் ஒரு குடும்ப மாகக் கண்டார். இந்த மண்ணிற் பிறந்த ஆன்றோர் களும் சான்றோர்களும் வழிவழியாக இக் கருத்தினையே வலியுறுத்திவந்தனர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் சமய வளர்ச்சியில் கருத்தூன்றியவர்களாக இருந்தாலும் சாதிச் சார்பினை அவர்கள் விளைவிக்கவில்லை. "சாதியெனும் குழியிற் அல்லற்பட்டுத் தடுமாறும் ஆகமிலி நாயேன்" என்றும்கூட அருளாளர் ஒருவர் கசிந்துருகி நின்றார்.

சென்ற நூற்றாண்டிற் பிறந்து இந்த நூற்றாண்டில் நூற்றாண்டு விழா கண்டு கொண்டிருக்கும் மகாகவி பாரதியாரும் "சாதிச் சண்டைகள் வேண்டாம்; அன்பு தன்னிற் செழித்திடும் வையம்" என்று பாடினார். மேலும் அவர், "வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால் மானிடர் வேற்றுமை இல்லை" என்று பாடினார்.

இவ்வாறு தொடர்ந்து அருளாளர்களும் கவிஞர் பெருமக்களும் "சாதி இல்லை; சாதி இல்லை; மக்கள் அனைவரும் ஒன்றே; மனித சமுதாயம் அனைத்தும் ஒரு குடும்பமே" என்று காலந்தோறும் கூறிவந்தாலும் இந்தச்

சாதிச் சழக்குகள் இந்த மண்ணில் நிலையாக இருந்து கொண்டே தான் வருகின்றன.

இந்நிலையினைக் கண்டார் விவேகானந்தர். உலக மலை உச்சியில் இந்தியாவின் ஞான விளக்கை நலமுற ஏற்றிவைத்த தீரர் அல்லவா அவர்; எனவே நரேந்திரர் என்னும் பிள்ளைத் திருப்பெயர் பூண்டு கல்வியில் வல்லவராய், யாக்கையை உறுதி செய்து கொண்ட வாழ்ந்த உள்ளத்தவராய் விளங்கிய அவரின் இளமைக்கால வாழ்வு இன, சாதி, சமய பேதமற்ற வாழ்வுக்கு ஓர் எடுத்துக் காட்டாய்த் துலங்கியது.

கங்கை யாற்றங்கரையிலே காளிகட்டத்திலே இப் போதைய கல்கத்தாவில் விசுவநாத தத்தர் என்னும் வழக்கறிஞர்க்கும் புவனேசுவரி அம்மையாரிக்கும் 1863 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் பன்னிரண்டாம் தேதி மகவாகப் பிறந்த நரேந்திரர் சின்னஞ்சிறு வயதிலேயே மனிதனிடம் அமைந்திருக்கிற சின்னஞ்சிறு வேற்றுமைகளுக்கெல்லாம் இடந்தரவில்லை.

விவேகானந்தரின் தந்தையாம் விசுவநாத தத்தர் ஒரு வழக்கறிஞரானபடியினால் அவரிடம் வழக்குகள் தரப் பல்வேறு சாதியைச் சார்ந்த மக்கள் வந்துகொண்டிந் தனர். விவேகானந்தரின் வீட்டில் அந்தந்த சாதியாரின் உயர்வு தாழ்வுகளுக்கு ஏற்றபடி உணவு முதலியனவும் உபசாரம் முதலியனவும் பற்பல முறைகளில் வழங்கப் பட்டன. ஒருவர் வீட்டிற்கு வெளியே உபசரிக்கப்பட்டார்; ஒருவர் ஆளோடியில், (வெராந்தா) விசாரிக்கப்பட்டார். சிலருக்கு வரவேற்பறைகளில் விருந்து தரப்பட்டது. சிலருக்கு உண்ணும்சாலையில் உணவு பரிமாறப்பட்டது. சிலருக்குச் சமையல்கட்டு வரையிலும்கூட இடம் அனுமதிக்கப்பட்டது.

இந்தக் காட்சிகள் கள்ளமறியாத பிள்ளைப் பருவத்திலே சிறுவன் நரேந்தரின் மனத்தில் பெருத்த வினாக்குறிகளாக வெடித்தன. ஒருவன் மற்றொருவனோடிருந்து ஏன் உண்ணக்கூடாது? அவ்வாறு இருவேறு சாதியைச் சார்ந்த இருவரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டால் என்ன நேரிடும்? அவ்வாறு வெவ்வேறு சாதியைச் சார்ந்த இருவர்க்கும் ஒன்றாகத் தம் வீட்டில் உட்கார வைத்து உணவு பரிமாறினால் உடனே தன்னுடைய வீடு கீழே விழுந்து தரைமட்டும் ஆகிவிடுமா? அல்லது அவ்வாறு தம் வீட்டில் ஒன்றாக உட்கார்ந்து உண்ணும் இருவரும் உடனே மாண்டுபோய் விடுவார்களா? என்றெல்லாம் உலகில் ஞானச் சுடர் விளக்கேற்றிய தவச்சிரேட்டராம் விவேகானந்தரின் நெஞ்சம் சிந்தித்தது. இதற்கு விடை காண முடியாமல் அவர் பிஞ்சு உள்ளம் பேதலித்தது. ஆனாலும் அவருக்கு மட்டும் நல்ல தெளிவு இருந்தது. தம் வீட்டார் எப்படி நடந்துகொண்டாலும் சரி, தம்மைப் பொறுத்தவரையில் அத்தகைய வேற்றுமைகளையெல்லாம் கடைப்பிடிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தார். அவ்வாறு எந்த வகை நீதியும் நியாயமும் இருப்பதாக அவர் எண்ணவில்லை.

எனவே எல்லாச் சாதி மக்களிடமிருந்தும் தின்பண்டங்களை விரும்பி வாங்கி உண்டு மகிழ்ந்தார். அப்போது அவர் எண்ணினார்: ''இவ்வாறு நான் பல்வேறு சாதியைச் சேர்ந்த மக்களிடமிருந்து தின்பண்டங்களை வாங்கி உண்டமையால் எனக்குச் சாவு ஏதும் வரவில்லையே; அதன் விளைவாக உலகமும் அழிந்து போய்விடவில்லையே! அவை அவை இருந்த இடத்தில் அப்படி அப்படியேதானே இருக்கின்றன. அப்படியிருக்கச் சாதியைப் பற்றிய இவ்வளவு தடபுடல்கள் ஏன்? எதற்காக

மேற்கொள்ளப்படுகின்றன?'' என்றெல்லாம் வினாக்கள் கேட்டுக்கொண்டார்.

சிறுவன் நரேந்திரன் உள்ளத்திலேயே தெளிவு பிறந்தது. திருவள்ளுவர் பெருமான்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
**செய்தொழில் வேற்றுமை யான்**

—குறள் 972

என்று கூறியபடி, இறைவன் படைப்பில் மனிதர் அனைவரும் ஒன்றே; வாழும் நெறியாலேயே ஒவ்வொருவன் உயர்வதும் தாழ்வதும் அமைகின்றனவாதலால் விவேகானந்தர் நெஞ்சமும் அனைவரையும் ஒன்றாகப் பார்த்து நேசிக்கும் அன்பால் நிறைந்தது. எனவேதான் அவர் மந்திரச் சொல் உலகை ஈர்த்தது அமெரிக்கப் பெரு நாட்டில் நடைபெற்ற பல்வேறு சமயங்களின் மாநாட்டில் (Parliment of Religious) பல்வேறு சமயங்களைச் சார்ந்தவர்கள், பல்வேறு இனத்திற்குச் சொந்தக் காரர்கள், பல்வேறு மொழி பேசுவோர், பல்வேறு நடையுடை பாவனைகள் உடையோர் கலந்துகொண்டனர். இவ் அனைவரும் விவேகானந்தரின் ஆணித்தரமான அருள் மொழியை ஆர்வத்தோடு செவிமடுத்துக் கேட்டனர். உலகனைத்தையும் தழுவிய உயர்ந்த பேச்சாக விவேகானந்தரின் வீரவுரை அமைந்தது. இந்தியப் பெரு நாட்டின் ஆன்மீக ஞான விளக்கின் ஒளியினை உலகோர் விவேகானந்தரின் உரைகளின் வழியே கண்டனர். கிழக்கிற்கும் மேற்கிற்கும் உறவுப்பாலம் எழுந்தது.

விவேகானந்தரின் பிஞ்சு நெஞ்சிலே எழுந்த பெருமொழி சாதி வேற்றுமைகள் இல்லையென்பது. இந்நிலை இனியாவது பாரதப் பெரு நாடெங்கும் பரவ வேண்டும்.

# II

சுவாமி விவேகானந்தர் சென்னை மாநகரில் ஒரு முறை நிகழ்த்திய சொற்பொழிவு உளங்கொளத் தக்கது. நாட்டுப்பற்றினையும், ஏழ்மை நிலையைப் போக்கும் திருப்பணியின் இன்றியமையாமையினையும் அஃது ஒருங்கே உணர்த்தி நிற்கிறது அவர் கூறுகிறார் :

“நாட்டுப் பற்றைப் பலர் பேசுகிறார்கள். எனக்கும் அதில் பற்று இருப்பதோடு அதைப்பற்றிய எனது தனி கொள்கையும் ஒன்று உண்டு. முதலாவதாக உள்ளம் கசிந்துருகி உணரவேண்டும். உள்ளக் கசிவினின்றும் அருள் சுரக்கிறது. முடியவே முடியாத—அறவே ஆக்க முடியாத செயல்களையும் செய்து முடிப்பது அன்பு ஒன்றே. உலகத் துள்ளே அறிதற்கு அரிதாய் இருப்பவைகளை அறிவிப்பது அன்பே ஆகும். ஆதலால் நாட்டின் சீர்கேட்டைச் செப்பனிட விரும்புகிறவர்களே! நாட்டின் மீது நல்லன்பு பொழிபவர்களே! நைந்து உருகுங்கள்! காதலாகிக் கசிந்து உருகுங்கள்! உள்ளுணர்வு என்பது உங்கள் மாட்டு உளதா! தேவர்கள்! முனிவர்களின் சந்ததிகளான கோடானு கோடி மக்கள் விலங்குகளோடு ஒப்பிடுவதற்கான இழி நிலையிலே நின்று வீழ்ந்து கிடப்பது பற்றி உங்களது உள்ளம் பதை பதைக்கின்றதா? நெக்கு நெக்கு உருகுகின்றதா? ‘கனியும் கிழங்கும் மானியங்களும் கணக்கின்றிக் கிடக்கும்’ பெருவளம் மிக்க நாட்டிலே பாமரர்கள் பஞ்சையர்களாய், பராரிகளாய்ப் பல்லாண்டு களாகப் பசிப்பிணியால் வாடிக் கிடப்பதைக் கண்டு, உணர்ந்து உங்களது உள்ளம் உடை கின்றதா? கல்லாமை என்னும் கார்மேகம் மாந்தரது மனத்தைக் கவர்ந்திருப்பது கண்டு நீங்கள் கவலையுறு கின்றீர்களா? இந்த நாட்டின் நிலைகுலைவு உங்களை

வருத்துகின்றதா? உறக்கமறச் செய்கின்றதா? இந்த எண்ணம் உங்கள் இரத்தத்திலே ஊறி, இதயத்திலே ஊடுருவிப் பாய்ந்து உங்களது தன்மையை அறவே மாற்றிவிட்டதா? இதை நினைந்து நினைந்து நீங்கள் பித்தர்கள் போல, பேயர்கள்போல ஆகிவிட்டீர்களா? நாட்டின் துக்க நிலையைப் பற்றிய கவலையாலே பீடிக்கப்பட்டமையால் நீங்கள் பேரையும் புகழையும், உற்றார் உறவினரையும், உடலையும் பொருளையும் ஆவியையும் அறவே மறந்து விட்டீர்களா? இந்த நிலை உங்களுக்கு வந்துவிட்டதா? அப்படியானால் இதுவே இந்நாட்டுப் பற்றினைப் பெறுவதற்குரிய முதற்படியாகும்."

இவ்வாறு பிறந்த தாய்நாட்டுப் பற்று வளர்வதற்குரிய வழிகளை விவேகானந்தர் விளக்கமாக எடுத்துரைத்தார்.

அவர் மணிமொழியினை நோக்குவோம். இந்தத் திருநாட்டில் இல்லை என்ற குறைக்கே இடமில்லாமல் இயற்கை அன்னை வற்றாத வளங்களை வாரி வழங்கியிருக்கின்றாள். ஆனால் அந்த வளங்களை எல்லாம் உடல் பலம் படைத்தவன், அறிவு பலம் படைத்தவன் சாதி பலம் படைத்தவன் எனப் பலரும் பங்கு போட்டுக் கொண்டு விட்டனர். எனவே சமுதாயத்தின் கணிசமான பெரும் பகுதியினர் பசி பட்டினி என்று அல்லற்பட்டு ஆற்றாது வாழ்வதும், அதே சமயத்தில் சமுதாயத்தில் உண்டு கொழுத்து வாழ்வதுமான ஒரு பகுதி செல்வாக்கோடு இருப்பதும் இயற்கையாயிற்று. இந்த நாடு ஒற்றுமை குலைந்து சீர்கேடு ஏற்பட்டு சின்னாபின்னமாவதற்கு இந்நிலை வழிவகுக்கும்

என்பதைக் கண்டார் விவேகானந்தர். எனவே பசித்திருக்கும் ஏழையைக் கண்டு இரங்குவதே மனித குல உயர்வுக்கு எடுத்து வைக்கும் முதற்படியாக அமையும் என்று கண்டார் விவேகானந்தர். "பசியறாத வெற்றுடம் பினரைக் கண்டு உளம் பதைத்தேன்'' என்று அருட் பிரகாச வள்ளலார் கூறுவதுபோல, விவேகானந்தரும் "கடவுள் ஏழைகளுக்குக் கஞ்சியின் வடிவத்திலும் ரொட்டி யின் வடிவத்திலும் வருவார்" என்று, சொன்னார். பசித் திருக்கும் வயிறுடையோரிடம் கடவுளைப்பற்றிய கருத்து களைக் கூறுவதிற் பயனில்லை என்று கண்டு தெளிந்தார். எனவேதான் முதலில் ஏழையின் வயிற்றுக்குச் சோறிட்டுப் பசிப்பிணியை அகற்றுவதே நாட்டுப்பற்றுக்கு நலமுறு அடையாளம் என்று மொழிந்தார்.

'உண்டி முதற்றே உலகு' என்று கண்டு 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்று நம் முன்னோர்கள் கண்டனர். மகாகவி பாரதியாரும்,

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்
இங்கு வாழும் மனிதருக்கு எல்லாம்
பயிற்றிப் பலகல்வி தந்து
இந்தப்பாரை உயிர்த்திடவேண்டும்

என்றார்.

அந்த முறையில்தான் விவேகானந்தரும் ஒரு நாட்டில் ஒரு சிறு பகுதியினர் உல்லாசமாக உண்டு களிக்கவும் பெரும் பகுதியினர் பாமரராய், பசித்தவராய் வாழ்வதும் பாவம் என்று கருதினார். ஒரு பகுதியினர் பசியினால் வாடி வருந்திக்கொண்டிருக்கும் நிலையில் நாட்டுப்பற்று என்றும், நாட்டு முன்னேற்றம் என்றும் கூப்பாடு போடுவ தால் பயனில்லை என்று கண்டார். எனவே வசதி மிக்க

வர்கள் நெஞ்சில் ஈரக்கசிவு ஏற்பட வேண்டும் என்று விரும்பினார். அவர்கள் உள்ளத்தில் தங்களைச் சுற்றியுள்ள மக்களிற் பெரும்பகுதியினர் உண்ண உணவின்றி வாடி மெலிகிறார்களே என்ற வருத்த உணர்ச்சி மேலிட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

எனவே புதிய பாரதம் பொருள் மிக்கோர், பொருள் அற்றோர் எனும் இரு நிலைகளில் ஆபத்தான ஒரு சூழ்நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கக் கூடாது என்று வற்புறுத்தினார்.

எனவேதான் பிறர் நிலையைக் கண்டு உளம் உருகும் அன்பு நிலையே அது முதிர்ந்த அருள்நிலையே நாட்டுப் பற்றின் முதற்படியாக அமையும் என உறுதியாக உரைத்தார். 'அன்பின் வழியது உயிர்நிலை' என்னும் வள்ளுவர் வாக்கிற்கு விளக்கம் கூறிய விவேகியாக விவேகானந்தர் துலங்குகின்றார்.

# III

விவேகானந்தர் முற்றுந் துறந்த ஒரு துறவியாக வாழ்ந்தவரானாலும் அவர்தம் சமுதாயப்பற்று கங்குகரையற்றதாகும். பகவான் இராமகிருட்டிண பரமஹம்சர் அவரைத் தம் பிள்ளைப்போலவே பாவித்து நடத்தினார். அவரைச் சில நாட்கள் பார்க்கவில்லையென்றாலுங்கூடக் கவலை கொண்டார். கன்றைக் கண்ட தாய்ப்பசு போல இராமகிருட்டிணர் உளம் கரைந்தார். அந்த அளவிற்கு இராமகிருட்டிணரின் அன்பைப் பெற்றிருந்த விவேகானந்தர் உலகம் நன்கறிந்த உண்மைத் துறவி

யானாலும், அவர் நலிந்த சமுதாயத்து மக்கள்மீது கொண்ட பற்றைத் துறக்காமல் வாழ்ந்தார். கடவுள் தொண்டு, நாட்டுத் தொண்டு, மக்கள் தொண்டு எனத் தொண்டே வாழ்க்கை என வாழ்ந்தவர் விவேகானந்தர். "மக்களுக்குச் செய்யும் தொண்டே மகேசனுக்குச் செய்யும் தொண்டு'' என்பதும், "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்பதும் இன்று நாம் கேட்கும் பொருள் மொழிகள்.

நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்றீயில்
படமாடக் கோயில் பகவற்கு தாமே

என்னும் திருமூலர் கருத்துப்படி, தரித்திர நாராயணர்களுக்கு (இல்லையென்று அலமந்து வந்தவர்க்கு) இல்லையென்று சொல்லாமல் ஏதோ வழங்கி அவர்கள் உயிரைக் காப்பவர்களுக்குத் தெய்வம் துணைநிற்கும் என்று கண்டார் விவேகானந்தர். எனவே சொன்னார்:

"நகரத்திலே இடர்ப்படும் மக்களுக்கு சமூக சேவை செய்வதிலேயே எனக்கு விருப்பம். ஏழை மக்கள்தான் நான் வணங்கும் கடவுள். அவர்களுக்குக் கல்வி இல்லை; முன்னேற்றம் அடைவது எப்படி என்பதே அவர்களுக்குத் தெரியாது. அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களை யார்தான் செய்துவைப்பார்? வீடு வீடாகச் சென்று கல்வியறிவைப் பரப்ப முன்வாருங்கள். இடையறாது ஏழை மக்களைப் பற்றியே எண்ணுங்கள்; அவர்களுக்காக உழையுங்கள்; கடவுளை வணங்குங்கள். இங்ஙனம் செய்யின் இறைவன் உங்களுக்கு வழிகாட்டி வைப்பான். ஏழைகளுக்காகவென்று யார் உள்ளம் கசிந்துருகிக் கண்ணீர் சொரிகின்றார்களோ அவர்களே மகாத்மாக்கள். ஏனையவர்களெல்லாம் துராத்மாக்களேயாவர். ஏழை

களை வருத்தி வாட்டிச் சம்பாதித்த பணத்தைக் கொண்டு கல்வி கற்றபின் அவர்களுக்குப் பிரதியுபகாரம் ஏதேனும் செய்யாத ஒவ்வொருவனையும் துரோகி என்றுதான் சொல்லவேண்டும். பாமரர்களை வதைத்து ஈட்டிய செல்வத்தைக் கொண்டு பெருமித வாழ்வு வாழ்ந்து, உடலை அலங்கரித்துப் பிலுக்கித் திரிபவர்கள் எல்லாரும் வஞ்சகம் செறிந்த பாதகர்களேயாவர்".

மேலும் அவர் சொல்லுகிறார்: "அறிவிலிகள், வறியர், கல்லாதவர், சக்கிலியர்கள், பறையர்கள் எனப்படுவோர் எல்லோரும் உனது உற்றார், உறவினர், உடன்பிறந்தார் என்பதை மறவாதே. அஞ்சுதல் அறியா நெஞ்சம் படைத்தோய்; ஆண்மை கொள்; துணிவு கொள்; நீ ஓர் இந்தியன் என்பதைப் பற்றிப் பெருமை பாராட்டு. "நான் ஓர் இந்தியன். ஒவ்வோர் இந்தியனும் எனது சகோதரன்" என்று பெருமையுடன் பகர்வாயாக. 'கல்லாத இந்தியன், தரித்திர இந்தியன், தீண்டத்தகாத இந்தியன், பிராம்மண இந்தியன், பறைய இந்தியன் என்று எண்ணாதே. 'எல்லா இந்தியர்களும் எனது சகோதரர்களே' என்று சொல். அவர் கள் போன்று உடுக்கக் கந்தையொன்றே உனக்குப் போதுமானது. 'இந்தியன் எனது சகோதரன், இந்தியனே எனது உயிர்; இந்தியாவின் தேவதைகளே நான் வணங்கும் கடவுள்; பிள்ளைப்பருவத்தில் எனக்குத் தொட்டிலாயிருப்பதும், யவனத்தில் இன்பம் துய்ப்பதற்கேற்ற நந்தவனமாயிருப்பதும் எனது முதுமைக்கேற்ற சுவர்க்கமாயிருப்பதும் இந்திய தேசமே. நாட்டுக்கு நலன் தருவது எதுவோ அதுதான் நான் வேண்டுவதும்' என்று உரத்த குரலிலே முரசு அறை. 'அகிலாண்ட நாயகியே; ஆண்மை எனக்கு அளித்தருள்; வலிவு பிறப்பிப்பவளே! எனது மெலிவைக் களைந்திடு; தகர்வைத் தகர்த்திடு; உறுதியை ஓம்பி,

என்னை ஆண் மகனாக ஆக்கிடு' என்று அல்லும் பகலும் வழுத்தி நீ வேண்டிடுவாயாக."

இவ்வாறு விவேகானந்தர் ஒளி படைத்த கண்ணினராக ஒளிர்வதற்கு, உறுதிகொண்ட நெஞ்சினராக உலா வருவதற்கு அன்னை அம்பிகையின் அருளைப் பரவி நிற்கிறார்.

பாமரர்கள் பசியாற உண்டு, கல்வி கற்று, வளமான வாழ்வு வாழ வேண்டுமென்றும், எல்லோரும் இந்தியத் தாயின் திருப்புதல்வர்கள் என்னும் எண்ணம் உண்டாக வேண்டும் என்றும் விவேகானந்தர் விளங்க உரைக்கின்றார்.

எனவே வயிற்றுக்குச் சோறும், நெஞ்சுக்குக் கல்வியும், வாழ்விற்கு ஒற்றுமையும் ஒருங்கே தேவை என்பதனையும் இவை அனைத்தையும் அளிக்கும் ஆற்றல் ஆண்டவனுக்கு உண்டு என்பதனையும் விவேகானந்தர் விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

அவர் சாரமாகக் கூறும் அறவுரையினை, மணிமொழியினை நாம் ஒருநாளும் மறத்தலாகாது.

"என் மகனே! உறுதியாக நில். பிறர் உதவியை எதிர்பாராதே. வேறு மனிதர்களின் உதவியைக் காட்டிலும் ஆண்டவனுடைய உதவி எவ்வளவோ பெரிதல்லவா? பரிசுத்தனாயிரு, பகவானை நம்பு, அவரை நம்பியுள்ள வரை, நீ நேர்வழியில் செல்கிறாய் என்று பொருள். உன்னை எதுவும் எதிர்த்து நிற்க முடியாது."

ஆகவே விவேகானந்தருடைய ஆற்றல் வாய்ந்த ஆன்மீக மணிமொழிகளை நாம் மனங்கொண்டு செயல் திட்டம் வகுத்து முன்னேறுவோமாயின் வீடும் நாடும்

விளக்கமுறும் என்பது திண்ணம். 'கடையவனுக்கும் கடைத்தேற்றம்' என்பதுபோலச் 'சேரவாரும் செகத்தீரே' என அழைத்து ஆன்மீகச் சங்கினை முழங்குகின்றார் விவேகானந்தர்.

வலியோர் எளியோரை வதைத்து வாழ்வதான வாழ்வு முறை இன்னும் தொலைந்தபாடில்லை; பசி என்ற கூக்குரல் ஒழிந்தபாடில்லை; வறுமை தீர்ந்தபாடில்லை. இவ் அனைத்திற்கும் மாற்று என்ன? அதுவே விவேகானந்தரின் வீரவுரையை, ஆன்மீகவுரையை, அறவுரையை மக்கட் சமுதாயம் ஏற்றுப் போற்றிப் பின்பற்றி நடந்தால் இல்லாமை நீங்கி இனிது வாழலாம்.

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. தமிழ் இலக்கிய வரலாறு
2. உருவும் திருவும்
3. கட்டுரை வளம்
4. காரும் தேரும்
5. மனோன்மணீயம் (பதிப்பு)
6. முருகன் காட்சி
7. வாழையடி வாழை
8. இலக்கிய அணிகள்
9. இலக்கியக் காட்சிகள்
10. நல்லோர் நல்லுரை
11. நெஞ்சின் நினைவுகள்
12. மலர் காட்டும் வாழ்க்கை
13. சான்றோர் தமிழ்
14. சங்க கால மகளிர்
15. ஆண்டாள்
16. சேரநாட்டுச் செந்தமிழ் இலக்கியங்கள்
17. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்
18. அறவோர் மு.வ.
19. பெருந்தகை மு. வ.
20. கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்
21. திருவெம்பாவை விளக்கம்

22. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்
23. சங்க இலக்கியம்—சில பார்வைகள்
24. பாரதியும் பாரதிதாசனும்
25. வாழ்வியல் நெறிகள்
26. பாவைப் பாட்டு
27. சமயந்தொறும் நின்ற தையலாள்
28. அலை தந்த ஆறுதல்
29. பாட்டும் தொகையும்-ஓர் அறிமுகம்
30. இலக்கிய ஏந்தல்கள்
31. Papers in Tamil Literature
32. The Status of women in Tamilnadu during the Sangam Age
33. A Study of the Literature of the Chera Country
34. A Critical Study of Kuruntokai



**சி. பா.**

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். கண்டாச்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப்பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ.ஆனர்சு. அங்கு ! முதல் வகுப்பில் தேறிய முதல்வர், 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963-ல் எம்.லிட்., பட்டமும், 'சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர் (பிஎச்.டி.) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள், நல்ல நடை கொண்ட இந்த நாகரீகர் பேர்சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில் ! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாள ராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னால் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர், தற்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தருமாவார்.

முப்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருத் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று ! அண்மையில் வந்துள்ள அணி கலன். சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல். 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உரூபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள் : புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற்புலவர் (தமிழ்நாட்டு நல்வழி நிலையம்) சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி ; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி ! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி ! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி !

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு !

—மா.செ.